# இது நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 | ஏப்ரல், 01.2015 | வியூகம்-08 | பக்கங்கள்-24 | விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com




# உலகை ஏமாற்ற பறித்த காணிகளை கையளிக்கும் ஒரு திருவிழா

தேசத்தின் உண்மைக்குரல்

# சுன்னாகம் பிரதேச நிலத்தடி நீரைப் பயன்படுத்தவேண்டாம்

-தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி-




வலிகாமத்தின் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை தொடர்பாக வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நம்பகரமான அறிக்கை கிடைக்கும் வரை கழிவு எண்ணெய் கலந்ததாகக் கருதப்படும் நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்தவேண்டாம் என்றும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நீரில் கழிவு எண்ணெய் கலந்து நீர் மாசடைந்த பிரச்சினையை வடமாகாண சபையின் சில அமைச்சர்கள் மூடி மறைக்க முயல்கின்றனர் என்று குற்றம் சாட்டியுள்ள மேற்படி கட்சி, பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு உள்ளூராட்சி சபைகள் ஊடாக விநியோகிக்கப்படும் குடி தண்ணீர் நிறுத்தப்பட்டால் நாங்கள் மக்களுக்கு நீர் விநியோகிப்போம் என்றும் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி. மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையின் நிபுணர் குழுவால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் நீரில் எண்ணெய் கலப்பு இல்லை. மக்கள், குடிநீராகப் பயன்படுத்தலாம் என்று கூறுவது போன்று உள்ளது. ஆனால் மக்களின் வெற்றுக் கண்ணுக்கு எண்ணெய்க் கலப்பு தெரிகின்றது.

இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ள நிலையில் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 80 வீதமான கிணறுகளில் எண்ணெய் கலப்பு உள்ளது என்று கூறப்படுகின்றது. வடக்கு மாகாண சபையின் நிபுணர் குழு அறிக்கையில் எண்ணெய்க் கலப்பு இல்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்விரண்டு அறிக்கைகளின் முடிவுகளும் முரண்பாடாக உள்ளன. பூரணமான ஆய்வு அறிக்கை வரும் வரையில் மக்கள், பாதிக்கப்பட்ட பகுதி கிணற்று நீரை குடிநீராகப் பயன்படுத்தவேண்டாம் என்று அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒரு கிணற்றில் பல்வேறு பகுதிகளில் நீர் மாதிரிகள் பல நாட்களுக்கு எடுக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதன் பின்னரே எந்தவொரு முடிவுக்கும் வரவேண்டும். ஒரு நபர் பருக முடியாத அளவிற்கு நீர் மாசடையவில்லை என்று வடமாகாண சபை நிபுணர் குழு கூறுகின்றது. இந்தக் குழு தமது அறிக்கையை வடமாகாண சபையில் பாரப்படுத்தியிருக்க வேண்டும். அறிக்கை முடிவை முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் மக்களிடம் தெரிவித்திருக்க வேண்டும். இதைவிட்டு நிபுணர்குழு அவசரப்பட்டு அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிட்டது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

## கம்பனிகள் நட்டத்தில் இயங்குகின்றன எனக் கூறுவது பொய்யான கதை

**சட்டத்தரணி இ.தம்பையா**

பெருந்தோட்டக் கம்பனிகள் நட்டத்தில் இயங்குகின்றன என எவராவது கூறுவார்களாயின் அது பொய்யான கதை என்பதை எந்த இடத்திலும் ஆதாரத்துடன் நிரூபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி இ.தம்பையா குறிப்பிட்டார். மலையகத்திலிருந்து வெளிவரும் "சூரியகாந்தி"என்றவாராந்தபத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது

பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கிவருகின்றன. கடந்த இருவருடங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கூறுவதாயின் 20 பெருந்தோட்டக் கம்பனிகளில் 2 கம்பனிகள் தவிர ஏனைய அனைத்துக் கம்பனிகளும் பல பத்தாயிரம் மில்லியன் இலாபத்தை உழைத்துள்ளன. கம்பனிகள் நட்டத்தில் இயங்குமாயின் ஏன் அவர்கள் அதனைத் தொடர்கின்றனர். உண்மையான இலாபத்தை அவர்கள் ஒருபோதும் ஆண்டறிக்கையில் வெளியிடுவதில்லை. விலைகுறைந்துவிட்டது என்பதற்காக முகாமையாளர்களின் சம்பளங்கள் ஒருபோதும் குறைக்கப்படுவதில்லை. ஏனைய தொழிற்துறைகளிலும் குறைக்கப்படுவதில்லை.

கூட்டு ஒப்பந்தம் என்பது தொழிலாளர்களது போராட்டத்தின் விளைவாக தொழிலாளர்களுக்கு தொழில் தருநர்களுடன் பேரம் பேசுவதற்குக் கிடைத்த சட்டரீதியான ஏற்பாடாகும். தொழில் பிணக்கு சட்டத்தில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் நேர்மையாக பேரம்பேசுமாயின் கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்கள் உரிமைகளைச் சிறப்பாக உறுதிசெய்யமுடியும்.

கூட்டு ஒப்பந்தம் மூலம் மாதச்சம்பளத்தையும் சாத்தியமாக்க முடியும். ஏனைய துறைகளுக்கான கூட்டு ஒப்பந்தங்களில் மாதச்சம்பளம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பெருந்தோட்ட அலுவலர்களுக்கும் கூட்டு ஒப்பந்தம் மூலம் மாதச்சம்பளம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குடும்பத்தின் ரூபா 500,000 நிதி உதவியுடன் கல்வி உபகரணங்கள் வழங்கல்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான நிதியுதவியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினூடாக இவ் நிதி உதவி வழங்கப்பட்டது.

நிதி உதவி வழங்கும் நிகழ்வு 28.03.2015 அன்று காலை விசுவமடுவிலும் பிற்பகல் வடமராட்சி கிழக்கு தாழையடியிலும் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகள் செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு நிதி உதவியினை வழங்கினார்.

## ஆர்ப்பாட்டமும், துண்டுப்பிரசுர விநியோகமும்

முன்னிலை சோசலிஷக் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இம்மாதம் 25 ஆம் திகதி தமது கட்சியைச் சேர்ந்த லலித், குகன் எங்கே எனக் கேட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர். யாழ் பஸ் நிலையத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நின்று துண்டுப் பிரசுர விநியோகத்தையும் மேற்கொண்டனர்.

2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி போரின் பாதிப்பினால் அவலப்படும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு குரல்கொடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நின்று செயற்பட்ட போதே லலித்தும், குகனும் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களுக்காகவும், காணாமல் போன தமிழ் மக்களுக்காகவும் இப் போராட்டத்தை நடாத்துவதாக குறிப்பிட்டனர்.

புதிய அரசாங்கம் ஜனநாயகம் தருவதாகக் கூறிக் கொண்டு வந்த போதிலும் இதுவரையிலும் எந்தத் தீர்வையும் தரவில்லை என்றும் தெரிவித்தனர்.

முன்னிலை சோசலிஷக் கட்சி ஜே.வி.பியிலிருந்து பிரிந்து வந்தவர்களினால் உருவாக்கப்பட்ட கட்சியாகும்.

# கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை விக்னேஸ்வரன் ஏற்பது பொருத்தமுடையதல்ல

**வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அனைவரும் தமிழ் இனத்தின் பற்றுறுதிமிக்க விசுவாசிகள் என்றொரு எடுகோள் இருந்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் பொறுப்பேற்பது பொருத்தமுடையது.

ஆனால் தமிழ் இனத்திற்கு இம்மியும் விசுவாசம் இல்லாத - தமது சுயலாபமே முழுவதும் என்ற மனநிலை கொண்டவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருப்பதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை முதல்வர் விக்கினேஸ்வரன் பொறுப்பேற்பது பொருத்தமுடையதல்ல.

அவ்வாறு பொறுப்பேற்பதன் மூலம் விக்கினேஸ்வரனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழிப்படுத்த முடியும் என்று நினைப்பதும் நடைமுறைக்கு சாத்தியமன்று.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மேற்போந்த கோரிக்கை சுயநல மற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலொழுங்கில் உள்ள பிறழ்வுகளின் அவதானிப்பின் அடிப்படையில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இக்கோரிக்கையை காத்திரமான முக்கியத்துவத்தோடு தமிழ் மக்கள் நோக்க வேண்டும்.

ஏனெனில், வடபகுதிக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல்வரைச் சந்திக்க மறுத்தார். இந்த மறுதலிப்போடு யாழ்.வந்த பிரதமர் ரணிலை கரம்கூப்பி வரவேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முண்டியடித்தனர் எனில் நாம் எங்கே போகிறோம்? என்பது புரிகிறதல்லவா!

ஆகையால்தான் கஜேந்திரகுமாரின் கருத்துத் தொடர்பில் தமிழ் மக்கள் கரிசனை கொள்ளவேண்டும் எனக் கூறுகின்றோம்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை முதல்வர் விக்கினேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் என்பதைவிட, தமிழர்களுக்கான ஒருபுதிய அரசியல் தலைமையை உருவாக்க நீதியரசர் முன்வருவதே பொருத்தமும் பெறுமதியுமாக இருக்கும்.

தமிழர்களின் புதிய அரசியல் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய மனம், மொழி, மெய்யால் தமிழ் இனத்தை நேசிப்போர் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தமிழ் பற்றுறுதிகொண்ட புத்திஜீவிகள் இணைந்துகொள்ள வேண்டும். ●

# கௌதமனுக்கு சிறந்த இயக்குனர் விருது




நோர்வே சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் கலந்து கொண்ட எண்ணற்ற குறும்படங்களில் வ.கௌதமன் அவர்கள் இயக்கிய "புத்தாண்டு பரிசு" எனும் குறும்படம் "சிறந்த இயக்குனர்" க்கான விருதினைப் பெற்றுள்ளது.

இதனை மணிவண்ணன், பழ.ஜீவானந்தம் ஆகியோர் இணைந்து தயாரித்து இருந்தார்கள். ஈழத்தில் யுத்தத்தில் நடந்த இனப்படுகொலைகளையும், அதனால் தங்களது தாலிகளை இழந்து நிற்கும் தொண்ணூற்று ஆறாயிரம் விதவைகளையும் சுமந்து தாங்க முடியாத துயரத்தில் நிற்கும் நமது தமிழினம், இதற்கு மேலதிகமாக தாய்த்தமிழகத்திலும் யுத்தமில்லாமல் சத்தமில்லாமல் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மது என்னும் அரக்கனால் இரண்டுலட்சம் பெண்கள் விதவைகளாக நிற்கிறார்கள், கிட்டத்தட்ட நான்குலட்சம் குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதனை சகித்துக்கொள்ள முடியாத கோபத்தினால் தான், நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு "புத்தாண்டுபரிசு" படைப்பின் கரு உருவானது.

"அரசு மக்களுக்கு தரும் பரிசு மது"
"மக்கள் அரசுக்கு தரும் பரிசு உயிர்"
எனும் வரிகள் இப்படத்தில் உயிரோட்டமாக அமைந்துள்ளன.

நோர்வே திரைப்பட விழாக் குழுவின் விருது அறிவிப்பு தெரிந்த கணமே தனது எல்லையில்லா மகிழ்வையும், வாழ்த்தையும் இயக்குனர் கௌதமனுக்கு பழ.நெடுமாறன் ஐயா அவர்கள் தெரிவித்திருந்தார். "அதிர்வுதிரைப்பட்டறை" அலுவலகத்திற்கே நேரில் வந்து, கௌதமனையும், தயாரிப்பாளர் மணிவண்ணனையும் பெருமனதோடு வாழ்த்தினார்.

இவ்விருது தொடர்பில் இயக்குனர் கௌதமன் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் இதுவரை செய்த ஒவ்வொரு படைப்பும் என் தாய்க்கும், தாய்மொழிக்கும் சமமான எனது தமிழீழ தேசிய தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களின் வரலாற்றையும், இதுவரை உலகம் கண்டிராதவீரம் செறிந்த ஈழப்போராட்டத்தையும் பெரும் படைப்புகளாக்க நான் செய்துபார்க்கும் ஒத்திகை படைப்புகளேயாகும்.

பன்னீர்செல்வம், தம்பிபாலமுரளி வர்மன், இசையமைப்பாளர் தாஜ்நூர், ஒலிக்கலவை செய்து தந்த நண்பர் சத்யா, அஜ்மல், என்றும் எங்கள் நினைவுகளில் வாழும் கிஷோர், இப்படைப்பினில் தயாரிப்போடு நாயகனாக நடித்தும் கொடுத்த பழ.ஜீவானந்தம் உட்பட என்னோடு தோள் நின்ற ஒவ்வொரு படைப்பாளியையும் இந்நேரத்தில் நன்றியோடு நினைவு கூர்கின்றேன்.


மேலும் என் வாழ்க்கையின் பெரும் அங்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற எனது உயிர் நண்பர் மணிவண்ணன் அவர்களுக்கும் வெறும் நன்றி என்ற சொல்லை மட்டும் உரித்தாக்க முடியாது.

இந்த விருதினை வழங்கும் நோர்வே சர்வதேச தமிழ் திரைப்பட விழாக்குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். என்னோட விருது பெற உள்ள என் தாய்த்தமிழ் திரைக்கலைஞர்களுக்கு எனது பிரியமான வாழ்த்துகள். எனக்குக் கிடைத்த இந்த விருதினை தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் மற்றும் உலகம் முழுக்க பரந்து வாழ்ந்து கொண்டிருக்கிற எனது உயிருக்கு நிகரான தமிழ் உறவுகள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன் என்றார்.

ஈழத்தமிழ் மக்கள் மீதும், தமிழ் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தின் மீதும் மிகுந்த மதிப்பு வைத்திருக்கும் கௌதமனுக்கு இவ்விருது கிடைத்தமையையிட்டு "இது நம்தேசம்" மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது. அவரது பணி தொடர வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது. ●

# சுன்னி முஸ்லீம்களை பதிலீடு செய்த ஷியா முஸ்லீம்கள்

**அல் ஜசீரா இணையத்தள ஆசிரியர் கே.எஸ். தக்ஷிணாமூர்த்தி**



அமெரிக்க ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட சதாம் ஹுசைனின் பதவி கவிழ்ப்பு ஈராக்கிலிருந்து சுன்னி முஸ்லீம் உயர் குழாத்தை விரட்டுவதாகவே அமைந்தது. அமெரிக்காவின் ஆதரவுடன் ஷியா முஸ்லீம்கள் சுன்னி முஸ்லீம்களை பதிலீடு செய்தார்கள். முன்னாள் பிரதமர் நூரி அல் - மாலிக்கின் கீழான ஷியா அரசாங்கம் சுன்னி முஸ்லீம்களை இரக்கமற்ற முறையில் நடாத்தியது. சதாமின் ஆட்சியின்கீழ் சுன்னிகள் அதிகாரத்தில் இருந்தபோது மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு ஷியாக்கள் பழி தீர்த்தனர் என அல் - ஜசீரா இணையத்தளத்தின் ஆசிரியர் கே.எஸ். தக்ஷிணாமூர்த்தி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது.

சுன்னிகளுக்கு எதிரான தாக்குதல்களை மாலிக் மௌனமாக இருந்து உற்சாகப்படுத்தினார். இதுவே ஐஎஸ் ஐஎஸ் இயக்கத்தின் தோற்றத்திற்குக் காரணமாகியது. இவ் இயக்கத்தின் கணிசமான பிரிவினர் சதாமின் முன்னாள் படைவீரர்களாவர். அமெரிக்க ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து சுன்னிகளை பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கிய இராணுவம் கலைக்கப்பட்டது. இரவோடு இரவாக பெரும் எண்ணிக்கையான ஈராக்கியர்கள் தமது தொழிலையும் பாதுகாப்பையும் இழந்தார்கள்.

ஈராக்கில் அமெரிக்க மேற்பார்வையின் கீழ் புதிய இராணுவம் அமைக்கப்பட்டபோது அதில் சுன்னி முஸ்லீம்களுக்கு இடமிருக்கவில்லை. சிரியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் ஐ.எஸ் ஐ.எஸ் இயக்கத்தின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டது. அங்கு ஷியா சார்பு அதிபர் அஸாத்திற்கு எதிராக சுன்னிகள் கிளர்ந்தெழுந்தனர். அமெரிக்காவும், நேசநாடுகளும் சுன்னிகளுக்கு ஆயுதங்களை வழங்கின. இங்கிருந்த பெரும்பான்மையான கிளர்ச்சிக்காரர்கள் ஐஎஸ் ஐஎஸ் இயக்கத்தில் இணைந்தனர்.

ஈராக் ஆக்கிரமிப்புக்கு சில நாட்கள் கழித்து மோதல்கள் முடிவிற்கு வந்துவிட்டதாக அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஸ்சும் அவரது பரிவாரங்களும் குறுகிய காலத்துக்கு முன்னேயே ஈராக்கில் நிலவரங்களை சரிசெய்துவிட்டு அங்கிருந்து வாபஸ் பெற்றுவிட முடியுமென்று கணக்குப் போட்டார்கள். ஆனால் 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் ஈராக்கில் வழமை நிலை இன்னமும் திரும்பவில்லை. ●



# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றார், போதாக்குறைக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்திருக்கிற அழைப்பு எல்லாம் சேர்ந்து சிங்கக்கொடி காத்த வீரன் சம்பந்தனுக்கு அடிவயிறை கலங்க வைச்சிருக்கிறதாம். முந்தி நேரம் இல்லையெண்டு சொல்லுற ஆள் இப்ப பங்காளிக் கட்சி தலைவர்களை கூப்பிட்டு அடிக்கடி பேசிறாராம். அதிலயும் விக்கியை அடுத்த தலைவராக சொல்லி நடக்கிற ஏற்பாடுகளை பற்றி நோண்டி நோண்டி கேட்டதாக குசுகுசுசிக்கினம்.

பாடசாலைப்பொடியளின்ர தண்ணீருக்குள்ள நஞ்சு கலந்து அரசியல் செய்தவையை மாற்றுக்கருத்தில்லாமல் கழுமரமேற்றவேணும் பாருங்கோ. 26 பிஞ்சுகள் கருகிப்போகாமல் மயிரிழையினில் உயிர்தப்பியிருக்குதுகள். உங்கடை கேவலம் கெட்ட அரசியல் பிழைப்புக்கு அந்த பிஞ்சுகளே கருவியாகின்றது. கடவுள் சித்தமோ என்னவோ எல்லோரும் திரண்டு வந்து காப்பாத்திப்போட்டினம். குற்றவாளிகளை கைது செய்யிறதிலயும் ஒற்றுமையாக இருந்தவை. மனதார உரியவைக்கு பாராட்டுக்கள்.

கனடா போன கூத்தமைப்பின்ர பின்கதவு எம்பி ஊடகங்களை எதிர்கொள்ள பின்னடிச்சவராம். அதனால வடிகட்டித்தான் ஆட்களை சந்திச்சவராம். என்ன கேள்வி கேட்டு கிழிச்சுப் போடுவங்களெண்ட பயம் தானாம் காரணமாம். அதனால கேள்வி கேட்கத்தெரிஞ்ச ஆட்களை வடிகட்டிதான் சந்திப்பிற்கு கூட்டிப்போனதாம். அவற்றை அப்புக்காத்து மூளை இஞ்சை மாதிரி அங்கினை அவியாது பாருங்கோ.


கொழும்பில இருக்கின்ற ஒரு ஊடகவியலாளர்கள் ஒன்றியமெண்டது பின்கதவு எம்பியிட்ட கைநீட்டி காசு வாங்கி அன்னதானம் நடத்தினது பலருக்கு கடும் சீற்றத்தை கொடுத்திருக்கின்றது. உயிர் தியாகங்களாலும் இரத்தமும் கண்ணீராலும் கட்டியெழுப்பப்பட்டது தமிழ் ஊடகத்துறை. அற்ப சலுகைகளிற்காக அந்த ஊடகத்துறையை கூட்டிக்கொடுக்கின்றது மிகக் கேவலமானது. ஏற்கனவே பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கதிரையினை விட்டுப்போக வழிதேடிக்கொடுத்த அதே நபரிடம் காசு வேண்டினது வார்த்தையில சொல்லேலாத கேவலம் பாருங்கோ.

தாறதை வேண்டிக்கொண்டு பொத்திக்கொண்டிருங்கோ என்றது மைத்திரி அரசினது புதிய பாதை பாருங்கோ. வலி. வடக்கில 6 ஆயிரத்து 300 ஏக்கரில் மிஞ்சினது வெறும் 250 ஏக்கர்தான். அதனை சர்வதேச அரங்கில அம்பலப்படுத்த வேண்டிய கூட்டமைப்பின்ர தலைகள் அந்த காணி கையளிக்கிற ஏமாற்று நாடக நிகழ்வில கலந்து கொண்டது மிகப் பெரிய துரோகம் பாருங்கோ.

வடமாகாணசபை உறுப்பினர்கள் வெளிநாடுகள் செல்லாமல் தடுக்கின்றதில நடந்த சதிகளின்ர பின்னணியில் பேரவை தலை பின்னாலிருக்கின்றது அம்பலமாகியிருக்கின்றது. புதிய ஆளுநர் தனக்கும் இதுக்கும் தொடர்பில்லையெண்டு சொல்லிப்போட்டாராம். தாங்கள் புலம்பெயர் உறவுகளை தேடிப்போனால் நிச்சயம் செருப்பாலை அடிப்பாங்கள் என்றது அவைக்குத் தெரியும். அதனாலதான் தாங்கள் பதுங்கியிருந்து கொண்டு போறவாறவைக்கு ஆப்படிக்க பழைய ஆளுநரை பயன்படுத்தினது அம்பலமாகியிருக்கின்றது.

சுன்னாகம் கழிவு ஓயில் கலந்த தண்ணீர் விவகாரத்தில பலபேர் கையை நனைச்சது கெதியில அம்பலமாகப்போகுதாம். தங்கடை பிள்ளையள் வெளிநாட்டில மினரல் வோட்டர் குடிக்க ஊர் பிள்ளையள் கழிவு தண்ணீரை குடிச்சா என்ன கட்டையில போனால் என்ன என்ற வகையில தான் இவையள் செயற்பட்டுவாறதும் அம்பலமாகியிருக்குது. அதில சர்ச்சைக்குரிய மின் உற்பத்தி நிலையத்திட்ட கைநீட்டினதெண்டு ஆளாளுக்கு அவையளிற்குள்ளேயே மற்றைய ஆளை குற்றஞ்சாட்டுறதும் குசுகுசுக்கின்றதும் நடக்கத்தான் செய்யுது.

# அமுதவாக்கு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 13 பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது சபையில் பெருமளவு ஆசனங்கள் காலியாகவே இருந்தன. இந்தியப் பிரதமரின் உரையைக் கேட்க வராதவர்களில் பெரும்பாலானவர்கள் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்களே. இவர்கள் மஹிந்த ராஜபக்ஸவுக்கு சார்பான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்வதற்கு அவதானிகள் தயங்கவில்லை.

**வீரகத்தி- தனபாலசிங்கம்**
**தினக்குரல் மற்றும் சமகாலம் ஆசிரியர்**

---



சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகள் வெளியுறவுக் கொள்கையின் பிரிக்க முடியாத அங்கமாகின்றது. உலகின் ஒருசிறிய பகுதியில் அந்த உரிமைகள் அச்சுறுத்தப்படுவதாக இருந்தால் கூட அதன் தாக்கம் ஆழமான பிராந்திய குழப்ப நிலையை ஏற்படுத்தும். சர்வதேச சமாதானம், பாதுகாப்பு மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

**பேராசிரியை- அனுராதா எம். ஷெனோய்**
**சர்வதேச கற்கைகள் துறை**
**ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் - புதுடில்லி**


---



தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான அத்தகைய முயற்சி எதுவுமே பெருமளவில் ஊழல் மோசடிகளையும் குற்றச் செயல்களையும் செய்ததுடன் தேசிய சொத்தை சூறையாடியதாக குற்றம் சாட்டப்படுகின்ற அதே அரசியல்வாதிகளுக்கு வெகுமதி அளிப்பதாக அமையும்.

**லத்தீப் பாரூக்**
**அரசியல் ஆய்வாளர்**

---



ஜனநாயக ஆளுமைக்கும், நல்லாட்சிக்கும் தேவையான நிறுவன அமைப்புக்களைத் திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தியமையே மஹிந்த ராஜபக்ஸ ஆட்சியில் நடந்து முடிந்த அரசியல் மாற்றமாகும். அவரது முதலாவது பதவிக்காலத்தில் மெல்லமெல்ல ஆரம்பித்த இந்தச் செயன்முறை 2009 இல் யுத்தம் முடிவுற்றபின் ஆபத்தான உச்சநிலையை அடைந்தது.

**கலாநிதி ஜயதேவ உயன்கொட**
**அரசறிவியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்**

---



ரஸ்யாவையும் உள்ளடக்கி பொதுவான ஐரோப்பிய பாதுகாப்பு ஒழுங்கு முறையொன்றை உருவாக்குவதற்குப் பதிலாக, அமெரிக்க ஆதிக்கத்திலான நேட்டோ கூட்டணி தன்னை ரஷ்ய எல்லைவரை விஸ்தரித்து விட்டு அச்செயலை சம்பந்தப்பட்ட அரசுகளின் சுயாதிபத்திய தெரிவு என்று நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றது.


**சியூமஸ் மில்னே**
**இடதுசாரி சிந்தனை கொண்ட பிரித்தானிய பத்திரிகையாளர்**
**கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர்**

---

கருணாநிதியின் சாணக்கியத் தனங்கள் தி.மு.க வையே நின்று கொல்லும் ஆற்றல் வாய்ந்தவை. பா.ஜ.க வுடன் 2001 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணி வைத்து தமிழகத்தின் அரசியல் உள்ளடுக்குகளில் பா.ஜ.க வை அறிமுகப்படுத்திய பெருமைக்குரிய தி.மு.க, இப்போது உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணித்து பா.ஜ.க விற்கு எதிர்கட்சியின் மானசீக இடத்தை வழங்கியுள்ளது. ஜெயலலிதாவின் தண்டனையை பல காலமாக எதிர்நோக்கிய கருணாநிதிக்கு உண்மையில் அதில் கெட்ட செய்தியும் அடங்கியுள்ளது. 2ஜி வழக்கில் கடுமையாக இயங்க வேண்டிய சூழலை நீதிபதிகளுக்கு இந்தத் தீர்ப்பின் முன்மாதிரி ஏற்படுத்தியுள்ளது.

**காலச்சுவடு ஆசிரியர் தலையங்கம்**

---



“மெட்ராஸ்” படத்தில் பாத்திரங்களின் உடல்மொழி முக்கியமானது. படத்தில் எந்தப் பாத்திரமும் மற்றொரு பாத்திரத்தை நோக்கிப் பேசுதல், நெருங்குதல், தொடுதல், அடித்தல் , முத்தமிடுதல் என யாவும் சினிமா மொழியின் ரெடி மேடான கோர்வைக்குள் அமையாமல் இயல்பாக இயங்கியுள்ளன. நாயகன் நாயகியின் கடற்கரை உரையாடல், அன்புக்கும் மேரிக்குமான நெருக்கம் ஆகிய இரண்டையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லலாம். காதல், காமம் சார்ந்த தமிழ் சினிமாவின் வழக்கமான உரையாடலில் இருந்து இவை வேறுபட்டுள்ளன.

**ஸ்டாலின் ராஜாங்கம்**
**சினிமா விமர்சகர்**

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தேசிய அரசாங்கம் ஏதற்காக

மைத்திரி அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்காக தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. முன்னர் பல நெருக்கடிகள் ஏற்பட்டபோது குறிப்பாக இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளின் போது உருவாகாத தேசிய அரசாங்கம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

இதனை ஒரு உள்நாட்டு வெளிநாட்டுத் தயாரிப்பு எனலாம். மேற்குலக – இந்தியக் கூட்டின் உழைப்பும் இதற்குள் இருக்கின்றது. ஆட்சி மாற்றத்திற்காகச் செயற்பட்ட இந்தக் கூட்டு தற்போது ஆட்சியைப் பாதுகாப்பதில் தீவிரமாக முயற்சிக்கின்றது.

இதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் இலக்கு மஹிந்தவின் மீள் எழுச்சியைத் தடுப்பது தான். அதனூடாக சீனச் செல்வாக்கினைத் தடுப்பது தான். இந்த வகையில் இத் தேசிய அரசாங்கம் இலங்கையை மையப்படுத்திய புவிசார் அரசியலின் வெளிப்பாடே!

மஹிந்தவின் மீள் எழுச்சி ஆட்சி மாற்றத்திற்கு சார்பாக இருந்த உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளை கலங்க வைத்துள்ளது. சாண் ஏற முழம் சறுக்குவது போல ஆட்சிமாற்றச் சக்திகளையும் மேவி மஹிந்தருக்கான ஆதரவு பெருகி வருகின்றது. நுகேகொட, கண்டி, இரத்தினபுரி பொதுக் கூட்டங்கள் இதற்கு சாட்சி. கட்சி உறுப்பினர்கள் மீதான மைத்திரியின் அதிகாரம் பலவீனமடைந்துள்ளது.

இந்நிலையில் மஹிந்தரைத் தனிமைப்படுத்தும் ஏற்பாடுதான் இந்தத் தேசிய அரசாங்கம். இது நீடிக்குமா? என்பது இலங்கையை மையப்படுத்திய புவிசார் அரசியல் போட்டியில் மேற்குலக– இந்தியக் கூட்டா அல்லது அல்லது சீனாவா மேல் நிலையில் நிற்கும் என்பதைப் பொறுத்தது.

மஹிந்தருக்கு ஆதரவான இரத்தினபுரிக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் சுமார் 26 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்ற செய்தி தேசிய அரசிற்கு பலத்த காண்டம் உள்ளது என்பதையே காட்டுகின்றது.

இவை தென்னிலங்கை விவகாரம். நமது கவலை அதுவல்ல, எமது அக்கறையெல்லாம் தேசிய அரசாங்கம் தமிழ் அரசியலில் என்ன பாதிப்பைச் செலுத்தும் என்பதே! நன்மைகள் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பது ஏற்கனவே தெரிந்தது தான். தீமைகள்தான் இங்கு கவனத்திற்குரியது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்குலக –இந்தியக் கூட்டிற்கு தமிழர் விவகாரம் இரண்டாம் பட்சம் தான். அவை தேசிய அரசாங்கத்தின் மூலம் இலங்கைத் தீவினை மையப்படுத்திய புவிசார் அரசியல் போட்டியில் தமிழர்களுக்குரிய இடத்தை பின்னிலைக்குத் தள்ள முயற்சிக்கின்றன என்பது முதலாவது விடயம்.

சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்குவதன் மூலம் சிங்கள அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழர்களையும் கொண்டு வருவது. அதன் மூலம் தமிழ்த்தேச அங்கீகாரத்திற்கான கோரிக்கையைப் பலவீனப்படுத்துவது இரண்டாவது விடயம்.

தமிழ் மக்கள் சிங்கள அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தற்போது இல்லை. அதற்கு வெளியேதான் நிற்கின்றனர். தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரித்தால் இரண்டு தேசங்களையும் சமத்துவமாக இணைத்த ஒரு இலங்கை அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் வரத் தயார் எனக் கூறிவருகின்றனர்.

சம்பந்தன் தலைமை தமிழ்த் தேசத்திற்குரிய அங்கீகாரம் இல்லாமலேயே சிங்கள அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் கரைவதற்குத் தயாராக இருக்கின்றது. இது தமிழ்த் தேசத்தை அழிக்கும் ஒரு செயற்பாடு. இந்த இரண்டு ஆபத்துக்களிலிருந்தும் தமிழ்த் தேசிய அரசியலை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றி தமிழ்த் தேசிய சக்திகள் சிந்திப்பது நல்லது.

# கூட்டமைப்பின் தலைமையை பொறுப்பெடுங்கள் இல்லையேல் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்



விக்னேஸ்வரன் ஐயா தற்போது வெளிப்படுத்தும் நிலைப்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான கருத்தைக் கொண்டிருக்கும் அவரது கட்சியின் தலைவர்களை அப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைமையை முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் அல்லது அக்கட்சியிலிருந்து வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைய வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு. கடந்த 26ம் திகதி யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண முதலமைச்சர் அரசியலுக்கு வந்த நாளிலிருந்து கடந்த மாதம் வரை கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கு முற்றிலும் மாறாக அரசியல் நிலைப்பாட்டை கடந்த மாதத்திலிருந்து வெளிப்படுத்தி வருகின்றார். குறிப்பாக வடமாகாண சபையில் இன அழிப்பு பிரேரணையை நிறைவேற்றியுள்ளதுடன், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார். இவை வரவேற்கத்தக்க மாற்றங்கள் என்பதனை நாம் ஏற்கனவே இம் மாநாட்டு மண்டபத்தில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணினராகிய நாம் கடந்த 5 வருடங்களாகத் தொடர்ச்சியாக இதை வலியுறுத்தி வந்துள்ளோம். பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ் மக்களுக்கு நடைபெற்றது இன அழிப்பு என்றும் அதற்கு சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும் என்றும் அது வெறுமனே இறுதி யுத்த காலத்தில் மட்டுமன்றி 1948 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரைக்கும் நடந்து கொண்டிருக்கும் விடயங்கள் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்ற கோட்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயல்பட்டுவந்தது. இந்தக் கருத்தை முதலமைச்சர் காலம் கடந்தேனும் தற்போது வலியுறுத்த ஆரம்பித்துள்ளார். இதனை பகிரங்கமாகவே வரவேற்றிருந்தோம். ஏனெனில் இதனை நாம் 5 வருடங்களாகக் கூறிவந்திருக்கின்றோம். நாங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியமைக்கான காரணமே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைமைகள் மேற்குறிப்பிட்ட விடயங்களில் செயற்படத் தயாராக இல்லாமையேயாகும். ஆகவே கூட்டமைப்பில் இருந்து விலகி தனியாக செயற்பட்டிருக்கின்றோம்.

முதலமைச்சர் 2013 ஆண்டு காலத்தில் அரசியலிற்குள் நுழைகிறார். அந்தக் காலம் முதல் அவருடைய கருத்து வேறாகவே இருந்துள்ளது. மிக அண்மைக் காலமாக வித்தியாசமான குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் கூறுகின்ற கருத்துக்களை விட வித்தியாசமான கருத்துக்களைக் கூறி வருகின்றார்.

இது மனமாற்றமாக இருக்கலாம். அரசியலில் முன் அனுபவமில்லாத ஒரு நபர். ஆனால் சட்டரீதியான அனுபவம் வாய்ந்த ஒருவருக்கு பல விடயங்களில் அனுபவம் பெற்றபிற்பாடு அவருடைய கருத்துகளில் மாற்றம் ஏற்பட்டதாக இருக்கலாம். அவ்வாறான மாற்றமாயின் நாம் மகிழ்ச்சியடையலாம்.

மறுபக்கத்தில் அரசியல் கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் கடந்த காலங்களில் விசேடமாக ஜனாதிபதித் தேர்தலில் நிபந்தனையற்ற ஆதரவு, அதன்பின் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டது போன்றவை தமிழ்த் தேசத்தினுடைய நலன்களை முற்றாக உதாசீனம் செய்வது மட்டுமல்ல தமிழ்த் தேசிய ஆன்மாவை கரைத்து அழிக்கும் திட்டமிட்ட செயலாகவும் இருந்தமையால் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

**ஒன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையை நீக்கி முதலமைச்சர் கட்சித் தலைமையை பொறுப்பேற்க வேண்டும். அல்லது அவருடைய சிந்தனையில் இருக்கின்ற நபர்கள் கட்சித் தலைமையில் இருக்க வேண்டும். அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி இந்தக் கொள்கையை முன்நிலைப்படுத்தி தனித்துவமாக செயற்பட வேண்டும்.**

மேலும் இன்னும் சிறிது காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் வரவுள்ள நிலையில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது. நாங்கள் முதலமைச்சர் மாகாணசபையில் இன அழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றிய போது முதலாவதாக அதனை வரவேற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் பறித்த காணிகளைக் கையளிப்பதற்கு ஒரு திருவிழா

-முத்துக்குமார்-



யாழ்ப்பாணம் வளலாய்ப் பகுதியில் படையினர் பறித்த காணிகளில் 400 ஏக்கர் காணிகளை மக்களிடம் கையளிப்பதற்காக மைத்திரி - ரணில்- சந்திரிக்கா குழுவினர் யாழ்ப்பாணம் வந்து திரும்பியிருக்கின்றனர். படையினர் பறித்த காணிகளைக் கையளிப்பதற்கும் ஒரு விழா என்பதை இலங்கையைத் தவிர பார்க்கக் கிடைக்கவில்லை. மஹிந்த- டக்ளஸ் கூட்டு உருவாக்கிய மரபு மைத்திரி- ரணில்- சந்திரிகா-சம்பந்தன் கூட்டுக்காலத்திலும் தொடர்கின்றது. வடமாகாண சபையின் ஆளுநர் மாற்றத்தினைப் பிரச்சாரப்படுத்தியது போல இதற்கும் ஒரு சர்வதேசப் பிரச்சாரம் நடக்கின்றது.

தமிழர் விவகாரம் சர்வதேச மயமாகிய பின்னர் தமிழர்களுக்கு ஏதாவது செய்தோம் எனக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு உள்ளது. சம்பந்தன் தலைமைக்கு அரச பங்காளிக் கட்சியாக இருப்பதன் விளைவுகளைக்காட்ட நிர்ப்பந்தம் இருக்கின்றது. இரண்டு தரப்பும் இணைந்து காணிக் கையளிப்பு என்ற

**தமது சொந்தக் காணியை பார்க்கச் சென்ற முதலமைச்சரும் மக்களும் தடுக்கப்படுகின்றனர். இது ஏன்? பதில் சொல்ல ஜனாதிபதி தயாராக இல்லை. ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் படையினர் இருக்கின்றனரா? அல்லது படையினரின் அதிகாரத்தின் கீழ் ஜனாதிபதி இருக்கின்றாரா? என்பதை முதலில் அவர் விளக்கமாகச் சொல்லட்டும்.**

நாடகத்தை மேடையேற்றியிருக்கின்றனர். மக்கள் வாழ முடியாத பகுதிகளில் தான் காணிக்கையளிப்பு இடம்பெற்றது. மக்கள் வாழ்விற்கு அதிக பயன்தரக்கூடிய விவசாய நிலங்கள் உள்ள பகுதியை இராணுவம் தொடர்ந்தும் தானே வைத்திருக்கின்றது. வசாவிளான் பகுதியில் அதனைப் பார்க்கச் சென்ற மக்கள் தடுக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு முன்பாகவே சீமெந்துத் தூண்களுடன் கம்பி வேலி போடப்படுகின்றது. முதலமைச்சர் பெயருடன் அவர் ஏன் இருக்கின்றாரோ தெரியவில்லை.

புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் மக்கள் காணிகளுக்கு செல்ல விடாமல் தடுத்தமையை சிறிய விடயம் என்கின்றார். தேவையில்லாமல்பெருப்பிக்கப் படுகின்றது எனக் கவலை கொள்கின்றார். கொழும்பிலுள்ள அவரது வீட்டுக்குச் செல்வதற்கு அனுமதியில்லை என படையினர் தடுத்தால் அவருக்கு அது சிறிய விடயமாகத் தெரியுமா?

காணிக் கையளிப்புக்கு வந்த ஜனாதிபதி மக்களுக்கு காணிப்பிரச்சினை தொடர்பான மாக்சீச வகுப்பெடுத்தார். காணி உள்ளவர்கள், இல்லாதவர் விவகாரத்தை தான் மாக்ஸ் தெளிவாக விளக்கியதாக கூறினார். இது உலகமெல்லாம் இடம்பெறுகின்ற பிரச்சினை தான் என பொதுவிளக்கம் கொடுத்தார். யுத்தத்தினால் தான் காணிப் பிரச்சினை ஏற்பட்டது என்கிறார். இது காணி உள்ளவர் காணி இல்லாதவர் பிரச்சினையல்ல. காணிகள் அடாத்தாகப் பறிக்கப்பட்டதால் ஏற்பட்ட பிரச்சினை மற்றைய நாடுகளில் யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட காணிகள்கூட யுத்தம் முடிந்த கையுடன் உரிமையாளர்களிடம் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இலங்கையில் மட்டும் யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களாகியும் காணி கையளிக்கப்படவில்லை.

காணியைக் கையளிக்கும் நோக்கமும் படையினருக்கு இல்லை. மக்களுடைய காணிகளில் படையினர் விவசாயம் செய்கின்றனர், உல்லாசப்பயண விடுதிகள் நடாத்துகின்றனர். நீச்சல்த் தடாகம், கோல்ப் மைதானம் என்பவற்றை அமைக்கின்றனர். இவையெல்லாம் மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து அகற்றும் திட்டமிட்ட இனப்படுகொலையே. ஜனாதிபதி இவற்றை மறுத்து மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகின்றார்.

யுத்தத்தினால் வட- கிழக்கு மக்கள் மட்டுமல்ல தென் இலங்கையும் பாதிக்கப்பட்டது என ஜனாதிபதி தமிழ் மக்கள்பட்ட துன்பங்களை பொதுமைப்படுத்திப் பார்க்கின்றார். இது தென்னிலங்கை இடதுசாரிகள் தமிழ்த் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். தென்னிலங்கைத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர் எனச் சொல்வதுபோல உள்ளது. தென்னிலங்கையிலும் விமானக்குண்டு வீசப்பட்டதா? அங்கும் மக்களின் காணிகளைப் பறித்து படையினர் விவசாயம் செய்தர்களா? உல்லாச விடுதி நடாத்தினார்களா?

இந்த சீத்துவத்துவத்தில் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன் எனக் கூறுகின்றார். இது "கூரை மீதேறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறிப் போவேன்" எனக் கூறுவதைப் போல உள்ளது. தற்போது தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற ஜனாதிபதி செயலணி என்கின்ற ஒரு குஞ்சம் கட்டப்படுகின்றது. அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பொறுப்பாக இருப்பார் எனவும் கூறப்படுகின்றது. சந்திரிக்கா காலத்து செயலணிகள் பற்றி தமிழ் மக்களுக்கு நிறையவே அனுபவம் இருக்கின்றது என்பதால் இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

காணிக்கையளிப்பு வைபவத்தில் ரணில்- விக்கினேஸ்வரன் தகராறு ரசிக்கக் கூடியதாக இருந்தது. இருவரும் கைலாகு

**புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் மக்கள் காணிகளுக்கு செல்லவிடாமல் தடுத்தமையை சிறிய விடயம் என்கின்றார். தேவையில்லாமல் பெருப்பிக்கப்படுகின்றது எனக் கவலை கொள்கின்றார். கொழும்பிலுள்ள அவரது வீட்டுக்குச் செல்வதற்கு அனுமதியில்லை என படையினர் தடுத்தால் அவருக்கு அது சிறிய விடயமாகத் தெரியுமா?**

கொடுக்கவுமில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவும் இல்லை. விக்கினேஸ்வரன் மக்களுக்கு பெரிதாக உதவ முடியாத காணிகளைத்தான் விடுவித்துள்ளீர்கள். வளமான காணிகள் விடுவிக்கப்படவில்லை. வீடுகள், பாடசாலைகள், கோவில்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்கின்ற விடயங்களை விக்கினேஸ்வரன் வெளிப்படையாகவே பேசினார். இந்தப் பேச்சினால் கூட்டமைப்பின் குஞ்சுகள் கொஞ்சம் நெளிந்த போதும் பின்னர் தங்களை சுதாகரித்துக் கொண்டார்கள். இன அழிப்புத் தீர்மானத்தை வடமாகாண சபையில் விக்கினேஸ்வரன் நிறைவேற்றியதைத் தொடர்ந்து ரணிலுக்கு கடுப்பு உச்சத்திற்கு ஏறியுள்ளது.

விக்கினேஸ்வரன் அண்மைக் காலமாக சம்பந்தன் தலைமையே நெளியக் கூடிய வகையில் கடுமையான கருத்துக்களைக் கூறிவருகின்றார் என்பது உண்மையே. மோடிக்கு முன்னாலேயே 13வது திருத்தம் தமிழ் மக்களுக்கு தீர்வல்ல என்றும் கூறியிருக்கின்றார். சம்பந்தன் தலைமையால் கட்டுப்படுத்த முடியாதவர் என்கின்ற ஒரு தோற்றம் தெரிகின்றது. சம்பந்தன் தானே நெருப்பை மடியில் கட்டிக் கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

விக்கினேஸ்வரனின் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவையே. ஆனால் சம்பந்தன் தலைமை அவரது கருத்துக்களுக்கு எதிராக நடைமுறையில் செயற்படும்போது விக்கினேஸ்வரனின் கருத்துக்கள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை. மாறாக சம்பந்தன் தலைமைக்கு வெள்ளைப் பூச்சடிக்கவே அவை உதவும். விக்கினேஸ்வரன் தனது கருத்துக்களுக்கு நேர்மையானவராக இருப்பாராயின் கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராகவும் விமர்சனங்களை முன்வைக்க வேண்டும். அத்துடன் கூட்டமைப்பின் தலைமையைத் தான் கைப்பற்ற வேண்டும் அல்லது கூட்டமைப்பிலிருந்து விலகி வெளியில் செயற்படும் தமிழ்த்தேசிய சக்திகளோடு இணைந்து தமிழ்த்தேசிய அரசியலைப் பலப்படுத்த வேண்டும். விரைவில் இதனைச் செய்யாத வரை அவரின் கருத்துக்கள் கூட்டமைப்பின் தமிழ்த்தேசிய அரசியல் நீக்கச் செயற்பாடுகளுக்கு வெள்ளையடிக்க முயலும் ஒரு தேர்தல் நாடகமாகவே கருதப்படும்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் முதல்வர் விக்கினேஸ்வரனுக்கும் ரணிலுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அச் செய்தியை இன்னுமொரு கூட்டமைப்பு எம்பியின் இணையம் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளது. இது ஏன் என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுகின்றது.

தமிழ்மக்கள் மத்தியில் இயல்பு நிலையைக் கொண்டுவருதல் முக்கியமானதே. அந்த வகையில் காணிப்பறிப்பு விவகாரம், சிறைக் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரம் என்பவை பற்றியெல்லாம் முக்கியமானவையே. இவையெல்லாம் தமிழ்மக்கள் பின்பற்றிய அரசியலின் விளைவுகள். அந்த அரசியலுக்கு தீர்வு காணாதவரை இந்த விளைவுகள் திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருக்கும். அரசியல் விவகாரத்திற்கு தீர்வுகாணின் விளைவுகள் தானாகவே இல்லாமல் போய்விடும். அரசியல் தீர்வு கிடைக்காத வரை விளைவுகளுக்கும் முழுமையாகத் தீர்வு காணமுடியாது.

எனவே விளைவுகளுக்காக குரல் எழுப்புகின்ற அதேவேளை அதற்கு சமாந்தரமாக அரசியல் தீர்வுக்காகவும் குரல் எழுப்ப வேண்டும். ஒடுக்குமுறையாளர்கள் விளைவு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழனை கேனயனாக்கிறதெண்டால் தென்னிலங்கை ஆட்சிக்காரங்களுக்கு சரியான விருப்பம்

வணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

மாற்றத்தை கொண்டு வரப் போறதாக சொன்ன அரசு பொறுப்பேற்று நூறு நாள் வரப்போகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எல்லா முமே வெறும் மேடை பேச்சிலும், பேப்பர் அறிக்கைகளிலும் தான் கிடக்கு. மற்றையபடி பின்பக்கத்தில உள்ள மண்ணைத் தட்டிப் போட்டு எழும்பி போகவேண்டியது தான்.

வலி வடக்கிலும் ஆக்கிர மிக்கின்றதோ 6300 ஏக்கர். இப்ப விடு விக்கிறதாகச் சொன்னதோ ஆயிரம் ஏக்கர். கடைசியில விட்டதோ வெறும் 250 ஏக்கர். இதை விடுவிக்கிறதுக்கு அவை செய்யுற அலப்பறையளோ தாங்க முடியாத




தொன்று. இலங்கை அரசின் மீள்குடி யேற்ற அமைச்சர் சுவாமிநாதன் சொல்லுறார் தமிழர்கள் தாறதை வாங்க வேணுமெண்டு. மிச்சம் மீதி இருக்கிறதை ஏப்ரலுக்குள்ள விடுவித்துத் தாறதாகவும் அவர் சொல்லுறார்.

ஆனால் ஆமிக்காரர் நாட்டி வைக்கிற கொங்கிறீற் தூண் மற்றும் முள்ளுக்கம்பி வேலி சொல்லுற கதை வேறையாக இருக்குது. இப்போதைக்கு அப்பிடி ஏதும் அசுமாத்தம் நடக்கப்போறது மாதிரி அவையளின்ர கதையள பார்த்தால் தெரியவில்லை.

மைத்திரி ஐயாவோ வளலாய் கூட்டத்தில, உங்கட பிரச்சனையளுக்கு முடிவு வந்திடுமெண்டு சொல்லுகிறார். கூட்டி வந்த ரணிலும், சந்திரிகாவும் பேயறைஞ்சவை மாதிரி முதலமைச்சர் மேடையில வைச்சு கிழிச்சு தொங்க விட்டிட்டார்.

அந்த ஆள் கேட்ட கேள்வி இவையளை பேச்சு மூச்சு இல்லாமல் இருத்திப் போட்டுது பாருங்கோ. மீள்குடியமர விடப்போறீங்களெண்டால் ஏன் வீடுகளை, கோயில்களை இடிச்சு தள்ளுறியள். போதாக்குறைக்கு உங்கினை நட்சத்திர விடுதியள், நீச்சல் தடாகம், தியேட்டர், விவசாயப் பண்ணையள் எல்லாம் வைச்சிருக்கிறியள். இராணுவத் தேவைக்கு காணியென்றால் இதுவெல்லாம் எதுக்கு எண்டு அந்த ஆள் கிழிச்சு தொங்க விட்டுட்டுது. போதாக்குறைக்கு இவை யளின்ர மீள் குடியமர்வு பம்மாத்தெண்டு தெரிஞ்சுகொண்டு மனுசன் இனி சர்வதேச நியமங்களின் கீழ் தான் மீள் குடியமர்வை நடத்த வேணுமெண்டு சொன்னது தான் எல்லாருக்கும் மூட் அவுட் ஆகக்காரணம் பாருங்கோ.

இவ்வளவு அழிப்பும் நடந்து முடிஞ்சாப்பிறகு காணி கையளிக்கிறமெண்டு ஒரு கடிதம் கொடுத்தவை. இவ்வளவு நாளும் யார் அந்த காணிகளை பிடிச்சு வைச்சிருந்தவையெண்டு பற்றியோ, அதுக்கான இழப்பீடுகள் பற்றியோ மூச்சுப் பேச்சில்லை. போதாக்குறைக்கு பற்றையள் வெட்டி துப்பரவாக்கவெண்டு ஒரு பதின் மூவாயிரம் ரூபா காசோலை கொடுத்தவை. அதோட கதை முடிஞ்சிட்டுது.

அங்கயிருந்த பெரும்பாலான வீடுகள், கோவில்கள், பாடசாலைகளென்று எல்லாவற்றையும் போன வருடம் தான் இடித்தழித்தது. அப்ப தெளிவாகத்தான் அவங்கள் வேலை செஞ்சிருக்கிறாங்கள். உயர் பாதுகாப்பு வலயங்களிற்குள்ளை ஆமியின்ர ஹோட்டல்கள், விவசாய பண்ணைகள் ஏதுமில்லையென்று இராணுவத் தளபதி சொன்னவராம். கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்யாத குறையாக சந்திரிக்கா சொல்ல, அதுக்கு மாவை விளக்கமளிச்சவராம் அடே கோதாரி விழுவாரே அந்த அம்மா பத்துவருடம் ஜனாதிபதி யாக இருக்கேக்குள்ளதான் உங்களவு இடத்தையும் இராணுவம் ஆக்கிரமிச்சது பாருங்கோ.

தமிழனை கேனயனாக்கிற தெண்டால் தென்னிலங்கை யிலுள்ள ஆட்சிக்காரங்களுக்கு சரியான விருப்பம் பாருங்கோ. அதனால தான் ஒரு பக்கம் காணியை விடுவிக்க அரசுக்கு விருப்பம். ஆனால் ஆமிதான் விடுகினமில்லையெண்டு எங்கடை ஆட்களை வைச்சே பேச வைச்சிருக்கிறாங்கள். இந்த சந்திரிகா, ரணில் ஆட்சியில தான் செம்மணி யிலையும், யாழ்ப்பாணத்திலையும் நூற்றுக் கணக்கில பொடியள், பிள்ளையள் காணா மல் போனவங்கள். அந்த துயரக்கதையை தொடக்கி வைச்ச பெருமை இவையளையே சேரும். இப்ப என்னெண்டால் அவையிட்டை இருந்து விமோசனம் பெறப் போறதாக எங்கடை சிலர் சொல்லிக்கொண்டு திரி யினம்.

போதாக்குறைக்கு காணி பத்திரங் களை வழங்கிற நிகழ்வில, எங்கடை தமிழரசு தலைவரும், தளபதியுமான மாவையார் தன்னையும் கூப்பிடு வாங்களெண்டு முண்டி அடிச்சுக்கொண்டு நின்றவர். ஏன் இதில நிற்கிறாய் என்று ஒரு துப்புக்கு கூட ஒருத்தரும் கேக்கேல்ல. மாவட்ட ஆமிக்கொமாண்டர் முதல் பொலிஸ் அதிகாரி வரைக்கும் சனத்துக்கு காணிப் பத்திரம் வழங்கி போட்டோ எடுத்தவை மாவையாரோ அசடு வழிய நின்று கொண் டிருந்தவர். அந்த ஆளுக்கு மானம், ரோசம் இருக்கோ இல்லையோ தெரியாது. பார்த் துக்கொண்டு நின்ற, புள்ளடி போட்ட சனத் திற்கு இடுப்பில கட்டியிருந்ததுகள் அவிழ்ந்து விழாத கதை பாருங்கோ.

அதிலையும்முன்னமே சொன்னமாதிரி எல்லோரும் இப்பொழுது இணக்க அரசி யல் செய்யிறதன் வெளிப்படையாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் முதல் மாவையர், சுரேஸ் உள்ளிட்ட எல்லோரும் இரண்டாம் வரிசைக்குத் தள்ளப்பட்டு ஆற அமர கதிரைகளில இருந்தவை. வழமையாக பாராளுமன்றத்திலையும், பத்திரிகைகளிலும் முட்டி மோதிற அவை, அமைதியாக கலகலப்பாக பேசிக்கொண்டிருந்தது இணக்க அரசியலில் பாரிய முன்னேற்றம் பாருங்கோ.

# நையாண்டியார்

## பதில்கள்

சி.தட்சணாமூர்த்தி
மாந்தொனி, கரவெட்டி

கேள்வி:- உயர் பாதுகாப்பு வலய விடுவிப்பு பற்றி?

பதில்:- உயர்பாதுகாப்பு வலயமே இல்லை என்றார்கள். பின்னர் ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படும் என்றார்கள். எங்கட சனத்தை 20 வருசமா அகதியாக கையேந்த வைச்சு அதுகளின்ர வாழ்க்கையை அழிச்சுப் போட்டு, இப்ப ஏதோ ஒண்டுமில்லாத மக்களுக்கு தாங்கள் வாழ்வு கொடுப்பதுபோல ஏமாத்துறாங்கள். அதுக்கு உந்த தமிழரசுவின்ர தலைவர் முதுகெலும்பில்லாத மாவையரும் கூழ்ப்போறார். எல்லாம் அரசை சர்வதேசத்தில நல்லபிள்ளையாக காட்டுற வேலைதான்.

கஜனுசா
முள்ளியவளை

கேள்வி :- உள்ளக விசாரணை பற்றி கூத்தமைப்பின் பெருந்தலைகள் மூச்சுவிடக்கூட மறுக்கின்றனவே?

பதில்:- சர்வதேச கண்காணிப்பின் கீழ் உள்ளக விசாரணையென பின்கதவு எம்பி பேசுகின்றார். உள்ளக விசாரணைகளைப் பகிஸ்கரிப்பதாக காணாமல் போனோர் குடும்பங்கள் அறிவிக்க, அவ்வாறு செய்யவேண்டாமென சிங்கக்கொடி காத்த வீரன் சம்பந்தன் விளக்கமளிக்கிறார். யார், எதனைக் காப்பாற்றப் பாடுபடுகின்றார்களென்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

க.யூலிஸ்ரா
குருநகர், யாழ்ப்பாணம்

கேள்வி :- தெற்கினில் உருவாகியுள்ள தேசிய அரசாங்கம்?

பதில் :- புதிய மொந்தையினில் பழைய கள்ளு அவ்வளவுதான். எந்த ஊழல் அரசிற்கு எதிராக மக்களிடம் மாற்றம் கேட்டு வாக்கு களவாடினார்களோ, அதே ஊழல் பெருச்சாளிகள் இப்போது பங்காளிகள் ஆகியிருக்கிறார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரை எல்லாமுமே வேடிக்கை பார்ப்பதற்கானவையே.

கி.சிவரூபன்
இடைக்காடு, அச்சுவேலி

கேள்வி :- உயர்பாதுகாப்பு வலய காணிகள் விடுவிப்பு தொடர்பினில் படைத்தரப்பின் ஒத்துழைப்பு அரசிற்கு இல்லையென்ற பிரச்சாரம் பற்றி?

பதில் :- அரசினைப் பாதுகாக்க, பங்காளிகள் செய்யும் பிரச்சாரமே. அரச இயந்திரம் என்பது முப்படைகளையும் உள்ளடக்கியதே. அதுவும் யாழினில்கூட முப்படைகளது தலைமைகள் மாற்றியமைக்கப்பட்டு சொல், பேச்சு கேட்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விடுவிப்பு தொடர்பினில் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள தனது முகவர்களினூடாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரமேயது.

ச.கஜுசன்
நெடுந்தீவு

கேள்வி:- தேர்தல் காலத்தில் மட்டும் எட்டிப் பார்க்கும் இடமாக தீவுப் பக்கம் இருக்கின்றது?

பதில் :- இனிப்பயப்படத் தேவையில்லை. அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் உங்கள் சார்பில் போட்டியிட வேட்பாளர்களை கொழும்பிலிருந்து களமிறக்கத் தயாராகி விட்டார்கள். தீவு எங்கள் கோட்டையென்றவர் தியேட்டருடன் ஒய்ந்து போனார். சிங்கப்பூராக மாற்றப்போவதாகச் சொன்னவர் அம்பாந்தோட்டையில் ஒய்வு எடுக்கிறார். மற்றையபடி எதிர்பார்க்க ஏதுமில்லை.

ப.நிரோமனுஜன்
கரவெட்டி

கேள்வி :- மைத்திரிக்கு வாக்களித்து என்ன கண்டோம்?

பதில் :- பார்க்கவில்லையா? வளலாய் மேடையில் இணக்க அரசியல் பேசியவர்கள், மற்றத்திற்காகப் போராடியவர்கள் எல்லோருமே ஒரே மேடையில், ஒரே கதிரை வரிசையில் இருந்தார்கள். ஆனால் என்ன? எல்லோரையும் இரண்டாம், மூன்றாம் வரிசைக்கு தள்ளிவிட்டார்கள். முதலமைச்சர் மேடையிலேயே முகத்திரையைக் கிழித்தார் என்ற செய்தி வெறும் தேர்தல் நாடகமாக இருந்துவிடக்கூடாதென ஆண்டவனை வேண்டுகின்றோம்.

# போர் இன்னும் ஓயவில்லை

-பாமரன்-

நிலத்துக்கான போராட்டம் தொடங்கிய இடங்கள் இப்போது எப்படியிருக்கின்றன? யாராவது கற்பனை செய்து பார்த்ததுண்டா? கற்பனையே செய்ய வேண்டாம். நேரில் வந்து பார்த்துச் செல்லுங்கள் எனத் திறந்துவிட்டிருக்கின்றனர், கொக்கிளாய் வழியான திருகோணமலை தரைவழிப் பாதையையும், நெடுங்கேணி, பெரியகுளம் ஊடான பதவியா பாதையையும்.

முன்பெல்லாம் மணலாற்றுக் காடுகள் குறித்துப் பல்வேறு கிளைக்கதைகளை பரப்பிவிட்டிருந்தார்கள். சூரியன் உதிப்பதும், அஸ்தமிப்பதும் தெரியாத காடெனவும், அதற்குள் யாரும் தொலைந்தால் தொலைந்த வரை மீட்க மயில்குஞ்சன் தான் வர வேண்டும் எனவும், பகலில் கூட பேய்கள் மனிதர்களுடனேயே நடமாடி சகல வேலைகளையும் செய்யும் எனவும் கதைகள் சொல்வார்கள். ஆனால் இப்போது மணலாற்றுக் காட்டைப் பார்த்தால், சூது கவ்வும் திரைப்படத்தில் தோன்றும் வில்லன் போல காட்சியளிக்கிறது. அந்தக் காட்டின் அடர்த்தியும், தழைப்பும் மெலிந்துவிட்டன. பெறுமதியும் அற்றுவிட்டது.

காட்டைக் கடந்து வெலிஓயா கட்டில் ஏறி நின்று பார்த்தால் தொடர்ச்சியான சிங்கள கிராமங்களைப் பார்க்கலாம். அங்கும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நலத்திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. வன்னி பெருநிலம் 2002 ஆம் ஆண்டுகளோடு தொலைத்துவிட்ட செழுமையை அப்படியே வைத்திருக்கின்றன அந்தக் கிராமங்கள். எங்கு பார்த்தாலும் வயல்கள் விளைந்து கிடக்கின்றன. வீட்டுக் கூரைகளில் கூட வன விலங்குகள், பறவைகள் தங்கிவாழ்கின்றன. வன்னியின் வற்றாத குளங்களுக்கு சாட்சியாக அடுக்கடுக்காகக் காணப்படும் குளங்களும், அருவிகளும் இருக்கின்றன.

இந்தக் கிராமங்கள் அனைத்தும் சில தசாப்தங்களுக்கு முன்புவரை தமிழர்களுடையதாய் இருந்தவைதான். இப்போது வெலிஓயா என்கிற தேர்தல் வலயமாகி, சிங்கபுர, பதவியா, ஜனகபுர என சிங்கள பெயர் மாற்றம் பெற்றுவிட்டன. அதற்குள் பல கிளை கிராமங்களும், பாதைகளும், பௌத்த மத பீடங்களும், உருவாகிவிட்டன. எனவே அவை இப்போது சுத்தமான சிங்கள கிராமங்கள். வயதான மாடுகளில் காணப்படும் தமிழ் எழுத்துக் குறிகளைத் தவிர, தமிழர் வாழ்ந்ததற்கான எந்தச் சான்றுகளும் இல்லை.

**இந்தக் கிராமங்கள் அனைத்தும் சில தசாப்தங்களுக்கு முன்புவரை தமிழர்களுடையதாய் இருந்தவைதான். இப்போது வெலிஓயா என்கிற தேர்தல் வலயமாகி, சிங்கபுர, பதவியா, ஜனகபுர என சிங்கள பெயர் மாற்றம் பெற்றுவிட்டன. அதற்குள் பல கிளை கிராமங்களும், பாதைகளும், பௌத்த மத பீடங்களும், உருவாகிவிட்டன.**

இலங்கையில் பணியாற்றிய பாக்கர் என்கிற பிரித்தானிய தொல்பொருளியலாளர், இங்கு குறிப்பிடப்படும் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலையில் ஆதிகால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களுடன் கூடிய குகையும், கட்டட எச்சங்களும், கி.மு 3 ஆம் அல்லது கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் பிராமி கல்வெட்டுக்களும் காணப்படுவதாக 1889 ஆம் ஆண்டில் அவர் எழுதிய நூலொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவர் குறிப்பிடும் நூற்றாண்டுகளைத் தொடர்ந்து அங்கு தொடர்ச்சியான மனித நிலவுகை இருந்தமைக்கு சான்றுகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. பெருங்காடுகளும், மலைகளும், ஆதி தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களையும் இந்த எல்லைக் கிராமங்களில் இப்போதும் காணலாம். பின்னர் இடையிலிருந்து அதாவது சோழர்கால தமிழ் பண்பாட்டுத் தொடர்ச்சியின் பல்வேறு எச்சங்களைப் பார்க்க முடியும்.

வன்னி முழுவதும் ஆங்காங்கே வாழ்ந்த தமிழர்கள் உள்ளூரளவில் நிலச் சுவாந்தவர்களாகவும், கிராமங்களையும், குளங்களையும் உரிமையாகக் கொண்டவர்களாகவும் சுயாதிபத்தியத்துடன் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு கிராமத்தாரும் தன் சுற்றத்து "நடைமுறைகளை" மிக இறுக்கமாக கடைபிடித்தமையால், யாராலும் அதற்குள் ஊடுருவ முடியவில்லை. ஆனால் அனைவரும் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் கூடினார்கள். வற்றாப்பளை கண்ணகி அம்மன் பங்குனித் திருவிழாவில்தான் வன்னி மக்களின் மொத்த சந்திப்பும் நடந்தது.

இப்படியேதான், 1970 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு தமிழர்கள்தான் வாழ்ந்திருந்தார்கள். அனுராதபுரம், பொலநறுவைக்கு அப்பாலான தென்னிலங்கையின் சிங்கள தேசத்தையும், ஜம்புகோளப் பட்டினத்தில் இருந்து தெற்காக நீண்ட தமிழர்களின் தேசத்தையும் பிரித்து நின்றவையே இத்தகைய கிராமங்கள். தணிக்கல், டொலர்பாம், ஹென்பாம், (பிற்கால காரணப்பெயர்கள்) என்பவற்றை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவை குறுநில அமைப்பு முறையில் தனி நபர்களால் உரித்துடையனவாக இருந்தன.

அந்தக் காலத்து ஊர் உரிமையாளர்களை, அங்கு வாழ்ந்த ஒருவர் இப்படித்தான் நினைவு கூர்கின்றார்,

"கொழும்பு தமிழ் முதலாளியின் 500 ஏக்கர் ஹென் பாம், மாவிட்டபுரம் தமிழ் முதலாளியின் 500 ஏக்கர் டொலர் பாம், தம்பு றொபினுடைய 1000 ஏக்கர் சிலோன் தியேட்டர். அல்வாய் தமிழ் முதலாளியின் 1000 ஏக்கர் சரஸ்வதி பாம், நீதிராஜாவின் யானை பீடி கொம்பனி பாம், தனிய ஒருத்தருக்குச் சொந்தமான தனிக்கல்லு". "இதுக்கு இஞ்சால ஒதியமலை, பட்டிக்குடியிருப்பில் நெருக்கமாகச் சனம் இருந்தது. இந்தப் பக்கமிருந்து சனம் அங்கால வயல் விதைக்கவும், வேலை செய்யவும், வேட்டைக்கும், மாடுசாய்க்கவும் போய் தங்கி நிண்டுவருவினம். அங்கயும் வீடுகள் இருந்தன".



ஆனால் அங்க இருந்த தமிழ் முதலாளிமார் சிலபேர் மோசமானவங்களா இருந்தாங்கள்.

ஏரம்பு குறிப்பிடுவதுபோல இங்கு இருந்த ஒவ்வொரு கிராமமும் 1000 ஏக்கர்களுக்கு அப்பாலும் பரப்பைக் கொண்டு நீண்டது. வயல்களும், தோட்டக் காணிகளும், பட்டிபட்டியான மாடுகளும் அனைத்துக் கிராமங்களிலும் இருந்தன. வள மிகுதியினால் செழிப்புக்கு பஞ்சமிருக்கவில்லை.

மறுபுற எல்லையில் வாழ்ந்த சிங்களவர்களுக்கோ பொருளாதார ரீதியில் பெரும் பிரச்சினை இருந்தது. நூற்றாண்டு காலமாக இராசதானிகளாக இருந்த மையங்கள் வளமின்றி வறண்டுபோய்க் கிடந்தன. எனவே தமிழ்க் கிராமங்களுக்குள் ஊடுருவி இரவோடு இரவாக மாடுகளை சாய்த்துப் போவதும், விளைந்த பயிர்களை கொள்ளையடித்துப் போவதும் நடந்தது. திருடிச் சென்ற மாடுகளை மறுநாள் தமிழர்கள் சென்று மீட்டு வருவதும், அதற்காக அடிதடியில் இறங்குவதுமான சம்பவங்கள் தொடர்கதையாக இருந்தன.

இந்த சந்தர்ப்பத்தில்தான் (1980) இலங்கை அரசியலில் கூர்மையான இனவாதமும், தமிழர் நிலங்களை அபகரித்துக் கொள்ளும் சதித் திட்டங்களும் நடைமுறைக்கு வந்தன. இவ்வாறு தமிழரின் பூர்வீக நிலங்களில் திட்டமிட்ட வகையில் சிங்களவர்களை குடியேற்றம் செய்யும் முறையை டீ.எஸ். சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்தனா, சிறில் மத்தியூஸ், காமினி திசாநாயக்க, என்.ஜீ.பி. பண்டித ரத்ன போன்றோர் தொக்கி முன்னெடுத்தவர்களாவர்.

இந்தக் குடியேற்றங்கள் தமிழர்களின் எல்லையோரக் கிராமங்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கின. பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை கிராமங்களுக்குள் இரவு நேரத்தில் திடீரென ஊடுருவும் பெரும்பான்மை இனத்தவர்கள், கொள்ளையடித்தும், வீடுகளை தீக்கிரையாக்கியும் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இதற்குப் பயந்து இரவு வேளைகளில் மக்கள் தம் ஊர்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுவதும், காடுகளுக்குள் சென்று மறைந்து வாழ்வதும், ஆண்கள் வயல்காவல், வேட்டை முதலான தொழில்களை தவிர்த்து வந்ததும், இதனால் மிகத் தொலைவாக, சிங்கள எல்லைகளுக்கு அருகில் இருந்த வயல் காணிகள் காடாகியமையும் நடந்தது.

ஆனாலும் தமிழர்கள் அந்த நிலத்தைவிட்டு வெளியேறவில்லை. திருப்பிப் போராடியும், பின்வாங்கி மீளச் சென்றும் அங்கேயே வாழ்ந்தார்கள்.

அப்போதுதான் வெலி ஓயா குடியேற்றத்திட்டம், மகாவலி அபிவிருத்தி குடியேற்றத்திட்டம் நடந்தது. அங்கு குடியேற்றப்பட்டவர்கள், இலங்கை சிறைகளில் மோசமான குற்றங்களுக்காக தண்டனை பெற்ற கைதிகளாக இருந்தனர். பதவியாவை அண்டிய இந்தக் குடியேற்றத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை போல குடியேறிகள் குடியேற்றப்பட்டார்கள். அவர்கள் கொள்ளையடிப்புக்காகவும், தமிழர்களை அங்கிருந்து விரட்டியடிப்பதற்காகவும், மிக மோசமான வன்முறைகளிலும் ஈடுபட்டார்கள். வீட்டோடு எரியூட்டினார்கள். ஆண்களைப் பிடித்துச் சென்று குளக் கரைகளில் வெட்டிப் போட்டார்கள். வேட்டைக்குச் சென்ற ஆண்கள் தலையற்ற முண்டங்களாக காடுமுழுவதும் கிடந்தார்கள். இரவிரவாக காடுகளுக்குள் நுழைந்து, மரங்களிலும், புதர்களிலும் மறைந்திருக்கும் சிறைக்கைதி குடியேறிகள், வேட்டைக்குச் செல்லும் தமிழ் ஆண்களையும், மாடு சாய்க்க செல்பவர்களையும் கழுத்தறுத்து கொன்று விடுவர். கொன்றுவிட்டு, முண்டமாகக் கிடப்பவரின் ஆடையை அணிந்துகொண்டு, தாம் அணிந்திருக்கும் சிறை ஆடையை முண்டத்துக்கு அணிவித்துவிட்டு தப்பித்துச் சென்றுவிடுவர். இந்தக் கூரூரமான கொலைகள் தமிழ் மக்களை அல்லோலகல்லோலப்படுத்தியது. அதற்கான பதில் வன்முறைகள் தடியடி, வாள்களில் தொடங்கி, மிருகங்களுக்கு வைக்கும் பொறிகளைக் கடந்து, கட்டுத் துவக்கு, இடியன், சொட்கன் துப்பாக்கிகள் வரையில் வளர்ந்தது. பொறுமையிழந்த தமிழர்கள் ஒருநாள் இரவு சிங்கள கிராமங்களுக்குள் புகுந்து பலியெடுத்து விட்டுத் திரும்பினர். அதற்குப் பழிவாங்க சிங்களவர்களும் தயாரானார்கள்.

(தொடரும்.....)

# தூக்குக் கயிற்றின் முனையிலிருந்து



**ஒரு மனிதன் பிறந்தபோது நல்லவற்றையோ கெட்டவற்றையோ அறிந்து கொள்வதில்லை. அவனின் சூழல்கள் அவன் சார்ந்த சமூகத்தின் நிலைமைகளே அவனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றுகிறது.**

-கவிமகன்-

அன்புடன் அம்மா...! நான் பண்ணியது தப்பு. இதை நான் இப்போதுதான் உணர்கிறேன். எனது வயதும் இணைந்திருந்த நட்புக்களும் என்னை இந்த பாதக செயலைச் செய்யத்தூண்டியது. ஆனால் அதன் விளைவுகளை நான் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறி இந்த அரசின் சமர்ப்பணங்களுக்கு இடையில் நான் மரணத்தின் வாசலில் நின்று இதை உங்களுக்கு எழுதுகிறேன். நான் மீண்டும் உன் வயிற்றில் பிறக்க வேண்டும். அப்போதாவது இந்தப் பிறவியில் உனக்கு செய்த நம்பிக்கைத் துரோகத்துக்கான மாறுதல்களை, பணிவிடைகளைச் செய்து உங்கள் கடன் நான் தீர்க்கவேண்டும். என்னை மன்னித்து விடுங்கள்.

என் உறவுகள் உங்களை என்னைப் பெற்றதற்காகக் கேவல மான ஒருத்தியாக பார்ப்பார்கள். என் மனக்கண்ணில் அது தெரி கிறது அம்மா. ஆனால் என்னைப் பெற்றதால் நீங்கள் கெட்டவளாகிவிட முடியாது. ஒரு மனிதன் பிறந்தபோது நல்லவற்றையோ கெட்டவற்றையோ அறிந்து கொள்வதில்லை. அவனின் சூழல்கள் அவன் சார்ந்த சமூகத்தின் நிலைமைகளே அவனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றுகிறது. இந்த நிலையில்தான் நான் உங்கள் வளர்ப்பின் தத்துவத்தை, முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாது நண்பர்கள் மீது அதீத நம்பிக்கை கொண்டு இந்தக் காரியத்தை செய்யத் தொடங்கினேன். அப்போது கூட நீங்கள் கூறும் எந்த வார்த்தைகளும் எனக்குப் புரியவில்லை ஆனால் இப்போது நான் உங்கள் பிள்ளையாக வாழ ஆசைப்படுகிறேன்.

என்னைப் பெற்றவர் நீங்கள் எதை எதிர்பார்த்தீர்களோ அப்படி இந்தக் கம்பிக்கூட்டுக்குள் நான் வாழ்ந்து கொண்டி ருக்கிறேன் அம்மா. " கற்றலும் கற்றதை கற்பித்தலும் வாழ்வின் சிறப்பான ஒன்று" அதை இப்போது தான் என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது. உங்களுடைய அனைத்து நம்பிக்கைகளையும் உடைத் தெறிந்த அந்த சம்பவத்துக்குப் பின் உங்கள் வார்த்தைகள் மீது நம்பிக்கையும் புரிந்துணர்வும் வந்து கொண்டது. அதன் பின்பே நான் என்னையும் உங்களையும் உணர்ந்து கொண்டேன். எனக்குத் தரப்பட்ட தண்டனையின்படி நான் வாழும் நாட்கள் சிறிது. அதை நான் உங்களுக்காக வாழ ஆசை கொண்டேன். அதனாலேயே என் சிறைக்கூண்டையே கல்விக் கூடமாக்கினேன். சிறப்பு வரைவியல் பட்டதாரி ஆகினேன்.

அம்மா கற்றதை மற்றவர்க்குப் பகிர்ந்து அவர்களுக்கு ஆசிரியராக மாறினேன். என் வாழ்க்கையின் அந்த முடிவுகாலம் வரை சிறைக்கூண்டில் அடை பட்டுக் கிடந்தவர்களுக்கு ஒரு முன்னு தாரணியாக வாழ்ந்து காட்ட முனைப்புக் கொண்டு வாழ்ந்து வருகிறேன். சட்டம் என்னை இந்த உலகை விட்டு பிரித்தாலும், நான் இந்த சிறைக்கூண்டில் உங்களுக்காக செய்த நற்காரியங்கள் எப்போதும் என் நினைவுகளை சுமந்து நிற்கும். என்னைச் சுற்றி இருக்கும் ஒவ்வொரு தடுப்புக் கம்பிகளும் என் வரைதலையும் என் ஆசிரியத்துவத்தையும் ஆண்டாண்டு காலமாக இந்த உலகிற்கு கூறிக் கொண்டே இருக்கும், இந்த சிறைச்சாலை எனது வாழ்க்கையின் போக்கை மாற்றிய ஒரு புள்ளியாகவே நான் பார்க்கிறேன்.

இந்த இடத்தில் நான் ஒரு முக்கிய மகிழ்வான தருணத்தைக் குறிக்க விரும்புகிறேன். அம்மா நான் வரைந்த படங்கள் சிறந்த பரிசைப் பெறுவதற்கான போட்டியொன்றிற்கு அனுப்பப்பட்டது. அப்போது என் திறமையைக் கண்ணுற்ற இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு சிறந்த ஓவியர் சிறைச்சாலை வந்திருந்தார். வந்திருந்தது மட்டுமல்ல, எனக்கு வரைதலில் சிறப்புப் பயிற்சியும் தந்து வாழ்த்திச் சென்றார். அன்று அவர்கூட சொல்லிச் சென்றார் அம்மா, நீ வாழவேண்டியவன் என்றும் சாதிக்க வேண்டியவன் என்றும். ஆனால் என் வாழ்க்கை நாட்கள் நீளமானவை அல்ல, மிகக் குறுகியவை. அதனால் அந்த வாழ்நாட்களில் அவரது வார்த்தைகளை மெய்ப்பிக்க முயல்கிறேன்.

தண்டனைகள் ஒருபுறம் இருக்கும் போதும் அந்தத் தண்டனைகளையும் மீறி எமது வாழ்க்கையை ஒரு நிலைக்கு மாற்றும் திசைகாட்டியாக இந்த சிறைச்சாலையை நான் மாற்றிக் கொண்டேன். அதனாலோ என்னவோ என் கடைசி நேரத்தை பிரயோ சனமானதாக இந்த வரலாற்றில் பதிவு செய்தேன். எனது இந்த இறுதி வாழ்க்கைக் காலம் என் சார்ந்தவர்கள் அனைவருக்கும் ஒரு பாடத்தை சொல்லிச் செல்லும் என்று நான் முழுமையாக நம்புகிறேன். அம்மா தூக்குக் கயிற்றின் முனையில் நின்று கொண்டே இந்த வரிகளை நான் உங் களுக்காக எழுதியுள்ளேன். இது என் மரண வாக்குமூலமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் நியத்தில் நாம் இந்த மரணத் துக்கு உரித்தானவர்கள் அல்ல. அம்மா அதை இந்த நாட்டு அரசு புரிந்து கொண்டு என் மீது சிறு இரக்கம் காட்டினாலும் என் உயிர் பிரியாது இந்த கம்பிகூட்டுக்குள் சுற்றி வரும். அது நடக்குமா? என்பது தான் புரியவில்லை. இருப்பினும் எதிர் பார்ப்போடு காத்திருக்கிறேன். என் அப்பா, தம்பி, தங்கை, உறவுகளை நலமுடன் வைத்திருங்கள். என் வாழ்க்கையை அவர்களுக்கு எடுத்துரையுங்கள். அவர்கள் வாழ்வின் படிக்கல்லாக நான் எப்போதும் இருப்பேன் அம்மா.

இன்று நாளை, நாளை மறுநாள் என்று எப்போதோ ஒரு நாள் என் மீது விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை நிறைவேற்ற இந்த அரசு கட்டாயம் முயலும். ஆனாலும் உங்களின் வேண்டுகைகள் சிலசமயம் அவர்களின் செவிகளில் மாறுதல்களை ஏற்படுத்தாதா என்று ஏக்கம் கொண்டுள்ளேன். அம்மா நான் பண்ணி இருக்கும் அந்த குற்றத்துக்கு மரணம் தான் தண்டனை என்பதில்லை என்பதும் என் நிலை அறிந்து கேட்கும் தண்டனைக் குறைப்புக்கும் நான் பொருத்தமானவன் என்பதும் அந்த நீதித்தாய்க்கு மட்டுமே தெரிந்த உண்மை. அவள் கண் திறந்தால் நான் உங்கள் மகனாக எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பேன் அம்மா. இல்லை என்றால் உங்கள் மகனாகவே உங்களை விட்டு தூர தேசம் கண் காணாத நீங்கள் தேடி வர முடியாத இடத்துக்கு சென்றுவிடுவேன் அம்மா.

மரண தண்டனை கட்டாயம் தேவைப்படுகிறது என்று ஒரு சாராரும், இது போல் ஒரு தண்டனை வேண்டியது இல்லை என்ற கோட்பாடுடைய ஒரு சாராரும் சர்வதேச அளவில் இருக்கும் இன்றைய காலத்தில், ஐ.நா உறுப்பு நாடுகளும், ஐ.நா பார்வையாளர் அந்தஸ்து உடைய் நாடுகளுமான 195 நாடுகள் கீழ்வரும் கொள்கையை பின்பற்றுகின்றன. உலகின் 90வீதமான நாடுகள் சர்வதேச மன்னிப்புச் சபையின் கொள்கைகளுக்கு அமைவாக இயங்குகின்றன. அவற்றில் 51 வீதமான நாடுகள் மரணதண்டனையை ஒழிக்க வேண்டுமென விரும்புகின்றன, இதில் 4 வீதமான நாடுகள் விதிவிலக்கான சூழ்நிலைகளில் (அதாவது போர் நேரம் போன்ற) குற்றங்களைத் தடுக்க மரணதண்டனையை விரும்புகின்றன. 25 வீதமான நாடுகள் சாதாரண குற்றங்களுக்காக மரணதண்டனை பயன்பாட்டை அனுமதிக்கின்றன.

இந்த நிலையில் இந்த அரசு மரணதண்டனையை கொடூரமான தண்டனையாக இப்போதும் நடைமுறையில் வைத்திருப்பது என் மனதை வாட்டுகிறது அம்மா. மரணதண்டனை உண்மையில் வேண்டுமா என்று நோக்கும்போது நாம் பல வகையான விளைவுகளை ஆராய வேண்டிய நிலைக்குச் செல்கிறோம். பிறப்பெடுத்த எந்த உயிரையும் சாகடிக்கும் எந்த உரிமையும் யாருக்கும் இல்லை என்பது மிக முக்கியமாக நாம் நோக்க வேண்டிய விடயமாகிறது. சட்டம் ஒன்றை இயற்றுவது மூலம் ஒரு மனித உயிரை சாகடிப்பது என்பதும் ஒரு பாரிய குற்றம் என்றே நோக்க வேண்டும். இந்த வகையில் மரணதண்டனைகளை இல்லாது ஒழித்து. பாரிய குற்றம் புரிபவர்கள் வேறுமாதிரியான தண்டனைகளை அடைவதற்கு அந்தச் சட்டங்கள் வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்பதுவே இப்போது என் மனதில் எழும் இறுதி ஆசை. என்னைப் போல இன்னொருவர் மரணத்தின் வாசலில் நின்று கொண்டு இப்படியான மடல்களை வரைதல் வேண்டாம் அம்மா.

உங்கள் மடி மீது தலை வைத்து ஆறுதல் கொள்ளவேண்டும் என்று மனதில் ஆசை துளிர்க்கிறது. ஆனாலும் என் நினைவில் நிறைந்தவளே! என் தாயே! என் கம்பிக்கூண்டுக்குள் கம்பிக் கட்டிலில் தூங்கும் ஒவ்வொரு மணித்துளியும் என் நினைவில் உந்தன் மடி சுகமே. அம்மா உடலும் மனதும் மரத்துப்போய் வலி கண்டாலும், நினைவுகள் மட்டும் உங்களைச் சுற்றி எப்போதும் பசுமையாக இருக்கிறது அம்மா... என்னால் தொடர முடியவில்லை. தயவு செய்து உங்கள் மகனை மன்னித்துவிடுங்கள். முடிந்தால் நீங்கள் வணங்கும் கடவுள் ஆசீர்வாதம் இருந்தால் மறுபடியும் இன்னொரு மடலுடன் தொடர்கிறேன். இப்போது நான் உங்களை விட்டுப் பிரிகிறேன் வணக்கம் தாயே, சென்று வருகிறேன்....

01.04.2015 இது நம்தேசம்

# கர்ப்பிணிகளுக்கு நிறைய ஓய்வு தேவை

(சென்றவாரத் தொடர்ச்சி....)

அதே நேரத்தில் கர்ப்ப காலத்தில் உங்கள் உடலுக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது. இச்சக்தி போதியளவு கிடைக்காத நேரத்திலும் தலைச்சுற்று ஏற்படுகின்றது. உதாரணமாக நீண்ட நேரம் சாப்பிடாது இருந்தாலோ, விரதங்களைக் கடுமையாக அனுஷ்டித்தாலோ உங்கள் இரத்தத்திலுள்ள சக்தியின் அளவு குறைந்து அதனால் மூளைக்குப் போதிய சக்தி செல்லாது தலைச்சுற்று ஏற்படலாம். எனவே கர்ப்பமாக இருக்கும் போது உணவுகளைப் புறக்கணிக்காது போஷாக்குள்ள உணவு களை நேரம் தவறாது உட்கொள்ளுங்கள்.

இக் காரணத்தால் தலைச்சுற்று ஏற்பட்டால் சிறிதளவு குளுக்கோஸ் சாப்பிடுங்கள் தலைச்சுற்றுக் குறைந்து விடும்.

**தலையிடி**

தலையிடி அடிக்கடி ஏற்படுவதில்லை. எனினும் இது பற்றி அறிந்திருத்தல் மிகவும் முக்கியமானது. நீண்ட நேரம் தைப்பது, வாசிப்பது, அல்லது ரீ.வி. பார்ப்பதால் கண்களுக்கு அதிக வேலைப்பளு ஏற்பட்டு சோர்வடைந்து, அதனால் சிறுதலையிடி ஏற்படலாம். இதன் காரணமாக கண்களுக்கு நீண்ட நேர வேலை கொடுப்பதைத் தவிருங்கள்.

ஆயினும் கடும் தலையிடியோ அல்லது விடாது இடிக்கும் தலையிடியோ இருந்தால் அது பாரதூரமானதாகும். ஏனெனில் இத்தலையிடி கர்ப்பகால வலிப்பின் முன் நிலையின் முதல் அறி குறியாக இருக்கலாம். இச் சந்தேகம் ஏற்பட்டால் வைத்தியரை உடனடியாகக்

**கர்ப்பத்தில் உங்கள் வயிற்றில் பெரும் பகுதியை, கர்ப்பப்பை பிடித்துக் கொள்கிறது. இதனால் ஒரே நேரத்தில் அதிக உணவை உட்கொண்டால் வயிற்றில் முட்டுத் தன்மை ஏற்பட்டு உணவு சமிக்காத உணர்வு ஏற்படுகிறது. அத்துடன் வயிற்றில் ஏற்படும் அமுக்கம் காரணமாக இரைப்பையில் சுரக்கும் அமிலம் மேலெழுந்து நெஞ்சிலுள்ள உணவுக் குழாய்க்குள் வரக்கூடும். இது நெஞ்செரிவை ஏற்படுத்தும்.**

காணவேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

**எளிதில் களைப்படைதல்**

பல கர்ப்பிணிப் பெண்கள் தங்களால் முன்பு போல் வேலை செய்ய முடியவில்லை என்றும் தாங்கள் விரைவில் களைப்படைந்து விடுவார்கள் என்றும் கூறுவார்கள். அதிலும் முக்கியமாக முதல் ஓரிரு கர்ப்பங்களைவிடப் பிந்திய கர்ப்பங்களிலேயே இக்களைப்பைக் கூடுதலாக அவதானிக்கிறார்கள்.

கர்ப்பகாலத்தில் பெண்களின் நிறை முன்பு எப்போதும் இல்லாதவாறு திடீரென அதிகரிப்பதும், பிந்திய கர்ப்பங்களின் போதும் அவர்களுடைய உடல் தளர்ச்சியடைவதும் இதற்குக் காரணமாகும்.

## தாயாகப் போகும் உங்களுக்கு – 6



கர்ப்பிணிகளுக்கு நிறைய ஓய்வு தேவை. இந்த ஓய்வை முறித்து அதீதமாக வேலை செய்தாலும் களைப்பு ஏற்படலாம். எனவே தேவையான ஓய்வை எடுத்துக் கொள்ளுங்கள். செய்யும் வேலைகளிலும் அதிக அவசரம் காட்டாது ஆறுதலாக நிதானமாகச் செய்து களைப்பைக் குறையுங்கள்.

**நாரிப் பிடிப்பு**

நாரிப் பிடிப்பு மிக அதிகமான கர்ப்பிணிகளுக்கு மிகச் சகஜமாக ஏற்படும் பிரச்சினை என்று கூறலாம். கர்ப்பமாய் இருக்கும் காலம் முழுவதும் மாத்திரமின்றி பிரசவத்தின் பின்னரும் கூட ஒரு மாத காலம் வரை இது தொடரலாம்.

மூட்டுகளுக்கு இடைப்பட்ட சவ்வுகள் இளக்கமடைவதாலும், முற்பக்கமாக பருக்கும் வயிற்றின் காரண மாக முதுகு பின் பக்கமாக வளைவதாலும் நாரிப்பிடிப்பு ஏற்படலாம்.

இதைத் தடுப்பதற்கு நிற்கும் போதும் இருக்கும் போதும் முதுகை வளையவிடாது நிமிருங்கள். கீழிருக்கும் பொருட்களை எடுக்கும்போது முதுகை வளைத்துக் குனியாது முழங்காலை மடித்து சிறிது உட்கார்ந்து எடுங்கள். இந்த நடைமுறைகளை அவதானித்து நடந்தீர்களேயானால் நாரிப் பிடிப்பு உங்களுக்கு ஏற்படாது.

ஒருவேளை நாரிப்பிடிப்பு ஏற்கனவே ஏற்பட்டிருந்தால் இந்த நடைமுறைகள் அது மேலும் அதிகரிக்காமல் தடுக்கவும் உதவும். சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுப்பதும் நாரிப்பிடிப்பைக் குறைக்க உதவக் கூடும்.

**நெஞ்செரிவு**

இது பொதுவாக கர்ப்பத்தின் பிற்பாதிக் காலத்தில் தான் அதிகமாக ஏற்படும். உணவு சமியாத தன்மையும் மேல் வயிற்றில் எரிவுத் தன்மையும் ஏற்படக்கூடும். இந்த மேல்வயிற்று எரிவு சில வேளைகளில் மேலெழுந்து தொண்டை வரை பரவக்கூடும்.

கர்ப்பத்தில் உங்கள் வயிற்றில் பெரும் பகுதியை, கர்ப்பப்பை பிடித்துக் கொள்கிறது. இதனால் ஒரே நேரத்தில் அதிக உணவை உட்கொண்டால் வயிற்றில் முட்டுத் தன்மை ஏற்பட்டு உணவு சமிக்காத உணர்வு ஏற்படுகிறது. அத்துடன் வயிற்றில் ஏற்படும் அமுக்கம் காரணமாக இரைப்பையில் சுரக்கும் அமிலம் மேலெழுந்து நெஞ்சிலுள்ள உணவுக் குழாய்க்குள் வரக்கூடும். இது நெஞ்செரிவை ஏற்படுத்தும்.

எனவே ஒரே நேரத்தில் அதிக உணவை வயிறு நிறைய உட்கொள்ள வேண்டாம். சிறுசிறு அளவான உணவை இடையிடையே சாப்பிடுங்கள். அத்துடன் உணவு உட்கொண்டவுடன் படுக்கையில் சரிய வேண்டாம். சிறிது

- டாக்டர் எம்.கே.முருகானந்தன் -

நேரம் உலாவிவிட்டுப் படுங்கள். அல்லது சிறிது நேரம் நிமிர்ந்து உட்கார்ந்து ஆறுதல் எடுத்தபின் படுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் நெஞ்செரிவு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

படுத்திருக்கும் போது நெஞ்செரிவு உண்டானால் எழுந்து சிறிது நேரம் உட்காருங்கள். நெஞ்செரிவு மறைந்து விடும்.

காரம் நிறைந்த உணவுகளும் கறுவா, ஏலம், கராம்பு போன்ற வாசனைச்சரக்குகள் நிறைந்த உணவு களும் நெஞ்செரிவை ஏற்படுத்தலாம், அல்லது அதிகரிக்கச் செய்யலாம். அதே போல டிஸ்பிரின், அஸ்பிரின் போன்ற மாத்திரைகளும் நெஞ்செரிவை ஏற்படுத்தலாம். எனவே இத்தகைய உணவு வகைகளையும் மாத்திரைகளையும் தவிருங்கள்.

நெஞ்செரிவு ஏற்பட்டால் ஒரு கோப்பை பால் அருந்துங்கள். இதுவும் நெஞ்செரிவைக் குறைக்கும்.

இதற்கு நெஞ்செரிவு குறையாவிட்டால் உங்கள் குடும்ப வைத்தியரிடம் செல்லுங்கள். அவர் இரைப்பையின் அமிலத் தன்மையைக் குறைக்கச் செய்யும் மாத்திரைகளைத் தருவார். இதைச் சப்பிச் சாப்பிட்டால் நெஞ்செரிவு குறைந்துவிடும்.

**மலச்சிக்கல்**

கர்ப்பமாயிருக்கும் காலத்தில் அதிகமான பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மலச்சிக்கல் முக்கியமானது. சரியான உணவு முறை களைக் கடைப்பிடிப்பதன் மூலம் மலச்சிக்கல் ஏற்பட்டால் தடுக்கலாம். முன்பு உணவு, நீராகாரம் என்ற பகுதிகளில் சொல்லப்பட்ட குறிப்புக்கள் உங்களுக்கு உதவும்.

உணவில் மரக்கறி வகைகளைத் தாராளமாகச் சேருங்கள். பழவகைகளை தினசரி உண்ணுங்கள். அதிகளவில் நீர் அருந்துங்கள். இவை மலச்சிக்கலைத் தவிர்க்கும்.

கடுமையான மலம் இளக்கிகளையோ, பேதி மருந்துகளையோ பயன்படுத்த வேண்டாம். ஏனெனில் இது பிரசவ வேதனையை உரிய காலத்திற்கு முன்னரே உண்டாக்கலாம்.

ஆயினும் மலச்சிக்கல் மிகக் கடுமையாக இருந்தால் உங்கள் வைத்தியர் உங்களுக்கு காரமற்ற பாதுகாப்பான மலமிளக்கிக் குளிசைகளைத் தரக்கூடும். ஆனால் மலச்சிக்கலைத் தீர்க்க எண்ணெய் வகைகளை உட்கொள்வது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் இவை உணவுக் குழாயிலிருந்து உணவு வகைகள் உறிஞ்சப்படுவதை இடையூறு செய்யும்.

(தொடரும்.....)



# 19ம் திருத்தச்சட்டத்திலிருந்து ஜனாதிபதியின் அதிகாரங்கள் முழுமையாக நீக்கப்படவில்லை

## சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்த்தனாவுடன் ஒரு நேர்காணல்

நேர்கண்டவர் - ருக்மால் சில்வா

இது நம் தேசத்திற்காக
தமிழில் – நட்டாஷா ராஜ்குமார்
நன்றி – ராவய

**19ம் திருத்தச்சட்டம் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

19ம் திருத்தச்சட்டம் தொடர்பாக பேசும் பொழுது ஒரு சில காரணிகள் மட்டில் மாத்திரமே எம்மால் திருப்தியடையலாம். ஏனெனில் இத்திருத்தச்சட்டத்தின் அடிப்படை யில் சட்டம், நீதி மற்றும் நிர்வாகத்துறை ஆகிய மூன்று துறைகளிலேயும் சம அள வில் அதிகார பகிர்வு தொடர்பாக ஏதேனு மொரு மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறலாம். உண்மையாகவே இது வொரு நல்ல விடயமாகும். தேர்தல் ஆணைக்குழு மற்றும் 17ம் திருத்தச்சட்ட ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளை மீண்டும் 19ம் திருத்தச்சட்ட ஆணைக்குழு மூலமாக நடைமுறைப் படுத்துவதென்பது அனைவருக்கும் நன்மை பயக்கும் காரணியாகும்.

> ஜனாதிபதிக்கு அதிகபட்ச அதாவது எல்லை மீறிய அதிகாரங்களை வழங்கியமையே 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் காணப்படுகின்ற மாபெரும் குறைபாடாகும்.

அரசியல் யாப்பு பரிசீலனைச் சபையினை மீண்டுமொருமுறை அரசியல் யாப்பின் ஒரு பகுதியாக உள்ளெடுத்துள்ள மையினால் ஜனாதிபதி தான் விரும்பிய வாறு எதேச்சாதிகாரமான முறையில் அரச நிறுவனங்களுக்கான நியமனங்களை மேற் கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் 19 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பிலான வாத விவாதங் களின் பொழுது இது கருமையானது என்றோ அல்லது வெண்மையானதென்றோ இலகுவில் விவாதிக்க இயலாது.

**நிறைவேற்று அதிகாரத்தை நீக்கல் தொடர்பாக உங்களது அபிப்பிராயம் என்ன?**

ஜனாதிபதிக்கு அதிகபட்ச அதாவது எல்லை மீறிய அதிகாரங்களை வழங்கி யமையே 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் காணப்படுகின்ற மாபெரும் குறை பாடாகும். இவ்வரசியல் யாப்பின் பயங்கர தன்மையினை 20 ஆண்டுகளிற் குப் பின்னரும் நாம் சரிவர அறிந்திருக்க வில்லை. இவ்வரசியல் யாப்பினுள் உள்ள டங்கிய சில விடயங்கள் தொடர்பாக 19ம் திருத்தச்சட்ட பிரேரணையில் ஆழமாக ஆராயப்பட்டிருக்கவில்லையாயினும் நிறை வேற்று ஜனாதிபதிக்குப் பதிலாக நிறை வேற்று அதிகாரமுள்ள பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுவதனை 19ம் திருத்தச் சட்டத்தின் முதற் பிரதி தெளிவாக எடுத்தியம்பியுள்ளது.

78ற்கு முன்னர் 72ம் ஆண்டில் காணப்பட்ட அரசியல் யாப்பினை இலங்கை யின் சிறந்த அரசியல் யாப்பெனக் கூற இயலாது. 72ம் அரசியல் யாப்பின்படி அரச அதிகாரிகள் அனைவரும் முழுமையாகவே அரசியல் செயற்பாடுகளிற்குள் சிக்குண்டி ருந்ததுடன் நீதித்துறையும் அரசியல் செயற்பாடுகளிற்குக் கட்டுப்பட்டிருந்தது. பாரா ளுமன்றிற்கு முழுமையான அதிகாரங்களை எவ்வாறுவழங்குவதுஎன்பதே72ம்அரசியல் யாப்பில் காணப்பட்ட மாபெரும் பிரச்சினை யாகும். இவையனைத்திற்கும் மேலாக நீதித்துறையைக் காட்டிலும் பாராளு மன்றமே உயரிய இடத்தில் இருந்தது. ஆனால் 78ம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரகாரம் இவையனைத்தையும் காட்டிலும் உயரிய இடத்தில் செயற்படுபவராக ஜனாதிபதி திகழ்ந் தார். இச்செயல் முறையினை நாம் நிறுத்த வேண்டும். ஏனெனில் கடந்த முப்பது தொடக்கம் நாற்பது ஆண்டுகள் வரையில் இவ் எதேச்சாதிகாரம் காரணமாக நல்லதொரு பாடத்தைக் கற்றுக் கொண்டோம்.

இவ்வார ஆரம்பத்தில் அச்சிடப்பட்ட 19ம் திருத்தப் பிரேரணையில் நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமருக்கு கிடைக்கவிருந்த வரம்புக்கு மீறிய அதிகாரங்கள் தொடர் பான வாசகம் முழுமையாக நீக்கப்பட்டுள்ள மையானது மகிழ்ச்சிக்குரிய காரணி யாகும். நிறைவேற்று அதிகாரமிக்க பிரத மருக்கு ஏன் இவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்? அவ்வாறு வழங்கப் பட்டால் நிறைவேற்று ஜனாதிபதிக்கும் நிறைவேற்று பிரதமருக்குமிடையே வேறு பாடுகள் இராது.

**நிறைவேற்று பிரதமர் மற்றும் நிறை வேற்று ஜனாதிபதி ஆகிய இருவருக் குமிடையே மோதல்கள் ஏற்படுமென நீங்கள் கருதுகின்றீர்களா?**

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையே சம அளவிலான அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. எங்கள் நாடு பெற்றுக்கொண்ட வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் நிறை வேற்று ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங் கள் வழங்கியமையால் ஏற்பட்ட அழிவு களின் அடிப்படையில் மீண்டுமொருமுறை பிரதமருக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் வழங்குவது தவறான செயற்பாடாகவே நான் கருதுகின்றேன். மேலும் 78ற்கு பின்னர் நாங்கள் நிறைவேற்று ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கினோம். இவ்விரு காரணிகளும் அழிவிற்கு வழி கோலுபவையாக இருந்தமையினால் 19ம் திருத்தச்சட்டம் இப்பிரச்சினைகளிற்குத் தீர்வு வழங்கவேண்டும்.

இதில் பிரதான பிரேரணையாக அனைவரையும் சட்டத்தின் முன்னால் முன்னிலைப்படுத்துவதற்கான ஆற்றல் காணப்படவேண்டும். முன்னர் அரசர்கள் மட்டுமே தாம் சட்டத்திற்கு மேற்பட்ட வர்களெனக் கூறிக்கொண்டிருந்தார்கள். 78ம் ஆண்டு அரசியல் யாப்பில் அதிகாரம் தொடர்பான பிரச்சினையே பாரிய பிரச்சி னையாகக் கருதப்படுகின்றது. இலகு மொழி நடையில் கூறுவதாயின் ஜனாதிபதியினை நீதிமன்றின் முன்னிலையில் முன்னிறுத்த இயலாது என்பதாகும். ஜனாதிபதி தன்னு டைய பதவியிலிருந்து விலகியதன் பின்னர் தன்னுடைய பதவிக் காலத்தின் பொழுது இழைத்த குற்றங்களிற்காக நீதிமன்றின் முன்னால் ஆஜராக்க முடியாது. தற் போதைய ஜனாதிபதி தன்னுடைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் பொழுது 19ம் திருத்தச்சட்டத்தை முன் மொழிந்து அதனூடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையினை இல்லாதொழிக்கப்படுமெனக் கூறினார். ஆனால் 19ம் திருத்தச்சட்டத்தில் அவ்வாறான தொரு பாரிய மாற்றங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

மிகவும் சிறியளவிலான மாற்றங் களே இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங் களில் மாத்திரம் ஜனாதிபதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படலாம். இது பிரச் சினைக்குரிய காரணியாகும். மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் சட்டவரையறைகளிற்கு உட்பட்டு விசேட நீதிமன்றின் முன்னால் முன்னிலைப் படுத்தலாம். ஜனாதிபதியின் அனைத்து நடவடிக்கைகளும் மனித உரிமைகள் மீறல்கள் நடவடிக்கைகளுக்குள் உள்ளடக் கப்படாது. கடந்த 10 ஆண்டுகளாக இந் நாட்டிலிருந்த ஜனாதிபதிக்கெதிராக ஊழல், மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி யொருவர் குற்றமிழைத்தால் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்கு அதிகாரம் உள்ளது.

> எங்கள் நாடு பெற்றுக்கொண்ட வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கியமையால் ஏற்பட்ட அழிவுகளின் அடிப்படையில் மீண்டுமொருமுறை பிரதமருக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் வழங்குவது தவறான செயற்பாடாகவே நான் கருதுகின்றேன்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் தம் முடைய ஜனாதிபதி குற்றம் புரிந்துள்ளாரா வெனக் கூறும் அதிகாரம் நீதி மன்றிற் குள்ளது. 19ம் திருத்தப்பிரேரணையில் இவ் விடயம் உள்ளடக்கப்படவில்லை மற்றைய காரணி யாதெனில் ரிட் கட்டளையாகும். அதனடிப்படையில் ஏதேனுமொரு பலம் பொருந்திய நபர் அரசாங்க அதிகாரத் தைப் பயன்படுத்தி நீதிக்கு எதிராகச் செயற்படுவாராயின் சட்ட வரைமுறைகளிற்கு அமைவாக அவர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம்நீதிமன்றிற்குவழங்கப்பட்டுள்ளது. இலங்கை உச்ச நீதிமன்றத்தினது ஒருசில பலம் மிக்க தீர்ப்புக்களிற்கு அமைவாக ரிட் கட்டளையினையும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக நீதிமன்றம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய இரு செயற் பாடுகளும் இங்கே ஒருமிக்கப் பயணிக் கின்றது.

மனித உரிமைகள் தொடர்பாக மாத்திரம் அதிகாரத்தை விலக்குவது மட்டும் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணியல்ல. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் பொழுது மாத்திரம் அதிகாரத்தை முழுமை யாக அகற்றுவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் நடைமுறையில் அப்படியொன்றும் நடைபெறவில்லை.

**19ம்திருத்தச்சட்டத்திற்குள்உள்ளடங்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினை சக்தி மயப்படுத்தும் ஒழுக்கக் கோட்பாடுகளின் நன்மை தீமைகள் என்ன?**

முன்னர் இருந்த 17 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளரினால் இடப்படும் ஆணைக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்கள் செயற்படாதிருப்பின் அதற்கு மேற்பட்ட வகையில். தேர்தல் ஆணையாளரினால் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன் னெடுக்க இயலாது. 19ம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளருக்கு விசேட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவொரு நன்மை பயக்கும் அதிகாரமா கும். இவ்வாறான அதிகாரிகள் குற்றவியல் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய இயலும். இதுவோர் நன்மை பயக்கும் விடயமாகும்.

தேர்தல் காலங்களின் பொழுது வெகுசன ஊடகங்கள் மத்தியஸ்தம் வகித்து செயற்படுவது தொடர்பாக அறிவுறுத்தல் கள் வழங்கும் அதிகாரம் இத்திருத் தச்சட்டம் மூலமாக தேர்தல்கள் ஆணை யாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அனைத் துக் கட்சிகளையும் சமஅளவில் சாதா ரணத்துடன் செயற்படுமாறு ஆணையிடும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளது. ரூபவாஹினி மற்றும் சுயாதீன

(23 ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி மாற்றத்தை ஆட்சியைப் பலப்

**பொ**துத் தேர்தலுக்குப் பின்னர், இருபிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எண்ணப்பாட்டுடன் செயற்படுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அண்மையில் தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளன.

மைத்திரி அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டம் நிறைவுபெறுவதற்கு இன்னமும் சொற்பநாட்களே எஞ்சியுள்ள நிலையில் தேர்தல்கால வாக்குறுதியில் கூறப்பட்ட முக்கியமான விடயங்கள் கூட நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளான மீள்குடியேற்றம், அரசியற் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோர் தொடர்பிலான பிரச்சினை என்பவற்றுக்கான தீர்வைப் பெற்றுத் தருவதில் இந்த அரசாங்கம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களைப் போலத் தமிழ் பேசும் மக்களை அரசியல் பகடைக் காய்களாகப் பாவிக்கவே முற்படுகிறது என்பதே யதார்த்தம். இதற்குத் தற்போது இணக்க அரசியல் செய்வதாகக் காட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒருவகையில் துணைபோகிறது என்றே கூற வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசியல் வரலாற்றில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் தேசிய அரசாங்கம் நீடிக்குமா? இல்லையா? இதனால் தமிழ் மக்களுக்கு நன்மைகள் என்ன? தமிழ் அரசியல் கட்சிகள் புதிதாக அமைந்திருக்கும் தேசிய அரசாங்கம் தொடர்பில் எவ்வாறான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்? இது தொடர்பில் இது நம் தேசம் பத்திரிகைக்காகப் பல்வேறு தரப்புக்களையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் வழங்கிய கருத்துக்கள் அப்படியே வழங்குகின்றோம்.

### சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு நாம் வாக்களிக்கவில்லை

**யோசேப் ஸ்டாலின்**

**(தலைவர், இலங்கை ஆசிரியர் சங்கம்)**



நாம் புதிய அரசாங்கத்தை ஆதரித்தமை இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாமல் ஒழிக்கவுமே ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலள்ளவர்களுக்கு இந்தத் தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1994ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காகப் பல கட்சிகள் ஒன்றிணைந்து வாக்குக் கேட்டன. ஆனால், அந்தக் காலப்பகுதியில் அவர்களால் இதற்கொரு தீர்வு எட்டப்படவில்லை. இதனால் இதுவரை காலமும் இந்த நாட்டில் ஜனநாயகப் பண்பு இல்லாததொரு ஆட்சி முறையே நீடிக்க வேண்டியிருந்தது.

மைத்திரி அரசாங்கம் ஆட்சியமைப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தமையும் பிரதான காரணம். எனவே தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதுடன், நீண்ட காலமாக இழுபறி நிலையிலுள்ள இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வு முன்வைப்பதற்கும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தற்போது அரசாங்கத் தரப்பில் அங்கம் வகிக்கும் ஹெல உறுமய பிரிவினைவாதத்தை இல்லாமலாக்குவதற்கு உறுதியான ஜனாதிபதி அவசியம் எனக் கூறுகின்றது. இந்தக் கருத்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த தமிழ் பேசும் மக்களின் மனதைப் புண்படுத்துவதாயுள்ளது. இத்தகைய இனவாதக் கருத்துக்களை இல்லாமலாக்குவதற்குத் தமிழ் அரசியல் கட்சிகள் உறுதியானதோர் நிலைப்பாட்டிற்கு வரவேண்டியது அவசியம்.

### தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணயம் காக்க முன்வரவேண்டும்

**அருட்தந்தை மா.சக்திவேல்**

**கொழும்பு**

இதுவரை காலமும் ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் தங்களின் கட்சியை முதன்மைப்படுத்தித்தான் ஆட்சி நடாத்தி வந்தன. இதன் காரணமாக இந்த அரசாங்கங்களால் ஒட்டுமொத்த நாட்டிற்கும் எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. இதனுடைய உச்சக்கட்டமாகத்தான் முன்னைய மஹிந்த அரசாங்கம் செயற்பட்டது. இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் சூறையாடலும், பொதுச்சொத்துக்களைக் கொள்ளையாடலும், இனமதவாதமுமே கட்டியெழுப்பப்பட்டன. இவற்றால் போசிக்கப்பட்டவர்களே இன்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு எதையுமே கொடுத்துவிடக்கூடாது என நினைத்தவர்கள்தான் தற்போது புதிய வடிவமெடுத்து இந்தத் தேசிய அரசாங்கத்தை அமைத்திருக்கின்றனர். இந்த நிலையில் நோக்கும் போது புதிதாக நிறுவப்பட்டுள்ள தேசிய



அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வினையும் பெற்றுத் தரப்போவதில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரி மற்றும் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூடத் தமிழ் மக்களுக்குரிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க மறந்தவர்கள், 19ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் கூட எதனையும் சொல்ல விரும்பாதவர்கள் தேசிய அரசாங்கம் மூலம் எதனையும் பெற்றுத் தரப்போவதற்கு வாய்ப்புக்களில்லை. ஏனெனில் புவிசார் அரசியல் தான் இலங்கையின் அபிவிருத்தியையும், அரசியலையும் தீர்மானிக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் என்று தங்களை இனங்காட்டிக் கொள்பவர்கள் தம்முடைய வங்குரோத்து அரசியலைக் கைவிட்டுத் தமிழ் மக்களின் தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் காக்கின்ற பொதுவான அரசியல் நீரோட்டத்திற்கு வர வேண்டும்

### இனப்பிரச்சினைத் தீர்விற்கு தேசிய அரசாங்கம் உதவ வேண்டும்.

**அ.லோரன்ஸ்**

**மலையக மக்கள் முன்னணியின்**

**செயலாளர்**



இந்த நாட்டிலே 30 வருட காலத்திற்கும் மேல் நீடிக்கின்ற இனப்பிரச்சினைக்கத் தீர்வு ஏற்படாத நிலையில் இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேசிய அரசாங்கம் உதவுமானால் அதனை மலையக மக்கள் முன்னணி வரவேற்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினை என்பது வடகிழக்குத் தமிழர்களை முதன்மைப்படுத்தி, இந்த நாட்டிலேயுள்ள இன்னொரு தேசிய இனமான மலையக மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் பிரச்சினைகள் உள்ளடக்கப்பட்டு, அந்தந்த தேசிய இனங்களுடைய அபிலாஷைகளுக்காகவே தேசிய அரசாங்கத்திலே காணப்படுகின்ற கட்சிகள் அனைத்தும் முன்னுரிமை கொடுத்து இதய சுத்தியுடன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமானால், அது தான் உண்மையான தேசிய அரசாங்கம். நடைமுறையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவையெனப் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் இனப்பிரச்சினை தொடர்பான சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முற்படுகின்றபோது இனவாத சக்திகளாலும், பல்வேறுபட்ட குரோதங்களாலும் அவை நடைமுறைச் சாத்தியமில்லாத நிலையை அடைந்துள்ளன. ஆகவே இந்த நாட்டிலே இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமெனில் சகல கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை. ஏனெனில் சகல அரசாங்கங்களும் அங்கம் வகிக்கும் தேசிய அரசாங்கத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படக்கூடிய சாத்தியம் அதிகமாகவுள்ளது. ஆகவே வடகிழக்கு, மலையகம், முஸ்லீம் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேசிய அரசாங்கமொரு மேடையாக அமையும். அந்தக் காரணத்தின் அடிப்படையில்தான் நாம் இந்தத் தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கின்றோம்.

நாட்டிலேயுள்ள சகல ஆணைக் குழுக்களும் ஜனாதிபதியினுடைய அதிகார வரம்புக்குட்பட்ட வகையில் இயங்காமல் சுயாதீனமாக இயங்க வேண்டும். 17 ஆவது அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கும், 18ஆவது அரசியல் சீர்


→

# கொண்டுவந்தவர்கள் படுத்த முனைகின்றனர்

திருத்தத்தை இல்லாமலாக்குவதற்கும் தேசிய அரசாங்கம் வழியேற்படுத்த வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதன் மூலம் சர்வாதிகாரத்தைக் குறைப்பதுடன் பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேசிய அரசாங்கம் துணை நிற்க வேண்டும். அதிகாரத்தைப் பகிர்ந்து தமிழ் பேசும் மக்களனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு முன்வைக்கப்படுமெனில் அதனை எதிர்க்கவேண்டிய தேவையில்லை என்றார்.

## தேசிய அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டு தயாரிப்பு



**நிலாந்தன்**
**– பிரபல அரசியல் ஆய்வாளர்**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் வரையிலும் சக்திமிக்க நாடுகளுடைய நிகழ்ச்சி நிரல் இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதாகவே அமைந்திருந்தது. ஆட்சி மாற்றம் வந்தபின் அவர்களுடைய நிகழ்ச்சி நிரல் மாற்றத்தைப் பலப்படுத்துவதாயுள்ளது. அமெரிக்காவின் தூதுவர் பிஷ்வால் எங்களுடைய மிஷன் இன்னமும் முழுமையடையவில்லை எனக் கூறியிருந்தார். அவர் அவ்வாறு கூறவந்தது மாற்றத்தைத் திரும்பிச் செல்ல முடியாத தொரு புள்ளிக்குக் கொண்டு போவது அல்லது ராஜபக்ஷ சகோதரர்கள் மீளவும் எழ முடியாதவாறு அவர்களைத் தோற்கடிப்பது எனவே அவர்களுடைய நிகழ்ச்சி நிரல் மாற்றத்தைப் பலப்படுத்துவது அல்லது ஸ்திரப்படுத்துவதாகும். இந்த அடிப்படையில் தான் தற்போது தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.


இந்தத் தேசிய அரசாங்கமென்பது உள்நாட்டு வெளிநாட்டுத் தயாரிப்பு. இந்தத் தேசிய அரசாங்கத்தின் நோக்கம் பிரதானமாக ராஜபக்ஷாக்களுக்குப் பயப்படுகிறார்கள். ராஜபக்ஷ சகோதரர்கள் நடாத்திய இரு கூட்டங்களிலும் கலந்து கொண்ட சனக்கூட்டம் தான் அவர்களை அவ்வாறு சிந்திக்க வைக்கிறது. அவர்கள் இப்பொழுதும் பலமாகவேயிருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் பொதுத்தேர்தல் வந்தால் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு சவாலாகக் காணப்படுவார்கள் என்கின்ற அச்சம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவுகின்றது. ஆகவே அவ்வாறான சவாலான சூழ்நிலை இல்லை எனும் நிலைக்கு அவர்களைப் பலவீனப்படுத்தவேண்டும். அதனை நோக்கித்தான் இந்த தேசிய அரசாங்கம் தமிழ் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை. அதாவது மாற்றத்தின் பின்னரும் கூடத் தமிழ் மக்களுடைய பிரதானமான பிரச்சினைகள் இன்னமும் விவாதிக்கப்பவில்லை.

அவர்கள் மேலோட்டமாகச் சீர்திருத்தங்களைச் செய்கிறார்கள். உதாரணமாகத் தமிழிலே தேசிய கீதம் பாடுவது காணிகளைச் சிறிது சிறிதாக விடுவித்தல் ஆகிய சில சிறிய சீர்திருத்தங்களைச் செய்கிறார்கள். தேசிய கீதம் பாடுவதென்பது சட்டப்படி ஏற்கனவே காணப்படுகிறது. ஆனால் அவர்கள் தான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதில் யதார்த்தம் என்னவெனில் அவர்கள் உருவாக்கிய சட்டத்தை அவர்களே மீறினார்கள். அவர்கள் மீறிய சட்டத்தைத் தற்போது அவர்களே அமுல்படுத்தப் போவதாகச் சொல்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்குப் புதிதாக எதுவும் வழங்கப்படவில்லை. இவ்வாறான விடயங்கள் எதனை உணர்த்துகின்றதெனில் அவர்கள் அடிப்படைப் பிரச்சினைகளில் கைவைக்காமல் மேலெழுந்தவாரியாக சில சீர்திருத்தங்களையும் சில விட்டுக்கொடுப்புக்களையும் செய்வதுபோலக் காட்டிக்கொள்கின்றார்கள்.

மாற்றத்துக்குப் பின்னருள்ள தமிழ் மக்களின் நிலை எவ்வாறுள்ளதெனில் காத்திருக்கும் தரப்பாக அல்லது காத்திருக்க வைக்கப்படும் தரப்பாகவே அவர்கள் காணப்படுகிறார்கள். தேசிய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கூடத் தமிழ் மக்கள் காத்திருக்க வைக்கப்படுமொரு தரப்பாகவே உள்ளார்கள். தமிழ் மக்களுக்கு இதனால் பெருமளவில் நன்மை காணப்படுகிறது என்று கூறமுடியாது இது முழுக்க முழுக்க மாற்றத்தை உற்பத்தி செய்த தரப்புக்கும், மாற்றத்தால் நன்மையடைந்த வெளித் தரப்புகளுக்குமே மேலும் நம்பிக்கையளிக்கக்கூடியதாக இருக்கும்.

**தொகுப்பு**
**செல்வநாயகம் ரவிசாந்**

## தனித்துவமான நெருக்கடிகளின் போது தேசிய அரசாங்கம் உருவாக்கப்படுவதுண்டு



**கே.ரி.கணேசலிங்கம் – யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்**

தேசிய அரசாங்கம் உருவாக்கப்படுவது என்பது உலக அனுபவங்களைப் பொறுத்தவரையில் தனித்துவமானதொன்று. எப்போதும் உலகத்தில் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது என்பது நெருக்கடியான காலகட்டங்களாகத் தானிருக்கும். இயற்கை அனர்த்தம், போர், ஆட்சி முறையைக் கொண்டு நடத்த முடியாத அரசியல் ரீதியாக ஏற்படக்கூடிய சதிப்புரட்சிகள் போன்றவை தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான சூழலை ஏற்படுத்துவதுண்டு. இந்தத் தேசிய அரசாங்கம் தேசிய ரீதியில் கொள்கைகளுக்காகவும், சில பொது இணக்கப்பாடுகளுக்காகவும் ஒன்றிணைவது என்பது கட்சி அடிப்படையில் இருகட்சிகளும் எதிரெதிர் துருவங்களாகத் தங்களுடைய கருத்துக்களையும், எண்ணங்களையும், விமர்சனங்களையும் கொண்டிருக்கின்ற நிலையில் சாத்தியமற்றது.

தென்னிலங்கையில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்களுக் கூடாகத் தமிழ் மக்கள் நிம்மதியான சூழலை நோக்கி நகர்தல் என்பது கடுமையான நெருக்கடிக்கும், கடுமையான சவால்களுக்கும் மத்தியிலானதொன்று. இது உடனடியாக ஏற்படக் கூடியஒன்றல்ல. தேசிய அரசாங்கமிருப்பதனூடாகத் தென்னிலங்கையில் எதிர்க்கட்சியில்லாத தன்மை என்பது சில வேளைகளில் வடகிழக்கில் சுமூகதீர்வைக் கொண்டு வருவதற்கு உதவக்கூடும். ஆனால், அவற்றைச் செய்யக்கூடியதாக அவர்களுடைய அணுகுமுறை, கலாசாரம், அரசியல் பண்பாடுகள் வளர்ந்திருக்கிறதா? என்பது கேள்விக்குரிய விடயம்.

தேசிய அரசாங்கத்தோடு சார்ந்து தமிழ் அரசியல் கட்சிகளுடைய இருப்பு உத்தரவாதப்படுத்தப்படவில்லை. ஏனெனில், தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் தமிழ் அரசியற் கட்சிகளுக்குப் பங்கில்லை. ஆனாலும், ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் தமிழ் அரசியற்கட்சிகளுக்கும் பெரும்பங்கிருந்தது. அந்தப் பங்கின் அடிப்படையில் தேசிய அரசாங்கத்திலும் பேரம் பேசல் திறனை இவர்கள் வளர்க்க வேண்டும். அத்துடன்நின்றுவிடாது அரசியல் ரீதியான பண்பாட்டு முறையில் நாங்கள் இதுவரை பின்பற்றிய நிறைய விடயங்களில் சிலமாற்றங்களைச் செய்ய வேண்டும். புதிய அணுகுமுறையை ஏற்படுத்த வேண்டும்.

## தமிழ் மக்களின் நிலையில் நின்று தேசிய அரசாங்கம் பற்றி கேள்வி எழுப்பப்படவில்லை




**தியாகராஜா நிரோஸ்**
**(சுயாதீனஊடகவியலாளர்)**

தேசிய அரசாங்கம் உருவாகியதன் பின்னர் இரு வகையான விமர்சனங்கள் வெளிப்பட்டுள்ளன. அவ் விமர்சனங்களில் ஒன்று. முன்னாள் ஜனாதிபதி மகிந்த எதிர்காலத்தில் அரசியல் ரீதியான ஆதிக்கம் பெறுவதைத் தவிர்ப்பதற்காகவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்பதாகும். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டமை தொடர்பில் மகிந்த ஆதரவாளர்கள் கண்டன விமர்சனம் வெளியிட்டுள்ளனர். அதேவேளை, தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் எதிர்க்கட்சி தலைமையினைப் பெறுவதற்குள்ள தடைகள் தொடர்பிலும் விமர்சனங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், இனப்பிரச்சினைத் தீர்வு, தமிழ் மக்களின் நிலை போன்ற கோணங்களில் தேசிய அரசாங்கத்தின் மீது வெளிப்படையாகப் பேசப்படவோ, கேள்விகள் எழுப்பப்படவோ இல்லை.

மைத்திரியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பேசப்படவில்லை. நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேசப்படும் எனக் கூறப்பட்டு அவகாசம் பெறப்பட்டது. எனினும் தற்போது அமைக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கம் காரணமாக மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படுமா? தேர்தலுக்குச் செல்வார்களா? என்பது தொடர்பில் ஐயநிலை ஒன்றுள்ளது.

# தேசிய அரசாங்கம் மகிந்தரின் முயற்சிகளுக்கு தற்காலிக அணையே!



-பூரணன்-

நீண்ட இழுபறிகளின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைத்துள்ளார். இதன்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களில் 11 பேர் அமைச்சர்களாகவும், 5 பேர் இராஜாங்க அமைச்சர்களாகவும் 10 பேர் பிரதியமைச்சர்களாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர். பீலிக்ஸ் பெரேரா, மகிந்த அமரவீர, மகிந்தயாப்ப அபேவர்த்தன, ஏ.எச்.எம். பௌசி, எஸ், பி.நாவின்ன, எஸ்.பி.திசாநாயக்கா, ஜானக பண்டார தென்னக்கோன், விஜயமுனி, பியசேன கமகே போன்றோர் அமைச்சர் களாகியுள்ளனர். எனினும் மூத்த அமைச்சர் களான நிமால்சிறிபாலடி.சில்வா, சுசில் பிரேமஜயந்த போன்றோர் அமைச்சரவை யில் சேரவில்லை.

இந்திய - மேற்குலக கூட்டுத்தான் இந்தத் தேசிய அரசாங்க முயற்சிக்குப் பின்னால் நின்றிருக்கின்றது. இரண்டு பிரதான கட்சிகளுக்கும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து இந்த தேசிய அரசாங்கத் திற்கு அது உதவியுள்ளது. இந்த தேசிய அரசாங்க உருவாக்கத்திற்கான காரணம் சீனா மீண்டும் செல்வாக்கு செலுத்தாத வகையில் பலமான அடித்தளத்தைப் போடுவதாகும்.

அண்மைக்காலமாக மேற்குலக - இந்தியக் கூட்டு பல வேலைத்திட்டங்களை இதற்காக நகர்த்தி வருகின்றது. சர்வதேச விசாரணை அறிக்கை வெளியிடுவதைப் பிற்போடுதல், இராணுவரீதியாக சீனாவிற்குப் பயன்தரக்கூடிய துறைமுக அபிவிருத்தியை நிறுத்துதல், நிறுத்தி வைக்கப்பட்ட G.S.P வரிச்சலுகையை மீள வழங்குதல், சீனாவை மேவும் வகையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல். மைத்திரியின் இந்தியா, பிரித்தானியா பயணங்களும், அங்கு இடம்பெற்ற பிரமாண்டமான வரவேற் புக்களும், (இந்தியாவின் பிரதமரும், ஜனாதி பதியும் இணைந்து வரவேற்றமை, பிரித் தானியப் பிரதமர் மைத்திரியின் வாகனத் தடிக்கே வந்து தானே கதவைத்திறந்து வரவேற்றமை, மகாராணியாரும் சந்தித்து கையுறை கழட்டி கைலாகு கொடுத்தமை) என்பவையெல்லாம் சீனச் செல்வாக்கினை அகற்றுவதற்காகவே முன்னெடுக்கப்பட்டன.

முன்னர் அமெரிக்கா தலைமையி லான மேற்குலகும், இந்தியாவும் தனித்தனி யாகவே தங்களுக்குச் சார்பான வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தன. இதனால் அவை பெருமளவிற்கு நடை முறைச் சாத்தியப்பாடுகளை எட்டவில்லை. புலிகளுடனான யுத்த நிறுத்த நடவடிக் கைகள் இதனால்தான் தோல்வியுற்றன. இந்தியா அதனை விரும்பாமையே பிரதான காரணமாகும். இந்தியா தன்னை மேவி எதுவும் இலங்கையில் நடைபெறுவதை விரும்பவில்லை.

2005 ஆம் ஆண்டு மகிந்த ஜனாதிபதியான பின் இந்தப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக சீனா வின் செல்வாக்கினை அகற்றவேண்டிய அவசியம் இரண்டு தரப்புக்குமே தேவையாக இருந்தது. இரண்டு தரப்பும் இணைந்த வேலைத்திட்டம் இல்லாமல் இவை சாத்திய மாகாது என்கின்ற விடயமும் இரண்டு தரப் புக்கும் நன்றாகவே தெரியும். இதனால் இணைந்த வேலைத்திட்டத்தினைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்றன. ஆட்சி மாற்றத்துடன் அதனை உச்சநிலைக் குக் கொண்டு சென்றன.

சீனாவிற்கும் கேந்திர இடத்தை விட்டுக் கொடுக்க முடியாதாகையால் அது அண்மைக்காலமாக மகிந்த ராஜபக்ஸ வின் மீள் எழுச்சியை ஊக்குவித்தது. மகிந்தரும் ஆரம்பத்தில் தான் அரசியலுக்கு வரப்போவதாகக் கூறவில்லை. ஆனால் தனக்குச் சார்பான நுகேகொட, கண்டிக் கூட்டங்கள், கையெழுத்துப்போராட்டம், அவரது இல்லத்திற்கான மக்கள் படை யெடுப்பு என்பவற்றிற்குப் பின்னர் அவர் பகிரங்கமாகவே அரசியலுக்கு வரப் போவதை அறிவித்திருந்தார். அதனுடன் மட்டும் நின்றுவிடாது சுதந்திரக்கட்சியின் மேல்மாகாண உள்ளூராட்சிச் சபை உறுப் பினர்களை வரவழைத்து கூட்டமொன் றையும் நடாத்தியிருந்தார். மேல்மாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள். 528 பேரில் 409 பேர் இதில் கலந்து கொண்டனர். ஏறத்தாழ மாகாணத்தின் உறுப்பினர்கள் 3/4 பங்கினர் கலந்து கொண்டனர். களுத்துறை மாவட்டத்திலிருந்தே அதிகள வில் கலந்து கொண்டனர். இதன் பின்னர் தான் கட்சிப் பணிகளுக்கு வருமாறு மகிந் தருக்கு மைத்திரி பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். அவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் மைத்திரிக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில்தான் அமெரிக்க தலைமையிலான மேற்குலக - இந்தியக் கூட்டு மேலும் விழித்துக்கொண்டது. தேசிய அரசாங்கம் அமைக்கத் தவறுகின்ற ஒவ் வொரு நிமிடமும், சீனாவின் செல்வாக் கினை அகற்றுதல் என்ற தமது இலக்கிற்கு ஆபத்துவரும் எனக்கருதியது. அவசரம் அவசரமாக முயற்சி செய்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் மகிந்தரின் முயற்சிகளுக்குத் தற் காலிக அணையைப் போட்டுள்ளது. அதனூடாக சீனாவின் முன்னெடுப்புகளுக் கும் தடையைப் போட்டுள்ளது. அரசியல் வாதிகளுக்கு தடையைப்போட்டு விட்டால் மக்களுக்கு உள்ளூர் தலைமை இல்லாமல் போய்விடும். மக்களும் சற்று அமைதியாகி விடுவார்கள். இது மக்களிடம் மன மாற்றங் களைக் கொண்டுவருவதற்கும் உதவியாக அமைந்துவிடும். மக்களின் மனங்களை மாற்றுவதற்கு ஐரோப்பிய அரசு சார்பற்ற, நிறுவனங்களை களமிறக்க இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

இன்னோர் பக்கத்தில் இராணு வத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப் பதற்கும் தேசிய அரசாங்கம் அவசிய மாகின்றது. இராணுவத்திற்குரிய அரசியல் பலத்தினை இல்லாமல் செய்தலே இதற்குப் பின்னாலுள்ள நோக்கம். இதற்கப்பால் இராணுவம் பறித்த காணிகளில் சிலவற்றை யாவது தமிழ் மக்களிடம் கையளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இந்திய - மேற் குலகத்திற்கு இருக்கின்றது. இல்லையேல் தமிழ்த் தேசிய மீள்எழுச்சியைத் தடுக்க முடியாத நிலை ஏற்படும். இந்தக் காணி கையளிப்பிற்கும் இராணுவம் தடையாக இருக்கின்றது. வசாவிளான் நிகழ்வுகள் இதற்குச் சிறந்த உதாரணம். அங்கு மக்களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்க கற்தூண்களைக் கொண்ட பாதுகாப்பு வேலியை படையினர் அமைக்கின்றனர்.

தேசிய அரசாங்கம் உருவாக்கப் பட்டுள்ளமையினால் பாராளுமன்றத் தேர்தலும் பிற்போடப்படலாம். மக்கள் தீர்ப்பு தேர்தலை நடாத்தி பாராளுமன்றத்தின் கால வெல்லையை இன்னோர் பதவிக் காலத்திற்கு நீடிக்கச் செய்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

தேர்தலில் மகிந்தர் தரப்பு வெற்றி பெறக்கூடிய சூழல் இருந்தால் இந்திய - மேற்குலகக் கூட்டு தேர்தலை நடாத்தவிடப்போவதில்லை.

தற்போது எழும் கேள்வி இந்த தேசிய அரசாங்கம் நீடிக்குமா? என்பதே. இது நீடிக்குமா? என்பதை விட மேற்குலக- இந்தியக் கூட்டு எப்பிடியாவது நீடிக்க வைக்க முயற்சிக்கும். இதற்கேற்ற வகையில் அனைத்துப் பக்கங்களினாலும் காய்களை நகர்த்தும். குறிப்பாக தீவிர சிங்கள தேசிய வாதிகளை தனிமைப்படுத்தும். அதனூடாக மஹிந்தராஜபக்ஸதனிமைப்படுத்தப்படுவார். ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தேசிய அரசாங்கத்தில் இணைத்ததன் மூலம் தீவிர சிங்களத் தேசியவாதிகளும் அவர்களது தலைவரான மஹிந்த ராஜபக்ஸ வும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் தலைமைப் பொறுப்பை மைத்திரி ஏற்றமையும் இத்தனிமைப்படுத்தலை ஊக்குவித்துள்ளது. எனவே தற்போதைக்கு தேசிய அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் வராது என்றே கூறலாம். இராணுவத்திற்கு அரசியல் தலைமை இல்லாத நிலையில் அதுவும் பலவீனப்படும். ஆனால் மஹிந்த ராஜபக்ஸவிற்கு எதிர் நிலையிலுள்ள ஜே.வி. பி யினர் தேசிய அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படத் தொடங்கினால் தீவிர சிங்கள தேசியவாதிகள் பலமடைவர். வலிமையான ஊழியர் பலத்தையும், நிறுவன பலத்தையும் கொண்டுள்ள கட்சி ஜே.வி.பி தான். இக்கட்சி எதிர்நிலை எடுத்தால் கள நிலவரங்களில் மாற்றங்கள் வரலாம்.

மறுபக்கத்தில் சீனா இது விடயத்தில் மௌனமாக இருக்கப்போவதில்லை. ஏனெ னில் இலங்கைத் தீவு மீது செல்வாக்கு செலுத்தல் என்பது சீனாவின் இருப்போடு தொடர்புள்ள விடயம். அது சகல வழிக ளிலும் தீவிர சிங்கள தேசியவாதிகளை ஊக்குவிப்பதற்கு முயற்சிக்கலாம்.

**தமிழ் மக்களின் விவகாரம் ஆட்சி செய்யும் அரசாங்கத்துடன் மட்டும் தொடர்புடைய விவகாரமல்ல. அது இலங்கை அரசு உருவாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினை. அரச அதிகாரக் கட்டமைப்பை பன்மைத் தன்மை ஆக்குவதுடனும் அதில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக இணைவதனுடனும் தொடர்புடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினை தேசிய அரசாங்கத்தினால் நிறை வேறும் எனக் கூறமுடியாது.**

(23 ஆம் பக்கம் பார்க்க)

# குடிநீர்த் தாங்கியில் நஞ்சுகலந்து இளம் பிஞ்சுகளைக் கொல்ல நினைத்த விஷமிகள்



-செல்வநாயகம் ரவிசாந் -

யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் குடிநீர்த்தாங்கியில் விஷமிகளால் நச்சுத் திராவகம் ஊற்றப்பட்ட நிலையில் குறித்த பாடசாலையில் கல்விபயிலும் 26 மாணவர்கள் அந்நீரைப் பருகியதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக கடந்த வியாழக்கிழமை (19.03.2015) காலை சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - குறித்த பாடசாலையின் கிணற்றில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கழிவு ஒயில் பாதிப்பு அவதானிக்கப்பட்ட நிலையில் வடமாகாணக் கல்வியமைச்சால் பாடசாலைக்கு நீர்த்தாங்கி வழங்கப்பட்டு வலி.தெற்குப் பிரதேச சபையால் நீர்விநியோகம் இடம்பெற்று வருகிறது. நீர்த்தாங்கியில் விஷம் கலக்கப்படுவதற்கு முதல்நாள் புதன்கிழமை காலை 11.20 மணிக்கும் நீர்விநியோகம் இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை காலை கூட்டுப் பிரார்த்தனை முடிவடைந்ததைத் தொடர்ந்து மாணவர்களை மேற்பார்வை செய்யும் மாணவத் தலைவர்கள் இருவரும் நீர்த் தாங்கியிலிருந்து நீரைப் பெறுவதற்காகச் சென்றுள்ளனர். அப்பொழுது நீரில் நச்சுத் திராவகம் கலந்திருப்பதை மணம் மூலமாக உணர்ந்த அந்த மாணவர்கள் இது குறித்து உடனடியாகத் தமது அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அதன் பின்னர் நஞ்சுத் திராவகம் ஊற்றப்பட்ட போத்தலொன்றும் நீர்த்தாங்கியிலிருப்பது மாணவர்களால் அவதானிக்கப்பட்டது.

இதுகுறித்து குறித்த மாணவர்களால் அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டநிலையில் உடனடியாகச் செயற்பட்ட அதிபரும் ஆசிரியர்களும் குறித்த நீரைப் பருகிய 26 மாணவர்களையும் அங்குள்ள அயலிலுள்ளவாகனமொன்றின்உதவியுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அத்துடன் சுன்னாகம் பொலிஸாருக்கும், வலயக் கல்வித் திணைக்களத்துக்கும் தகவல் தெரிவித்தனர். குறித்த மாணவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டது.

குடிநீரில் விஷம் கலக்கப்பட்டு மாணவர்கள் பாதிப்பை எதிர்நோக்குவதற்கு முதல் நாள் காலை பிரதேசசபையால் விநியோகிக்கப்பட்ட நீரையே மாணவர்கள் அன்றைய தினம் மாலை வரை பயன்படுத்தியுள்ளனர். ஆனாலும் மாணவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்தநிலையில் அன்றைய தினமிரவே விஷமிகளால் நீர்த் தாங்கியில் விஷம் கலக்கப்பட்டிருக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். பாடசாலையில் காவலாளியொருவர் இரவு நேரம் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும் அவர் இது குறித்து அறிந்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

சம்பவத்தைக் கேள்விப்பட்ட மாணவர்களின் பெற்றோரும், பொதுமக்களும் பாடசாலையில் வந்துகுவியவே பாடசாலைச் சூழலில் ஒருவிதமான பதற்றம் தொற்றிக் கொண்டது. கல்வித் திணைக்கள அதிகாரிகளின் உத்தரவுக்கமைய ஏனைய பாடசாலை மாணவர்கள் அனைவரும் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் வைத்தியசாலை சென்று கதறிய மூதமையையும், அந்தரித்தவாறு நின்றமையையும் காணமுடிந்தது. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நஞ்சுப் பொருளே குடிநீரில் கலக்கப்பட்டுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் ரி.சந்திரகுமார் தெரிவிக்கையில், "இன்று (கடந்த 19 ஆம் திகதி) காலை 08.20 மணியளவில் நீர்த் தாங்கியிலுள்ள நீரைப் பருகுவதற்காகச் சென்ற மாணவர்களிருவர் தண்ணீரில் ஏதோ நஞ்சு மணம் வீசுவதாகத் தெரிவித்தனர். நாங்கள் உடனே நீர்த் தாங்கியைத் திறந்து பார்த்தபோது அதற்குள் நச்சுப் போத்தல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. உடனடியாக நாங்கள் நீர் எடுத்த பிள்ளைகளை வெளியிலே ஊற்றுமாறு கூறியதுடன், நீர் குடித்த பிள்ளைகள் 26 பேரை, இனங்கண்டு வானில் அவர்களை வைத்திய சாலைக்கு அனுப்பினோம் அவர்களுக்குத் தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் பிள்ளைகளுக்குத் தெய்வாதீனமாக எந்தவிதப் பாதிப்புமில்லை" என்றார்.

இதனிடையே, புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் கறுப்புக் ஹெல்மட் கண்ணாடியால் முகத்தை மறைத்தபடி அறிமுகமில்லாத இருவர் நடமாடித் திரிந்ததாகவும், அவர்கள் குறித்த பாடசாலையில் கல்விகற்கும் அதேபகுதியைச் சேர்ந்த 07 ஆம் தர மாணவியிடமும் ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலை எங்கிருக்கின்றது? என விசாரித்ததாகவும் தெரியவருகிறது.

**சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தி மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாளில் காலை 11 மணியளவில் அப்பிரதேசப் பொதுமக்களும், மாணவர்களின் பெற்றோர்களும் மாணவர்களும் இணைந்து வீதிமறியலிலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.**

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தி மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாளில் காலை 11 மணியளவில் அப்பிரதேச பொதுமக்களும், மாணவர்களின் பெற்றோர்களும் மாணவர்களும் இணைந்து வீதிமறியலிலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக அந்தப் பகுதி வீதியுடனான போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

சம்பவ இடத்திற்கு விரைந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஆர்ப்பாட்டம் நடாத்தியவர்களுடன் சமரச நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொலிஸார் மறியல் போராட்டம் செய்யவேண்டாம் எனவும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தனர். இதனைத் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

குறித்த அனர்த்தத்தைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாணக் கல்வியமைச்சர் எஸ்.குருகுலராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடமாகாணசபைஉறுப்பினர்களானத.சித்தார்த்தன், பா.கஜதீபன், அரியகுட்டிபரஞ்சோதி உள்ளிட்ட அரசியல்வாதிகளும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் வைத்தியசாலைக்கும், சம்பவம் இடம் பெற்ற பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கும் படையெடுத்தனர்.


வடமாகாண விவசாய அமைச்சரைச் சுற்றிவளைத்த அப்பகுதி இளைஞர்கள் அவரிடம் அடுக்கடுக்காகக் கேள்விக் கணைகள் தொடுத்ததுடன் தமது மன ஆதங்கங்களையும் இடைவிடாது கொட்டித் தீர்த்தனர். கழிவு ஒயில் பிரச்சினைக்கு வடமாகாண சபை இது வரை சரியானதோர் தீர்வினைக் காணமுன்வராத காரணத்தால் தான்நாங்கள் இன்று இவ்வாறானபாதிப்புக்கு முகம் கொடுக்கிறோம். எங்களுக்குச் சொந்தமாகக் கிணறுகள் இருந்த போதும் அவற்றிலிருந்து நீரைப் பெறமுடியாத நிலை. இதனால் அன்றாடம் தொழில்களுக்கு உரியநேரத்திற்குச் செல்லமுடியாத சூழ்நிலை. பல சிரமத்தின் மத்தியில் போத்தல்களில் நீரைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம். அதிகாரிகள் சிலர் கிணற்று நீரைக் கண்களால் மாத்திரம் பார்வையிட்டபின் குடிநீரில் கழிவு ஒயில் கலந்துள்ளதாகக் கூறுகிறார்களே? இது நம்பகரமானதா? இன்று வரைக்கும் இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினைச் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் யாராவது முன்வைத்தார்களா? மூலத்தைக் கண்டுபிடித்தார்களா? வடமாகாண சபை ஏன் இவ்விடயத்தில் அலட்சியப் போக்குடன் செயற்படுகிறது? என இளைஞர்கள் தொடுத்த கேள்விக் கணைகளால் ஒருகணம் ஆடிப் போனார் அமைச்சர் ஐங்கரநேசன்.

இதனைச் சற்றும் எதிர்பாராத அவர் இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு

(22 ஆம் பக்கம் பார்க்க)

# தார்மீகக் கோபமும் அறிவுதான்

ம. சுசித்ரா



வகுப்பறைக்குள் இருக்காமல் காடு, மலை எனச் சுற்றித்திரிந்து இளைப்பாற அப்பிள் மரத்தடியில் அமர்ந்தபோதுதான் பிறந்தார் நியூட்டன்.

வகுப்பறைக்கு உள்ளேதான் முறையான கல்வியைக் கற்பிக்கவும் கற்கவும் முடியும் என நம்பிவந்த கல்வி உலகை உலுக்கியது உளவியல் நிபுணர் கோர்டனரின் பன்முக அறிவுத்திறன் கோட்பாடு. இயற்கை ரீதியான அறிவுத்திறன் கொண்டவரின் மூளை அமைப்பே இயற்கையைக் கொண்டாடும் விதத்தில்தான் அமைந்திருக்கும் என அறிவியல்ரீதியாக விளக்கினார் கோர்டனர்.

## மூளை செய்யும் வேலை

இயற்கை ரீதியான அறிவுத் திறனாளிகளின் வலது பக்க மூளையின் பண்புகள் இவை

1. திறந்த வெளியில் இருக்கும்போது உற்சாகமான உணர்வை ஏற்படுத்தும்.
2. இயற்கை, மனம், உடல் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்க முயலும்.
3. பிராணிகளிடத்தில் அன்பு செலுத்தச் சொல்லும்.
4. சாகசங்களில் ஈடுபடத் தூண்டும்.
5. சுற்றுச்சூழல் மீது அக்கறை காட்டச் சொல்லும்.
6. மிருக வதை அல்லது சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் கண்டால் துடித்தெழச் செய்யும்.

இயற்கை ரீதியான திறனாளிகளின் இடது பக்க மூளையின் பண்புகள் இவை :

1. தகவல்களை அலசி ஆராயும்.
2. புள்ளி விவரங்களைத் துல்லியமாக நினைவில் கொள்ளும்.
3. தகவல்களை வகைப்படுத்த விரும்பும்.
4. சூழலியல், உயிரியல், வேதியியல் போன்ற பாடப்பிரிவுகள் மிகவும் பிடிக்கும்.

கணித அறிவும், இசை ஞானமும்தான் பிறப்பிலேயே வரும் என நம்பிவந்த அறிவுலகை அதிரவைத்த ஆய்வு இது. இந்த ஆய்வை உற்று நோக்கும்போது இன்னும் சில அற்புதமான உண்மைகள் புலப்படுகின்றன. ஆராய்ச்சிகூடத்திலும், ஆய்வுப் புத்தகங்களிலும் மட்டும் மூழ்கிக் கிடந்தால் இயற்கை ரீதியான அறிவுத் திறனை அடைந்துவிடமுடியாது. சூழலியலை விரும்பச் சொல்லி ஒருவருடைய மூளையே அவருக்குச் சொல்லும். கணிதம் மற்றும் மொழித் திறனில் சிறந்து விளங்குபவர்களை மட்டுமே மூளைக்காரன், புத்திசாலி, அறிவாளி எனக் கொண்டாடுவது அறிவிலித்தனம்.

## மரத்தைக் கட்டிப்பிடி

ஆனால் யதார்த்த உலகில் இதை நிரூபிக்க முடியுமா என நீங்கள் கேட்கலாம். மலைக் காடுகளில் வாழ்ந்து வந்த சித்தர்கள் இயற்கை மருத்துவமான சித்த மருத்துவத்தை எப்படி அருளினார்கள்? நீரோட்டம் பார்க்கும் வழக்கம் நம் சமூகத்தில் காலங்காலமாக இருந்துவந்த ஒன்றில்லையா? தோட்டக்காரர்களுக்கும், விவசாயிகளுக்கும் இருப்பது இயற்கை ரீதியான அறிவுத்திறன்தானே! இப்படி எழுதும்போது அடர்ந்த வனத்தில் நிகழ்ந்த அந்தச் சம்பவம்தான் மனதில் ஒரு படம் போல ஓடுகிறது.

சுற்றுச்சூழல் மாசுக்கு எதிராக முதல் முறையாக உலகில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்றால் அதுதான். இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜோத்பூர் மன்னர் அஜய்சிங் புதிதாக ஒரு அரண்மனையைக் கேஜர்லிவனப் பகுதியில் கட்டி எழுப்ப முடிவெடுத்தார். அந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த 'பிஷ்ணோய்' என்ற பூர்வகுடிகள் மன்னரின் ஆணையைக் கேட்டு திடுக்கிட்டனர். தங்கள் உயிரினும் மேலான காட்டு மரங்களைப் படை பலத்தோடுவெட்ட வந்த வீரர்களை வழி மறித்தனர். ஆனால் அவர்களை மீறி மரத்தருகில் வீரர்கள் சென்றனர். அப்போது பழங்குடிகளில் ஒருவரான அம்ரிதா தேவி தன் மூன்று பெண் குழந்தைகளோடு முதலில் இருந்த மரத்தைக் கட்டிஅணைத்துக் கொண்டார். மன்னரின் உத்தரவை நிறைவேற்ற நான்கு பேரையும் வெட்டிக் கொன்றுவிட்டு அந்த மரத்தையும் வெட்டித் தள்ளினர் வீரர்கள். ஆனால் உடனிருந்த ஆதிவாசிகள் பின் வாங்கவில்லை.

அத்தனை பேரும் அவர்களால் முடிந்தவரை மரங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். இப்படியே 363 மரங்களையும் அதனைக் கட்டிப் பிடித்த மனிதர்களையும் வெட்டித் தள்ளினர். ஒரு கட்டத்தில் "போதும் நிறுத்துங்கள் இந்த இடம் வேண்டாம்" என்று போர் வீரர்களைத் திரும்பி வரச்சொல்லி உத்தரவிட்டார் மன்னர். 1730 இல் நிகழ்ந்த இந்தத் தியாகச் சம்பவம்தான் சுற்றுச் சூழலை பாதுகாக்க நடத்தப்பட்ட முதல் போராட்டம். மரங்களைக் கட்டித்தழுவிய இந்த நிகழ்வு 'சிப்கோ இயக்கம்' என்றழைக்கப்படுகிறது. இதன் தாக்கம் உலகெங்கும் பரவியது. அதன்பின் இயற்கையைக் காக்க மேலும் பல சிப்கோ இயக்கங்கள் உயிர்த்தெழுந்தன.

## கோபமும் அறிவுதான்

தங்கள் வனம் அழிக்கப்படுவதைத் தடுக்க அகிம்சை வழியில் போராடி தங்கள் உயிரை நீத்த அந்தப் பூர்வகுடிகள் இயற்கை மீது கொண்டிருந்த அளவு கடந்த பற்றையும், சுற்றுச் சூழலைக் காக்கும் பொறுப்பையும் இயற்கை ரீதியான அறிவுத்திறன் இல்லை என சொல்லி விடமுடியுமா? காலங்காலமாக உணர்வும், அறிவும் எதிர் எதிரானவை எனச் சொல்லப்படுகிறது. ஒருவர் உணர்ச்சி வசப்படும்போது அறிவை இழக்கிறார் என்று நினைக்கிறோம்.

ஆனால் அத்தகைய வேறுபாட்டைக் களைந்து எறிகிறது இயற்கை ரீதியான அறிவுத்திறன். அறிவின் பிறப்பிடமான மூளையின் ஒரு பகுதி சுற்றுச் சூழல் அழிவைக் கண்டால் துடித்தெழச் சொல்லும்போது அது அறிவு இன்றி வேறென்ன? கிரேக்க தத்துவஞானி அரிஸ்ரோட்டில் கூறியதைப் போல, "கோபம் கொள்ளுவது சுலபம்தான். ஆனால் சரியான காரணத்துக்காக, நியாயமான வழியில், சரியான நேரத்தில், சரியான அளவில், சரியான நபரிடம் கோபம் கொள்வது எளிதல்ல". தார் மிகக் கோபம் என்பதும் அறிவுதான்.

(5 ஆம் பக்க தொடர்ச்சி)
(கூட்டமைப்பின்....)

றோம். இதனை பகிரங்கமாகக் கூறியும் உள்ளோம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் இருக்கின்ற கட்சியின் தலைமை இந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு நேர் எதிராகச் செயல்பட்டு வருகின்றது.

அந்தத் தீர்மானத்தில் கடைசிப் பந்தியில் கூறப்பட்டிருப்பது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தையோ, மைத்திரிபால அரசாங்கத்தையோ அல்லது சிங்கள தேசத்தால் நியமிக்கப்படுகின்ற அரசாங்கத்தையோ நம்ப முடியாது. இதுவே முதலமைச்சரின் பிரேரணையின் சாராம்சமாகும். இதற்காகவே முழுமையாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று நியாயத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு 6 நாட்களுக்கு முன்பதாக கட்சித் தலைவரும் தலைவருக்கு நெருங்கிச் செயல்படும் தேசிய பட்டியல் எம்.பி.யும் சுதந்திர தினத்தில் கலந்துகொண்டனர். பின்னர் அதனை ஒரு எம்.பி. 43 வருட காலமாக கடைப்பிடித்த ஒரு செயல்பாட்டை மீறி நியாயப்படுத்துகிறார். எங்களுக்கு இந்த அரசாங்கத்தில் முழுமையான நம்பிக்கை இருக்கிறது என்றும் கூறியுள்ளார். அவ்வாறு என்றால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் வடமாகாண சபையில் நிறைவேற்றிய இன அழிப்புத் தீர்மானத்துக்கு நேர் எதிரான செயற்படுகிறார்கள் என்றால் இது தேர்தல் நாடகம் இல்லை என்று நிரூபிப்பதற்கு முதலமைச்சர் இரண்டில் ஒன்று செய்ய வேண்டும்.

ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை நீக்கி முதலமைச்சர் கட்சித் தலைமையை பொறுப்பேற்க வேண்டும். அல்லது அவருடைய சிந்தனையில் இருக்கின்ற நபர்கள் கட்சித் தலைமையில் இருக்க வேண்டும். அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி இந்தக் கொள்கையை முன்நிலைப்படுத்தி தனித்துவமாக செயல்பட வேண்டும்.

தனித்துவமாகச் செயல்படும் பட்சத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைந்து செயல்படத் தயாராகவே இருக்கின்றது. இதனைச் செய்யாது வெறுமனே கருத்துக்களைத் தெரிவிப்பது எம்மைப்பொறுத்தவரையில்உண்மையான தேசியம் உணர்வுகளுடன் இருக்கக்கூடிய பெரும்பான்மையான மக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் சேராது அவர்களைத் தடுத்து கூட்டமைப்புக்குள்ளும் இந்தக் கருத்து இருக்கின்றது. எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கூறி வாக்குகளைப் பெற்று நேர் எதிராகச் செயற்படும் தலைமைக்கு வழங்குவதாகவே இது பார்க்கப்படும்.

(6 ஆம் பக்க தொடர்ச்சி)
(இராணுவம் பறித்த....)

களையே எப்போதும் பெரிதாகக் காட்டுவர். ஒடுக்கப்படும் மக்களையும் அதன்மீதே கவனத்தைக் குவிக்கச் செய்வர். விளைவுகளுக்கு பரிகாரம் செய்வதை பாரிய செயல்களாக வெளியில் காட்டி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முயற்சிக்கிறோம் என்கிற தோற்றத்தைக் கொடுக்க முயற்சிப்பர். அரசியல் தீர்வு பற்றிய மக்களின் கவனத்தை திசை திருப்புவர்.

ஆனால் மக்கள் இவற்றிற்கு பலியாகக் கூடாது. இதுபற்றி முன்னரும் பல தடவை கூறப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த்தேசிய அரசியலைக் கைவிட்டுள்ளது. 13வது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்றுள்ளது. மைத்திரி அரசின் பங்காளிக் கட்சியாகவும் உள்ளது. இதனால் விளைவுகளையே பெரிதாக உயர்த்திப் பிடிக்கும். அதில் ஏற்படுகின்ற சிறிய மாற்றங்களைக் கூட பெரிய சாதனையாகக் காட்ட முயற்சிக்கும்.

அரசாங்கத்தின் பம்மாத்துகளுக்கு மட்டுமல்ல கூட்டமைப்பின் பம்மாத்துக்களுக்கும் முகம் கொடுப்பதற்கு மக்கள் தயாராக வேண்டும்.

# அழிக்கப்பட்ட கிராமம் வாகரை

-எஸ்.ஜெயானந்தமூர்த்தி-



**வா**கரைப் பிரதேசம் கிழக்கே கடலும் மேற்கே பெரும் காடு சார்ந்த வயல் நிலங்களினாலும் சூழப்பட்டுள்ளது. தெற்கு வடக்காகச் செல்லும் மட்டக்களப்பு - திருமலை வீதி வாகரையை ஊடறுத்துச் சென்று வெருகல் வாவியைக் கடந்து திருமலை மாவட்டத்துடன் இணைகின்றது. பனிச்சங்கேணி ஊடாகச் செல்லும் வாவி, வாகரையில் கடலுடன் கலக்கின்றது. மீன்பிடி, விவசாயம், சிறு கைத்தொழில், போக்குவரத்து என சகல வளங்களும் வசதிகளும் நிறைந்தது இப்பிரதேசம்.

வடகிழக்கில் இயக்க நடவடிக்கைகள் முனைப்புப் பெற்ற வேளையில் 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாகரையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. பின்னர் கதிரவெளி, கட்டுமுறிவு, பனிச்சங்கேணி ஆகிய இடங்களிலும் முகாம்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்புக் கெடுபிடிகள் இடம்பெறலாயிற்று. இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் சித்திரவதைக்குட்படுத்தப்படுவதும் தொடர்ந்தன. சிலர் காணாமல் போயினர். இதனால் மக்கள் மத்தியில் பயப்பீதி உண்டாயிற்று. மக்கள் வெளியில் நடமாடப் பயந்தனர். குறிப்பாக இளைஞர்கள் பெரும் அச்சத்திற்குள்ளானார்கள். இளம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளும் இடம்பெற்றன.

கணவனைக் கைது செய்து முகாமில் வைத்துவிட்டு வீட்டிலிருக்கும் மனைவியை பாலியல் வல்லுறவிற்கும் கொடுமைகளுக்கும் இராணுவ அதிகாரிகள் உட்படுத்தினர். இதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களின் கணவன்மார் காணாமல் போயினர். இவ்வாறான சம்பவங்களுக்கு அக்காலகட்டத்திலும் (1983-1985) பின் 1990 இற்குப் பின்பும் காரணமாக இருந்தவர் மேஜர் ரி.ஜி.கே.வி.கருணா நாயக்க. இவரின் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல. இவ்வாறான கொடுமைகளால் அச்சமடைந்தவர்கள் வாகரையை விட்டுவெளியேறினர்.

இந்திய இராணுவத்தினர் வடக்குக் கிழக்கில் நிலை கொண்டிருந்தபோது வாகரையிலும் முகாம்களை அமைத்தனர். இந்தியப் படையினர் வாகரைப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் மிகவும் அக்கறையாக இருந்தனர். வாகரையிலுள்ள பெரும் காடுகளில் விடுதலைப் புலிகளின் பாசறைகள் இருந்தன. அது மாத்திரமின்றி வன்னிக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான கடல் போக்குவரத்தும் வாகரை ஊடாகவே இடம் பெற்றது. இதனால் விடுதலைப்புலிகளுக்கும் வாகரை மிகவும் வேண்டியதொரு பிரதேசமாகவே இருந்தது. வன்னியிலிருந்து கடல் வழியாகப் புறப்பட்டால் அடுத்த நான்கு மணித்தியாலத்தில் வாகரையில் தரையிறங்கமுடியும். இந்தப் போக்குவரத்தைத் தடுப்பது இராணுவத்தினரின் பிரதான நோக்கமாகவிருந்தது.

இந்திய இராணுவத்தினர் வெளியேறிய பின் 1990 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமானதும் வாகரைப் பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தினர் தமது பழைய இடங்களில் மீண்டும் முகாமிட்டனர். மேஜர் கருணாநாயக்கவே இப்பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாயின. வயது வித்தியாசமின்றி ஆண்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டனர். பாலியல் வல்லுறவுகளும் தொடர்ந்தன.

இந்த முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. வாகரைச்சந்தியிலிருந்த பல வீடுகளைக் கொண்டு முகாம் அமைக்கப்பட்டது. முகாமிற்குள் வைத்தியசாலை, தேவாலயம், தபாலகம், தொலைத் தொடர்பு நிலையம் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனால் இங்கு எஞ்சியிருந்தவர்களும் வீடுகளை விட்டு வெளியேறினர்.

கட்டுமுறிவு, கதிரவெளி, பால்சேனை, பனிச்சங்கேணி, காயங்கேணி ஆகிய இடங்களிலிருந்த இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எனக்கூறிக் கொண்டு அப்பாவி இளைஞர்களைக் கைது செய்தனர். கைதானவர்கள் காணாமல் போயினர். இந்த நடவடிக்கைகளினால் வாகரைப் பிரதேசம் பெரும் அழிவுக்கு உள்ளானது.

இக்காலகட்டத்தில் இராணுவத்தினர் வாகரைப் பிரதேசத்திற்கு உணவுப் பொருட்களை மக்கள் எடுத்துச் செல்வதற்கும் தடைகளை விதித்தனர். உத்தியோகப்பற்றற்ற பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. வன்னியில் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பற்றி மட்டுமே உலகம் அறிந்திருந்ததே தவிர வாகரை மீதான பொருளாதாரத் தடை வாகரையில் அமுலிலிருந்தது. இதனால் அப்பாவி மக்களும் வறிய மக்களும் கஷ்டங்களை அனுபவித்தனர்.

**இளம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளும் இடம்பெற்றன. கணவனைக் கைது செய்து முகாமில் வைத்துவிட்டு வீட்டிலிருக்கும் மனைவியை பாலியல் வல்லுறவிற்கும் கொடுமைகளுக்கும் இராணுவ அதிகாரிகள் உட்படுத்தினர். இதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களின் கணவன்மார் காணாமல் போயினர்.**

1990 ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட அச்ச நிலை, போர்ச் சூழலினால் வாகரையைச் சேர்ந்த பலர் வெளியேறிவிட்டனர்.

வாகரைப் பிரதேசம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் என்பதால் அதைத் தக்கவைத்துக் கொள்வதில் இரு தரப்பினருமே பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டனர். புலிகள் படை முகாம்களைத் தாக்குவது மாத்திரமின்றி படையினருக்கான விநியோகப் பாதையிலும் அடிக்கடி தாக்குதல்களையும் நடத்தினர். 1996 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கட்டுமுறிவு இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தி முகாமை அழித்தனர். இதனால் கட்டுமுறிவு மற்றும் கதிரவெளி முகாம்கள் மூடப்பட்டு படையினர் வெளியேறினர். இதனால் இப்பகுதிகள் புலிகளின் வசமாகின. ஆனால் படையினர் அங்கிருந்து வெளியேறும்போது அங்கிருந்த வீடுகள் பொதுக் கட்டிடங்கள் என்பவற்றை தரைமட்டமாக்கிவிட்டே சென்றனர். எனினும் வாகரை இராணுவ முகாம் தொடர்ந்தும் இயங்கியதுடன் மேலும் பலப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக 1997 ஆம் ஆண்டில் வாகரை முகாமையும் படையினர் மூடிவிட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறும் போது வீடுகளில் கூரைகள் கழற்றப்பட்டும் சில வீடுகள் இடிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டன. புலிகளின் கையில் இப்பிரதேசம் இருக்கும் போது வெறும் சுடு காடாகவே இருக்க வேண்டும் என்பதில் இராணுவத்தினர் குறியாக

(23 ஆம் பக்கம் பார்க்க)

**எத்தனை நாள்**

**துயின்றிருப்பாய்**

**என்னருமை**

**தாய்மண்ணே..!**

# அரசு அதிகாரத்தின் பங்காளிகளாக மலையக மக்கள் மாற்றப்படவில்லை

(சென்றவாரத் தொடர்ச்சி....)

-புதிய பண்பாட்டு அமைப்பு-

நவீன சமூகத்தில் ஓர் நடுக் குடும்பத்தின் குடியிருப்பானது.

| | |
|---|---|
| வரவேற்பறை | - 1 |
| சமையலறை | - 1 |
| உணவு அறை | - 1 |
| படுக்கை அறைகள் | - 2 |
| படிப்பறை | - 1 |
| குளியலறை | - 1 |
| களஞ்சிய அறை | - 1 |
| மொத்தம் | - 8 |

ஒரு முற்றம், போக்குவரத்துப் பாதை என்பனவற்றைக் கொண்டிருப்பது அவசியம் எனக் கருதப்படுகின்றது.

**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மலையக தோட்ட குடியிருப்புகளின் இன்றைய நிலை**

இன்றைய திகதிவரை நிர்மாணிக் கப்பட்டுள்ள சகல மலைக் குடியிருப்புகளிலும் ஒரு படுக்கையறை, ஒரு சிறிய சமை யலறை ஒரு மலசலகூடம், ஒரு சிறு வர வேற்பறை மட்டுமே காணப்படுகின்றன. இது 21ம் நூற்றாண்டு நோக்கிய நவீன அடிமைத்தனத்தைப் பேணுவதற்கான எத் தனத்தில் ஒரு பகுதியாகவே காணப்படு கின்றது.. பல புதிய குடியிருப்புகளுக்கு முறையான குடிநீர், மின்சாரம், வீதி வசதிகள், கழிவகற்றல் வசதிகள், பொது நோக்கு மண்டபங்கள், பொழுதுபோக்கு இடங்கள் எதுவுமேயில்லை. மேலும் அவை போதிய பாதுகாப்பான காணிகளில் நிர்மாணிக்கப்படவில்லை என்பதால் எவ்வேளையிலும் இவை இயற்கை பேரிடர்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

> **நீண்டகால அரசியல் சமூக இருப்புக்கான செயல்திறன் வாய்ந்த தொலைநோக்கு உடைய திட்டங்களின்றி முன்னெடுக்கப்படும் போலி அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு அரசியல் சமூகத்தின் எதிர்காலத்தின் மீது எத்தகைய தாக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உலகம் முழுவதும் பல்வேறு மக்கள் இனங்களின் வரலாறு களிலிருந்து எம்மால் அறியமுடிகின்றது.**

(உதாரணம் பெரிய எலிப்படை தோட்டம், லொயினோன் தோட்டம், கெம்பியன் தோட்டம், புருட்கில் தோட்டம்)

7 பேர்ச் காணி யார்? எவர்?

தற்போதைய ஏற்பாடுகளின்படி 7 பேர்ச்சஸ் காணியும் அதிலொரு வீடும் கோரப்படுகின்றது. இதன்படி மூன்று இலட்சம் வீடுகள் கட்டப்பட்டாலும் 2100000 பேர்ச் காணி தேவைப்படும். இது மலையகப் பெருந்தோட்டக் காணிப் பரப்பில் 13125 ஏக்கராக மட்டுமே அமையும்.

1300000 இலட்சம் ஏக்கர் பெருந் தோட்டக் காணிகளின் சமூக அரசியல் உரித்துடமை யாருக்குச் சொந்தமாகும்? என்பது இன்னொரு முக்கியத்துவமிக்க வினாவாகும். மேலும் மலையக பெருந்தோட்டங்களையும் அதனை சார்ந்தும் காணப்படும்.

- வனவளங்கள், நீர் நிலைகள் யாருக்கு சொந்தமாகும்?
- பெருந்தோட்டங்களில் பயிர்ச்செய்கை பண்ணப்படுகின்ற, பயிர் செய்யப்படாத காணிகள் யாருக்கு உடமையாகும்?
- அவை யாருடைய நலனுக்காகப் பயன் படுத்தப்படும்? என்ற வினாக்கள் தவிர்க்கப்படமுடியாதவை.

ஒரு அரசியல் சமூகம் என்ற வகையில் எமது உற்பத்தி உறவுகள் எமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டாமா? உற்பத்திற்குரிய நிலங்கள், வளங்கள் எமது ஆளுகைக்குட்பட வேண்டாமா? என்ற வினாக்களும் எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

ஏனெனில் இம்மக்களினதும் அரசியல் அபிலாசைகள், அதிகார பரவலாக் கத்தில் இவர்களுக்கான பங்கு தொடர்பான வினாக்களுக்கு விடை காணப்படாத நீண்ட மௌனமே பதிலாகக் கிடைக்கின்றது.


நீண்டகால அரசியல் சமூக இருப் புக்கான செயல்திறன் வாய்ந்த தொலை நோக்கு உடைய திட்டங்களின்றி முன் னெடுக்கப்படும் போலி அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு அரசியல் சமூகத்தின் எதிர் காலத்தின் மீது எத்தகைய தாக்க விளை வுகளை ஏற்படுத்தும் என்பது உலகம் முழுவதும் பல்வேறு மக்கள் இனங் களின் வரலாறுகளிருந்து எம்மால் அறிய முடிகின்றது.

**காணி வீட்டுரிமைக்கான சுலோகங்கள் வாய்ப்புகளும், ஐயங்களும்.**

மலையக மக்களின் காணி வீட்டுரிமை தொடர்பான கோரிக்கைகளுக்கு ஒரு நீண்ட பாரம்பரியமிருக்கின்றபோதிலும், அது தொலை நோக்குடையதாகவோ, அரசியல், சமூக, பொருளாதார தாற் பரியங்களை விளங்கிக் கொண்டதாகவோ அமையவில்லை எனலாம். அதுவொரு வெற்று அரசியல் கோசமாக மேற்கிளம்பு வதும் மறக்கப்படுவதும் மரபாகிப் போயுள்ளது.

அமரர் தொண்டமானும் சகபாடி- களும் முன்வைத்த தோட்ட குடியிருப்புகளும் அதனோடு தொடர்புடைய காணியும் சொந்த மாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை 90களில் மேற்கிளம்பியது. அதனுடன் நிகழ்ச்சியாக அப்போதைய பிரதமரான ரணில் விக்ரமசிங்க அவர்கள் புரியாத புதிரானதொரு பிரகடனத்தை வெளியிட்டார்.

பின்னர் தோட்ட வீடமைப்பு அமைச் சொன்றைப் பெற்றுக்கொண்ட அமரர் பெரியசாமி சந்திரசேகரனும் அவரது



சகாக்களும் தனி வீடமைப்புத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள். அதுவும் தோல்வி யுற்றதோர் திட்டமாகக் கைவிடப்பட்டது. பின் ஆறுமுகம் தொண்டமானால் முன் னெடுக்கப்பட்ட மாடிவீட்டுத் திட்டம், சி.பி ரட்ணாயக்கவினால் முன்னெடுக்கப்பட்ட இரட்டை வீட்டுத்திட்டம் என்பனவும் கைவிடப்பட்டுவிட்டன. சுய உதவி வீட மைப்புத் திட்டங்கள், கடனுதவித்திட்டங்கள் யாவும் செயலிழந்து போயுள்ளன. மேலும் இந்திய உதவியுடனான வீடமைப்புத் திட்டம் பற்றிப் பேசப்படுகின்றது. இந்த கதையாடல்களுக்கு ஐந்தாண்டுகள் நிறை வடைந்து விட்டன.

தற்போது தோட்ட கட்டமைப்பு அமைச்சு மீளுருவாக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்கள் 20000 வீடுகள் 7 பேர்ச் காணியில் கட்டப்போவதாக அறிவித்துள்ளார். இவற் றுக்கு கணவன் மனைவி இருவர் பெயரி லான காணி உறுதி வழங்கப்படுவது பற்றிப் பேசப்படுகின்றது.

அரச சார்பற்ற அமைப்புகளும், ஊடக நிறுவன ஊழியர்களும், சுயாதீன குழுக்களும் 7 பேர்ச், 10 பேரச், 20 பேர்ச் காணியுரிமையுடன் தனிவீடு என்ற கோசத்தை முன்வைக்கின்றன.

காணி வீட்டுரிமைக்கான மலையக மக்களின் கோரிக்கை முன்னேற்றகரமானது கட்டாயமாக அனைவரும் ஒன்றிணைந்து வென்றெடுக்கப்பட வேண்டியதாகும்.

ஆனால் இக்கோரிக்கைகள் ஏன் ஒத்த கருத்துடையதாயில்லை என்பதற் கும் இவற்றின் பின்னாலுள்ள பூகோள மயமாக்கல் மறுகாலனித்துவ மயமாக்கல், பிராந்திய வல்லாதிக்கவியூகங்கள், பேரின வாத நிகழ்ச்சி நிரல்கள், அரசற்ற நிலை யிலும் ஆக்கிரமிக்கவும், ஆக்கிரமிப்புக்கு உடந்தையாகவும் நிற்கின்ற மக்களினாங் கள், பன்னாட்டு நிறுவனங்கள், கார்ப் பரேட்டுக்கள் எதிர்காலத்தில் வளமான மலையக பெருந்தோட்டக் காணிகள், வன வளங்கள், கனிமங்கள், உயிராதாரங்கள் என்பனவற்றை சூறையாடும் தொலை நோக்குடைய செல்வாக்குடைய தனிநபர் கள், நிறுவன அதிகார வர்க்கங்கள். நவ காலனித்துவ அமைப்புகளால் பயிற்று விக்கப்பட்ட புத்தி ஜீவிகள், அரசுகளின் நிகழ்ச்சிநிரல் குறித்தும் சிந்திக்க வேண்டி யுள்ளது.

மானுடவியல், சமூகவியல், அரசியல், ரீதியான ஆழமான ஆய்வுகளும், தேடலுமின்றி ஒரு மக்களினத்தின் எதிர் காலத் தலைவிதியை நிர்ணயிக்க முடியுமா என்பது முக்கியமான பிரச்சினையாகும்.

தொலைநோக்கற்ற காணி, வீட்டு ரிமைக்கான கோரிக்கையானது ஒரு மக்களினத்தின் மூலோபாய இருப்பை யும் சமூகவாழ்வையும் எந்தளவு தூரம் பாதிப்பதாய் அமையும் என்பது சிந்தனைக் குரியதொன்றாகக் காணப்படுகிறது.

ஒரு மக்களினத்தின் உற்பத்தி உறவுகளில் இருந்து அம்மக்களினத்தை முற்றாக பிரித்துவைக்கும் சதியொன்றின் பகுதியாக எதிர்காலத்தில் இத்திட்டங்கள் மாறதிருப்பதை உறுதிசெய்ய என்ன செய்யப் போகின்றோம்?

பெருந்தோட்ட உற்பத்தி உறவுக ளோடும் சமூக வாழ்வோடும் தொடர்புடைய 13000 இலட்சம் ஏக்கர் நிலப்பகுதியில் 1300 ஏக்கர் நிலப்பகுதியில் (இவை தரிசு நிலங்களும், கைவிப்பட்ட காணிகளுமாக அமையக்கூடும்) (ஏற்கனவே 38000 ஏக்கர் காணிகள் தரிசுநிலங்களளனவும் அவற்றைப் பகிர்ந்தளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன). (யாருக்கு?)

எனவே

01. பெருந்தோட்டக் காணிகள் அனைத்தும் தொழிலாளர் கூட்டுறவு அமைப்புகளிடம் கைமாற்றப்படவேண்டும். அதற்காக கொள்கைகள் உருவாக்கப்படவேண்டும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# மாதொருபாகன்

## (நாவல்)






5

பெருமாள் முருகன் தமிழ்நாட்டின்புகழ்பெற்றஎழுத்தாளர். இவருடைய "மாதொருபாகன்"என்னும்இந்தநாவலை எதிர்த்து சாதி அமைப்புகளும் மதவாத அமைப்புகளும் ஹர்த்தால் போராட்டங்களை நடாத்தின. இதனால் கவலையுற்ற பெருமாள் முருகன் தான் "மாதொருபாகன்" நாவலை திரும்பப் பெறுவதாகவும் இனிமேல் எதுவும் எழுதப் போவதில்லை எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்தும் எழுதுமாறு வேண்டுகின்றோம். அவருக்கு ஆதரவுதெரிவித்து இந் நாவலை தொடராக வெளியிடுகின்றோம்.

அம்மாவுக்கும் என்ன சாபமாக இருக்கும் என்று தெரியவில்லை. 'எந்த நாயோ செஞ்சது உம்மேல ஏன்டா வந்து விடியோனும்' என்று புலம்பினாள். இரண்டு மூன்று நாள் யோசித்து விட்டு அப்புறம் ஒரு சம்பவத்தைச் சொன்னாள். அவன் தாத்தாவின் அப்பன் காலத்தில் நடந்ததாம்.

அவர் பெயர் நாச்சிமுத்துக் கவுண்டர். கடலைக் காட்டில் கொட்ட முத்துப் போட்டு அந்த வருசம் நல்ல விளைச்சல். வாரம் ஒரு மூட்டை இரண்டு மூட்டை என்று சந்தைக்குக் கொண்டு போனார்கள். ஒரு வாரம் இரண்டு மூட்டை கொண்டு போய்ப் புளியமரத்தடியில் இறக்கி வைத்தார்கள். கொட்டமுத்து வாங்கும் செட்டியார் புளிய மரத்தடியில் படியும் வள்ளமுமாக ஆட்களோடு இருப்பார். அப்போது என்ன, படி ஓரணாவிற்கும் குறைவு தான். ஒரு மூட்டை கொண்டு போனால் ஐந்து ரூபாய் கிடைத்தால் அதிகம்.

நாச்சிமுத்துக் கவுண்டர் தன் வண்டியிலிருந்து மூட்டைகளை இறக்கி வைத்த அதே சமயத்தில் பழைய பாளையத்திலிருந்து ஒரு வண்டி வந்து நின்றது. வண்டி நிறைய மூட்டைகள். பெரிய பண்ணயம் போல. மூட்டையை இறக்க ஆளில்லை. செட்டியார் தான் சொன்னார்.

'கவுண்டரே அப்படியே அந்த மூட்டைய எறக்கிக் குடுங்க. கூலி வாங்கிக் குடுத்தர்றன்.'

நாச்சிமுத்துக் கவுண்டர் ஓடி ஓடி இறக்கினார். கடைசியில் பார்த்தால் ஒரு மூட்டை குறைகிறது. வண்டிக்காரர் "மொத்தம் பதினாலு மூட்டை" என்றார். இருந்தது பதின்மூன்று.

நாச்சிமுத்துக் கவுண்டர் இறக்கி வைத்திருந்த இரண்டு மூட்டை இப்போது மூன்று மூடைகளாயிருந்தன. செட்டியார் பார்த்து விட்டு. ' நீங்க ரண்டு மூடதானா இறக்குன மாதிரியிருந்தது' என்றார். '

மறந்தாப்பல இங்க கொண்டாந்து ஒன்ன எறக்கிட்டன்' என்று சொல்லியிருந்தால் பிரச்சினை அத்தோடு முடிந்து போயிருக்கும். "நான் மூணு மூட்ட கொண்டாந்தன்' என்று அவர் சாதித்தார். பழைய பாளையத்து வண்டிக்காரர் விடவில்லை. பிரச்சினை சத்தியத்திற்குப் போயிற்று.

தீராத பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவான நீதி மன்றம் திருச்செங்கோட்டு அறுபதாம்படி மருக் கோயில் தான். மலையின் பாதி வழியில் பாறையில் செதுக்கிய முருகன் நின்றிருக்கிறார். ஒருகாலத்தில் கோயிலே அது தான் என்றும் ஐதீகம். மலையைச் சுற்றிலும் காடாக அடர்ந்திருந்த காலத்தில் காட்டுக்குள் வசித்த குடிகள் உருவாக்கிய தெய்வம். அந்த முருகன். ஆதி தெய்வம் இன்று சத்தியம் காத்து நிற்கிறது. அறுபது சத்தியப்படிகள் தொடங்கியதும் ஒவ்வொரு படியிலும் குனிந்து கும்பிட்ட படியேதான் மலையேறுவார்கள். மலை உச்சிக்குப் படி வெட்டி மேலே கோயில் அமைத்துப் பெரிதாக்கி விட்டாலும் ஆதித் தெய்வம் அறுபதாம் படி முருகன் தான்.

அறுபது படிகளிலும் எண்ணெய் ஊற்றி ஏற்றும் வகையில் கல் விளக்குகள். குற்றம் சாட்டுபவர் கல்விளக்குகளை நிறைத்து ஏற்றி வைப்பார். மறுப்பவர் அறுபது விளக்குகளையும் வரிசையாக அணைத்துக் கொண்டே வந்து முருகன் காலடியில் 'சத்தியமா நான் இதைச் செய்யல' என்று முடிக்க வேண்டும். நாச்சிமுத்துக் கவுண்டர் அறுபது விளக்குகளையும் அணைத்தார். பாறையில் கீறிய உருவமாய் நினைத்து முருகன் காலடியில் சத்தியம் செய்தார். கேவலம், ஒரு மூட்டை கொட்டமுத்துக்காய், வெறும் ஐந்து ரூபாய் காசுக்காய்ப் பொய்ச் சத்தியம் செய்தார்.

**- பெருமாள் முருகன்-**

**தீராத பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவான நீதி மன்றம் திருச்செங்கோட்டு அறுபதாம்படி மருக் கோயில் தான். மலையின் பாதி வழியில் பாறையில் செதுக்கிய முருகன் நின்றிருக்கிறார். ஒருகாலத்தில் கோயிலே அது தான் என்றும் ஐதீகம்.**

அந்தச் சத்தியத்திற்கு அப்புறம் நாச்சிமுத்துக் கவுண்டர் கொஞ்ச நாளில் பைத்தியம் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்தாராம். யாரைப் பார்த்தாலும் 'வா அறுபதாம் படிக்குப் போகலாம்' என்று கையைப் பிடித்து இழுப்பாராம். ஊரிலிருந்து போய் திருச்செங்கோட்டு வீதிகளில் திரிந்து கொண்டு இருந்தவர் என்ன ஆனார் என்று யாருக்கும் தெரியாதாம். அவருக்குத் தாத்தா ஒரே குழந்தை. தாத்தாவுக்கு அப்பன் ஒரே குழந்தை. தாத்தாவும் அப்பனும் கூட அற்பாயுளில் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அம்மா இதைச் சொல்லி ஒப்பாரி வைத்தாள். அதற்குப் பரிகாரம் கேட்டு காளியும் பொன்னாவும் மலைப்படி ஏறி இறங்கினார்கள். அறுபது நாட்கள் அறுபதாம் படி விளக்குகளை ஏற்றி முருகன் காலடியில் விழுந்து மன்றாடினார்கள். அந்த வருசம் விளைந்த கொட்டமுத்து அத்தனையும் எண்ணெய் ஆயிற்று. அப்பவும் போதவில்லை. காசுக்கு வாங்கியும் தானம் பெற்றும் படி விளக்குகளை நிறைத்தார்கள். முருகன் மேனி குளிர எண்ணெய் வார்ப்பு.

பொழுது அடிச்சா வண்டியக் கட்டிக் கொண்டு இருவரும் கிளம்பிவிடுவார்கள். அடிவாரத்தில் மாடுகளை அவிழ்த்துக் கட்டிப் பூக்கடைக்காரரிடம் சொல்லிவிட்டு மலை ஏறினால் அறுபதாம்படி அடைவதற்குள் பொழுது மங்கிவிடும் அறுபதாம் படி பூசாரி தயாராக இருப்பார். காளி விளக்குகளில் எண்ணெய் ஊற்ற பொன்னா ஏற்றி வைப்பாள். தினமும் விளக்கெண்ணெய் யால் முருகனைப் பூசாரி குளிக்கச் செய்வார். நூற்றாண்டுக் கோபத்தைத் தணித்துக் குளிர்ச்சிதர விளக்கெண்ணெய்தான் உபாயம். பூசை முடித்து மலையிறங்கி ஊருக்கு வந்து சேர்வதற்குள் ஊரடங்கிப் போகும். அப்பவும் முருகன் தணிந்து இறங்கவில்லை. பாட்டி வேறொரு கதை சொன்னாள்.

'உங்கம்மா தான் கொட்டமுத்து மூட்ட வாங்கற செட்டியாரா இருந்தாளா? ஏதோ நாய் கொட்டமுத்து மூட்டயத் திருடுச்சமா. அத எம் பரம்பர மேல கொண்டாந்து எறக்கறா. எந்த தலக்கட்டுல இப்பிடி ஆரும் சொல்லிக் கேக்குல. உங்கொம்ம ராத்திரி எல்லாம் ஓசிச்சு ஓசிச்சு இப்பிடி ஒன்ன அவளே உருவாக்கியிருப்பா. அவளுக்கென்ன வாப்பாடா தெரியும். இப்ப வந்த கழுத. எப்பஎயோ சாமிக்கத் தானா வெளக்குப் போட்ட. நல்லது தான் உடு' என்றாள் பாட்டி . அவளும் தன் பரம்பரை தாங்குமா என்னும் கவலையோடு தான் போய்ச் சேர்ந்தாள். எந்தக் கோயில் திருவிழா என்றாலும் ' போய் மடிப்பிச்ச குடாயான்னு வேண்டிக்க' என்று சொல்லியனுப்புவாள். எல்லாரிட்டையும் மடிப்பிச்ச கேட்டு ஏந்தி நின்றாயிற்று. ஆனால் மடியில் ஒன்றும் விழவில்லை.

அம்மாவுக்குப் போட்டியாக பாட்டியும் சொன்னாள். சாபக்கதை சொல்வதில் மாமியாரும் மருமகளும் போட்டியிடுவதாக அவன் நினைத்தான். யார் எதைச் சொன்னாலும் அதைத் தட்டாமல் செய்தாக வேண்டும் என்ற நிலையில் என்னை வைத்துவிட்டாயே என்று புலம்புவான். செய்ய மறுத்தால் பொன்னா புலம்புவாள். அந்தக் காரியம் ஒன்றைச் செய்து விட்டால் உடனே குழந்தை பிறந்து விடும் என்னும் படி அவசரம் காட்டுவாள். பாட்டி கதைக்கும் அப்படித்தானாயிற்று. பாட்டி சொன்ன கதைக்குக் காலில்லை. வெறும் வாய்தான்.

(தொடரும்....)




# (Opera Jawa)

# ஓபரா ஜாவா

## புதிய களத்தில் பொருத்தப்பட்ட நவீன ராமாயணம்

ஜெ.பிஸ்மி



திரைப்படம், அது உருவாகின்ற பிரதேசத்தின் கலாச்சார வேர்களை வெட்டியெறியாமல், அதனுடன் பின்னிப்பிணைந்து உருவாக்கப்படுகிற போதுதான் அப்படம் மிகச்சிறந்த படைப்பு என்ற நிலையை அடைகிறது. மட்டுமின்றி, அது உருவாக்கப்பட்ட மண்ணின் பிரதிபலிப்பாகவும், அங்கு வாழ்கிற மக்களின் கலாச்சாரப் பதிவாகவும் பரிணமிப்பதோடு, காலத்தால் அழிக்க முடியாத தன்மையையும் பெறுகிறது! 2000 ஆம் ஆண்டில் வெளியான 'தி பொயட்' என்ற திரைப்படம் மூலம் உலகின் கவனத்தைப் பெற்ற இந்தோனிஷிய இயக்குநர் கேரின் நுக்ரோஹா (Garin Nugroho) இயக்கிய 'ஓபரா ஜாவா' (Opera Jawa) என்ற திரைப்படம், இவ்வகையைச் சேர்ந்த மிகச்சிறந்த படங்களில் ஒன்றாய் இருக்கிறது. நாற்பத்தாறு வயதான நுக்ரோஹா படமெடுக்க புதிய வழிமுறையைத் தேடுபவர். அதன்படியே தன் ஒவ்வொரு படத்தையும் எடுக்க தலைப்பட்டும் வருபவர். 'ஓபரா ஜாவா' படமும் அவர் எண்ணப்படி புதிய உத்தியில் உருவான படமே!

2006 இல் வெளியாகி பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் கலந்து கொண்டு, பல்வேறு பிரிவுகளில் விருதுகளையும் பெற்ற இப்படம் இந்தோனிஷிய திரைப்பட வரலாற்றில் மிக முக்கியமான திரைப்படமாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த கௌரவத்துக்கும், அங்கீகாரத்துக்கும் மிகப் பொருத்தமான படமாகவே இருக்கிறது 'ஓபரா ஜாவா' திரைப்படம்.

இப்படத்தின் கதை இந்தோனிஷியாவின் ஜாவானீஸ் கிராமம் ஒன்றில் நிகழ்கிறது. சிடியோ-சிதி இளம் தம்பதியர். சிறிய கிராமத்தில் வசிக்கும் அவர்களின் வாழ்க்கை மிகக் கடினமாகக் கழிந்து கொண்டிருக்கின்றது. சுற்று வட்டாரக் கிராமங்களுக்குச் சென்று மட்பாண்டங்களை விற்பனை செய்கிற தொழில் சிடியோவுக்கு. சிதி ஒரு நடனமாது. நாட்டுப்புற இசைக்கு மேடைகளில் ஆடுகிறவள். ஆரம்பத்தில் தன் மனைவி சிதி மீது அன்பும் பாசமும் கொண்டவனாக இருந்த சிடியோ, காலப்போக்கில் எதிர்மறையான மனிதனாகிறான். காரணம்.. தன் மனைவி சிதி மீது அவனுக்கு ஏற்பட்ட சந்தேகம் அவனுக்குள் குடிகொண்ட சந்தேகம், மெல்ல மெல்ல அதிகரித்து, அவனை மனிதத் தன்மையற்றவனாகவே மாற்றிவிடுகிறது.

தொழில் நிமித்தம் வெளியூர்களுக்குச் சென்று பல நாட்கள் கழித்து கிராமத்துக்குத் திரும்பும் சிடியோ, சிதியை வெறுக்கிறான். அவளைப்பற்றி அவனுக்குள் படிந்த அருவருப்பான எண்ணத்தின் காரணமாய் அவளுடன் இயல்பாய் பேசுவதையும், சேர்ந்து உறங்குவதையும் தவிர்க்கிறான். கணவனின் பாராமுகம் சிதியை மிகவும் கவலைக்குள்ளாக்குகிறது. தான் என்ன தவறு செய்தோம் என்று காரணம் தெரியாமல் குழம்புகிறாள். கணவனின் புறக்கணிப்பை எண்ணி மனசுக்குள் மருகுகிறாள். இன்னொரு பக்கம், அவளுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறான் அதே கிராமத்தில் இறைச்சிக்கடை வைத்திருக்கும் லுடிரோ (Ludiro). வசதிக்காரனான லுடிரோ, சிதி மீது மோகம் கொண்டு அலைகிறான். தன் பணம், வசதி, ஆடம்பரத்தைக் காட்டி அவளைத் தன் வசப்படுத்த முயல்கிறான். அவனது நோக்கம் தெரிய வரும்போது ஆத்திரமடைகிறாள் சிதி.

லுடிரோவின் கெட்ட எண்ணத்துக்கு அவனது அம்மாவும் உடந்தையாக இருக்கிறாள். சிதியை தன் மகனின் விருப்பத்திற்கு இசைய வைக்கத் தன்னால் இயன்ற வழிகளில் முயற்சிக்கிறாள் அவள். தன்னிடமிருக்கும் விலை உயர்ந்த துணியை சிதியிடம் கொடுப்பதன் மூலம் லுடிரோவைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை சிதியின் மனதில் ஏற்படுத்த நினைக்கிறாள். அவளது எண்ணம் வெற்றியடைகிறது. அதுவரை கணவனுக்கு உண்மையான மனைவியாக இருக்கும் சிதி, லுடிரோவின் அதிரடியான முயற்சிகளால் கவரப்படுவதோடு, அவனது அன்பை மறக்கமுடியாத நிலைக்கும் தள்ளப்படுகிறாள். மெல்ல மெல்ல தன் வசம் இழக்கும் சிதி, கணவனுக்கும், லுடிரோவுக்கும் இடையில் சிக்கிக் கொண்டு ஊசலாட்ட மனநிலையில் தவிக்கிறாள்.


உலக அளவில் நிலவும் சமமற்ற சமூகத்தில் வறுமையில் உழல்பவர்கள் மீது, வசதிபடைத்தவர்களால் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுவரும் பொருளாதாரத் தாக்குதலை மிக அழகாக சித்தரிக்கும் விதமாக காட்சிகளைக் கோர்த்திருக்கும் இயக்குநர், அதில் வசதி படைத்தவர்கள் மிகச் சுலபமாக வெற்றியடையும் போக்கையும் கோடிட்டுக்காட்டுகிறார் சிதி-லுடிரோ தொடர்பான காட்சிகள் மூலம்.

'ஓபரா ஜாவா' திரைப்படம் மேலோட்டமான பார்வைக்கு ஒரு கிராமத்தில், ஒரு குடும்பத்தில், கணவன் மனைவிக்கு இடையில் நடக்கும் சமகாலக் கதை என்ற தோற்றத்தைத் தந்தாலும், சற்று ஆழ்ந்து நோக்கும் போது, அக்கதையின் அடிநாதம் புரியும். ராமாயணத்தின் நவீன வடிவமாக இப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ராமாயணக் கதையின் சாரத்தை மையமாகக் கொண்ட இக்கதையில், ராமாயணத்தின் பிரதான பாத்திரங்களான ராமனும், சீதையும், ராவணனும் புதிய களத்தில் பொருத்தப்பட்டிருக்கிறார்கள். ராமாயணத்தில் மன்னனாக சித்தரிக்கப்பட்ட ராமனை, தன் கதையில் மண்பாண்டம் விற்பவனாக மாற்றியிருக்கிறார் இயக்குநர்.

**ஆரம்பத்தில் தன் மனைவி சிதி மீது அன்பும் பாசமும் கொண்டவனாக இருந்த சிடியோ, காலப்போக்கில் எதிர்மறையான மனிதனாகிறான்.காரணம்.. தன் மனைவி சிதி மீது அவனுக்கு ஏற்பட்ட சந்தேகம். அவனுக்குள் குடிகொண்ட சந்தேகம், மெல்ல மெல்ல அதிகரித்து, அவனை மனிதத் தன்மையற்றவனாகவே மாற்றிவிடுகிறது.**

சீதையின் பெயரை ஒட்டியே அவனது மனைவிக்கு சிதி என்று பெயரையும் சூட்டியிருக்கும் இயக்குநர், ராமாயணத்திலிருந்து கதையை எடுத்தது போன்று, இந்தோனிஷிய கலாச்சார நடனங்களையும், நாட்டுப் புறப்பாடல்களையும், நாட்டுப்புற இசையையும் படம் நெடுக இழையோட விட்டிருக்கிறார். பழைய தமிழ்த்திரைப் படங்களைப் போன்று அடிக்கடி பாடல்களும், நடனங்களும் இடம் பெற்றிருப்பதால், நாட்டிய நாடகத்தைக் காண்கின்ற உணர்வு எழுந்தாலும், இயக்குநர் கையாண்ட இந்த உத்தி ஓபரா ஜாவா திரைப்படத்துக்குத் தனியொரு அடையாளத்தையே கொடுத்திருக்கிறது மட்டுமல்ல, இந்தோனிஷியாவின் கலாச்சாரத்தை உலகமெங்கும் எடுத்துச் செல்லும் கருவியாகவும் 'ஓபரா ஜாவா' திரைப்படம் அமைந்திருக்கிறது. ●

சினிமா



# அன்றைய நாள்



யோ.யாழினி
பரந்தன்

உணவிழந்து
உறவிழந்து
உடுப்பதற்கும் உடையிழந்து
அன்பான ஆறுதல்களை இழந்து
உதிரம் சொட்ட சொட்ட
வழி இழந்து நின்றோம்
அன்றைய நாளில்..
கல்லறையிலும் மறவோம்
அந்த நினைவுகளை..

# ஈழத்தில் மட்டுமா?



வெளிச்சத்துக்குள்
நடந்து வருகின்றன
மறைக்கப்பட்ட....
படு கொலைகள்...!

மனிதம் அழித்தொழிப்புகள்
ஈழுத்தில் மட்டுமல்ல.!

மனநோய்க்கு
பலியானவனின்
கையில் கிடைத்த
துப்பாக்கி முனையில்
மாதேஸ்வரத்தின்....
மலைக் கிராமங்கள்...!


சட்டத்தின் விழிகள்
துப்பாக்கி முனையில்
சுருண்டு சாகும்!

சுமைதாங்கும்
மனித உயிர்கள்.
செல்லாக்காசாய்
மண்ணில் வீழும்!

அதிகாரத்தின்
நவீன
கோயபல்சுகளின்.
பலவந்த செய்திகள்
நிசத்தைக் கொன்றன....!

நீதியின் காலடியில்...
நியாயங்கள் இடையறுத்து..
எலும்பாய் கிடந்தன...!

மு.சி.கந்தையா



# மன்னம் பேரிகள்

ஆழியாள்
காலைப் பொழுதுகள் பலவற்றில்
வீதி வேலி ஓரங்களில்
நாற்சந்திச் சந்தைகளில்
பிரயாணங்கள் பலவற்றில்
கண்டிருக்கின்றேன்.

நாய். கரடி, ஓநாய்.
கழுகு, பூனை, எருதாய்ப்
பல வடிவங்கள் அதற்குண்டு.

தந்திக் கம்பத்தருகே
கால் தூக்கியபடிக்கு
என்னை உற்றுக்கிடக்கும்
அம் மிருகம் துயின்று
நாட்கள் பலவாகியிருக்கும்.


அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று.
அவற்றின் பாலைத்தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்திற்று.

அழகி மன்னம் பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்.
அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில்- நானும்
அவளுக்குப் புரிந்த
அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையைப் புரிந்து கொண்டேன்.

அருகே கணவன்
மூச்சு ஆறிக் கிடக்கிறான்.

ஆழியாள்

# நதி



ஜப்பானிய மொழியில்- சண்ட்ரோ தனிக்காவோ
தமிழாக்கம்- ஈரோடு தமிழன்பன்

அம்மா!
நதி ஏன் நகைத்துக் கொண்டிருக்கிறது?

“ஏனா
சூரியன் அந்த நதிக்கு
அப்படிக் கூச்சம் ஊட்டுகிறான்”

அம்மா
நதி ஏன் பாடிக் கொண்டிருக்கிறது?

“வானம் பாடி
அந்த நதியின் குரலைப்
புகழ்ந்ததால்தான்”

அம்மா!
நதி ஏன் தண் என்றிருக்கிறது?

“உறைந்தபனி
ஒரு காலத்தில் தன்னைக் காதலித்ததை
இப்போது
நினைத்துக் கொண்டிருக்கிறது”

அம்மா!
நதிக்கு
வயது என்ன ஆகிறது?

‘எப்போதும்
இளமையாக இருக்கும்
வசந்த காலத்திற்கும் அதற்கும்
ஒரே வயது’

அம்மா!
நதி ஏன் ஒரு போதும்
ஓய்வெடுப்பதில்லை?

“வீட்டுக்கு
எப்போது அந்த நதி
வந்து சேரும் என்று கடல்தாய்
காத்துக் கொண்டிருப்பதால்”

# வேலி



அவையும்
ஒட்டடைகள் படிந்து
எப்போதோ கறுத்துப் போனவை.

நட்சத்திரப் பூக்களை
எண்ண முடியாமல்
மேலே கவிழ்ந்தபடி கூரை
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய்ப் போனது.
கம்பி போட்ட சாரளம் கூட
உயரமாய்.

ஆனாலும் திறந்தபடி
அதனூடே காற்று,
எப்பொழுதும்
மிகவும் இரகசியமாய்
உன்னிடம் என்னை
அழைக்கிற காற்று.
என்னைச் சூழவும் சுவர்கள் தான்.
நச்...நச்....என்று
ஓயாமல் கத்திக் கொண்டிருக்கிற
பல்லிகள் ஊர்கிற சுவர்கள்.

உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்.
பழைய பஞ்சாங்கங்களில்
புதிதாக
நம்பிக்கை தருவதாய்
ஒரு சொல்லைத் தேடிப் பார்த்தபடி.
எப்பொழுது தான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வர முடியும்?
உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவோ?
இரண்டு சிட்டுக் குருவிகளை
இங்கே அனுப்பேன்...
அல்லது இரண்டு வண்ணத்துப்
பூச்சிகளையாவது...

ஊர்வசி

சென்றவாரத் தொடர்ச்சி...

அகில்



# கூடுகள் சிதைந்த போது...



'என்ர ஆருயிர் மனைவி.... அவளை இப்படியே போட்டுவிட்டு எப்படி வர ஏலும். ஏழுமாதக் குழந்தை அவள் வயிற்றுக்குள்ளேயே கருகிப்பேச்சுது. இவையள் இல்லாமல் நான் மட்டும் இருந்து என்ன செய்யப்போறன்....?'

கிழவர் எங்கேயோ இருந்து ஒரு தகரத் துண்டைக் கொண்டு வாறார். 'தம்பி இதால கிடங்கைக் கிண்டு......' என்றபடி அவர் வேகமாக அந்த தகரத் துண்டால மண்ணை கிளறுகிறார். எனக்குள்ள ஒரு வேகம்... அவரிட்ட இருந்து அதைப் பிடுங்கி வேகவேகமாக மண்ணைக் கிளறுகிறேன். காய்ந்து வறண்ட நிலம் அவ்வளவு லேசில் குழியைத் தோண்டமுடியேல்லை. கிழவனும் ஏதோ தடியை முறிச்சு தன்ர பங்குக்கு நிலத்தை குத்தி எனக்கு உதவுகிறார்.

துவக்குச் சூட்டுச் சத்தம் இப்ப நல்லாக் கிட்டக் கேட்குது. சனம் விழுந்தடிச்சு ஓடுதுகள். ஆமிக்காரங்கள் ஏதோ கத்திக் கதைக்கிற சத்தம் கூடக் கேக்குது. வாகனங்களின்ர உறுமலும் கேட்குது. சனங்கள் என்னையும் கிழவனையும் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு போகினம்.

'அவையளுக்காக என்ர மனுசியின்ரயும், பிள்ளையின்டயும் உடம்பை நாய், நரி தின்னவும், காக்காய் கொத்தவும் இப்பிடியே போட்டிட்டு வரேலுமே?'

அதுக்குள்ள எரிகுண்டொன்று எங்களுக்கு அருகில் விழுந்து வெடிக்குது. ஒரு குடும்பம், இரண்டு, மூன்று குழந்தைகள் என்ர கண்ணுக்கு முன்னாலேயே எரிஞ்சு துடிதுடிக்கினம். அதைப் பார்த்ததும் என்ர உடம்பெல்லாம் பதறத் தொடங்கிற்றுது. மரண பயம் என்னைப் பிடிச்சுட்டுது. அந்தக் கோரச் சாவைப் பார்த்ததும் எனக்கு எல்லாமே மறந்து போனது. எப்பிடியாவது ஓடித்தப்பவேணும். எனக்கு உடம்பெல்லாம் பதறத்தொடங்குது. கிழவனையும் இழுத்துக்கொண்டு நான் ஓடுறன்.

உடம்பைக் குறுக்கியும், குனிந்த படியும், ஊர்ந்தும், தவழ்ந்தும் அந்த சென்றிபொயின்ட்டை நெருங்கி விட்டம். சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம்..... என்ர கையைப் பிடிச்சிருந்த கிழவரின்ர கைபிடி நழுவிப் போச்சுது. அவர் விழுந்துட்டார். நான் மற்ற சனத்தோட சேர்ந்து கைகளை மேல தூக்கிக் கொண்டு நடக்கிறன். இராணுவம் அப்பிடியே எங்களச் சுத்தி வளைச்சுது. ஏதேதோ விசாரணைகளுக்குப் பிறகு எஞ்சியிருந்த எங்களை தங்களின்ர வாகனங்களில ஏத்திக்கொண்டு முகாமுக்கு கொண்டு வந்தவை.

அங்கதான் பெரியக்காவைப் பார்த்தன். தலையில் காயம்பட்டிருந்த கயனும் இறந்து போய் அத்தான்தான் வழியில ஒரு பாழுங்கிணத்துக்குள்ள அவனை தூக்கிப் போட்டுட்டு வந்தவராம்.

'நரியள் குதறாமல் என்ர மகன் பத்திரமா இருப்பான்..' அத்தான் தலையில் கைவைத்தபடி திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு இருக்கிறார். சசியின்ர செய்தி கேட்டதும் அக்காவால அழக்கூட முடியேல்லை. யாருக்காக அழுகிறது? எதை நினைச்சு அழுகிறது எண்டு தெரியேல்ல.

பிறகு முகாம் வாழ்க்கை, விசாரணைகள் எண்டு தொடர, அக்காதான் முகாமுக்கு வெளியில போய் என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வேணும் எண்டு காரியங்களைச் செய்தவா. என்ர அம்மாவும், பெரியண்ணன் குடும்பம், சின்னக்கா குடும்பம், தங்கச்சி எல்லாரும் இங்க கனடாவில தானே இருக்கினம்.

'ஆரு இருந்தென்ன என்ர சசியும்... பிள்ளையும் எனக்கில்லையே.....'

மூத்தக்கா தான் என்னை சின்னன்னில இருந்து வளர்த்தவா. என்னில சரியான பாசம்.

'நான் பெத்த பிள்ளையத் தான் இழந்திட்டன். உன்னையும் இழக்க என்னால ஏலாது' எண்டு என்னோட பிடிவாதமா நிண்டு என்னை இங்க அனுப்பி வைச்சது அவாதான்.

என்ர மனம் முழுக்க அந்த முள்ளிவாய்க்கால் காட்டுக்குள்ள தான் சுத்திக்கொண்டு இருக்குது.
'என்ர சசி.... என்ர பிள்ளை...'

'இவ்வளவு காலமும் எனக்குச் சோறு போட்டுத் தாய்க்கு தாயாய் இருந்து என்னைப் பார்த்தவள். அவளின்ர உடம்ப நல்ல விதத்தில அடக்கம் செய்யக்கூட என்னால முடியேல்லையே...'
'பாவி...'

'நான் பாவி.... மகா பாவி. அந்தக் குழந்தைய கையில வைச்சுக் கொஞ்சத்

துவக்குச் சூட்டுச் சத்தம் இப்ப நல்லாக் கிட்டக் கேட்குது. சனம் விழுந்தடிச்சு ஓடுதுகள். ஆமிக்காரங்கள் ஏதோ கத்திக் கதைக்கிற சத்தம் கூடக் கேக்குது. வாகனங்களின்ர உறுமலும் கேட்குது. சனங்கள் என்னையும் கிழவனையும் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு போகினம்.

தான் ஏலாமல் போச்சு. கடைசியா நாய் நரியள் தான்...'

'ஐயோ... நினைச்சால் எனக்குப் பைத்தியம் தான் பிடிக்குது'

'நான் ஏன் இங்க வந்தன். நான் சுயநலக்காரன், எனக்கு என்ர உயிர்தான் பெரிசாப்போச்சுது.... சீ.... நான் விசரன்...'
'நான் விசரன்...'
என் கால்கள் வலியெடுக்கின்றன. நான் நடக்கிறேன்.
நடந்துகொண்டே இருக்கிறேன்.

---

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

(அரசு அதிகாரத்தி......)

02. அதனை நிர்வாகிக்கும் கூட்டு உரிமையாளர்களாகத் தொழிலாளர்கள் மாற்றப்படவேண்டும்.
03. பெருந்தோட்ட உற்பத்திகளின் 30 - 50 சத வீதம் மலையக சமூக வீடமைப்பு நிதியத்திற்கு மாற்றப்படவேண்டும்.
04. அரசியல் கட்சி தலையீடுகளற்ற சுயாதீனமான பெருந்தோட்டக் காணி, வீட்டுவசதி அதிகார சபையொன்று தாபிக்கப்பட வேண்டும்.
05. காணி வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்காக குறுங்கால, நீண்டகால வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவேண்டும்.

### குறுங்கால வேலைத்திட்டங்கள்

01. அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி, வீட்டு வசதி ஏற்பாடுகள் சட்டத்தை முன்வைத்தல்.
02. ஏறக்குறைய 50000 தனிவீடுகள், இரட்டைவீடுகள், மாடிவீடுகளை உடனடி உடமையாக்கி கெசட் பிர-கடனம் ஒன்றை வெளியிடச் செய்தல்
03. 100 நாள் வேலைத்திட்டத்தில் பெருந்தோட்ட சமூகத்தின் காணி, வீட்டு வசதிகள் அதிகார சபையொன்றை தாபித்தல்.
04. லயன் குடியிருப்புக்கள், குடியிருப்பின் பராமரிப்பிலுள்ள விவசாய நிலங்கள், புல் நிலங்கள், கால் நடை வளர்ப்பிடங்களுக்கான உரிமையை பிரகடனப்படுத்தல்.
05. அரசு மற்றும் பாராளுமன்றம் என்பவற்றின் காண்காணிப்பில் இவற்றை நிறைவு செய்வதற்கான ஒழுங்குபடுத்தல் செயலணி ஒன்றை அமைத்தல்.

### நீண்ட கால வேலைத்திட்டம்

எதிர்வரும் 10 ஆண்டுகளில் மலையக மக்களினது காணி வீடமைப்பு திட்டங்களை நிறைவு செய்வதற்கான ஏற்படாக இது அமைதல் வேண்டும்.

01. பெருந்தோட்ட காணி மீதான உடமை மாற்ற செயன்முறையொன்றை முன்னெடுத்தல்
02. தற்போதுள்ள குருங்கால ஏற்பாடுகளை பேண்தகு இலக்குகளை நோக்கி முன்னகர்த்துதல்.
03. ஆறு இலட்சம் மலையக குடும்பங்களுக்கு காணியுடமை வழங்குதல், இக்காணிகள் சட்டபூர்வமாக கைமாற்றவோவிற்கவோ முடியாததாகவும், கடன் வசதிகளுக்கான ஈட்டாணை பெறக் கூடியதாகவும் அமைவதனை உறுதிப்படுத்தல்.
04. பெருந்தோட்ட வீடமைப்பு நம்பிக்கை நிதியமொன்றை தாபித்தல்.
05. பெருந்தோட்டங்களுக்கு வெளியே வாழும் மலையக மக்களின் காணி வீட்டுரிமையை உறுதிசெய்தல்.
06. தனியார் தோட்டங்களில் வசிக்கும் மலையக மக்களின் காணி, வீட்டுரிமையை உறுதிசெய்தல்.

---

(15 ஆம் பக்க தொடர்ச்சி)

(குடிநீர்த் தாங்கியில்......)

என்று நீங்கள் கூறுவீர்களா? என்று இளைஞர்களைப் பார்த்து கொதித்தெழுந்தார். பதில் கேள்வி கேட்டமை அங்கு நின்ற பலருக்கும் கோபத்தை வரவழைத்தது. கழிவுஒயில் பாதிப்புத் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் ஏன் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகிறார்? என அங்கு நின்ற பொதுமக்கள் சிலர் அங்கலாய்த்தமையைக் காணமுடிந்தது.

கடந்த சனிக்கிழமை குடிநீர்த் தாங்கியில் நஞ்சுகலக்கப்பட்டமைக்கு எதிராகத் தூயநீருக்கான பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பாடசாலையிலிருந்து சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம் வரையும் மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது நம்தேசம்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல:96, கிருல வீதி, கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635 பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: peesl@peesl.lk இணையத்தளம்: www.pccsl.lk

# நூல் அறிமுகம்

## குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே

ஆசிரியர் – டொக்டர் ஹேய்ம் ஜி இனோட்
தமிழில் – எஸ்.கே.விக்னேஸ்வரன்
வெளியீடு - மூன்றாவது மனிதன் பதிப்பகம்
விலை - ரூபா 200.00




"குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே" என டாக்டர் ஹேய்ம். ஜி. இனோட் எழுதிய நூலை எஸ். கே விக்னேஸ்வரன் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றார். குழந்தைகளுக்கான உளவியல் நூல் தமிழில் இது போன்று இதுவரை வரவில்லை எனலாம்.

குழந்தை வளர்ப்பை, பேணுகையை ஒரு கல்வியை, உளவியல் அனுபவமாகத்தராத, மிக அக்கறையுடன் பார்க்கப்பட வேண்டிய விடயமாகக் கருதாத தமிழ்ச் சூழலில் இந்நூல் மிகுந்த முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதிகாரங்களைத் தகர்த்து குழந்தைகளும், பெற்றோர்களும் அகத்தாலும் புறத்தாலும் நெருங்கி வருவதற்கு இந்நூல் துணைபுரிகின்றது. எமது பாரம்பரியமான வளர்ப்பு முறைகளைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. தண்டனை வழங்கும்முறையைநிராகரிக்கின்றது. ஒரு சமத்துவமான ஜனநாயக நெறிமுறையை சிபார்சு செய்கின்றது.

குழந்தைகளுடன் உரையாடுதல், பாராட்டுதலும் விமர்சித்தலும் புதிய வழிமுறைகள், சுய தோல்வியைத் தரக்கூடிய மாதிரிகளைத் தவிர்த்தல், பொறுப்புணர்வும் சுதந்திரமும், கட்டுப்பாட்டொழுங்கும் அனுமதிக்கக்கூடிய அளவும் அதன் எல்லையும், குழந்தைகளின் வாழ்வில் ஒரு நாள், பொறாமை, குழந்தைகளின் பரபரப்புக்கான சில ஏதுக்கள், பாலியற் கல்வி, பாலியற் பாத்திரமும் சமூகச் செயற்பாடும், நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர் என 12 உபதலைப்புக்களில் இந்நூல் வெளிவந்திருக்கின்றது.

குழந்தைகளைப் பாராட்டுதல் அல்லது புகழுதல் பற்றிக் கூறும்போது "புகழ்ச்சி எப்போதும் முயற்சியையும் செயலையும் பற்றியதாக இருக்கவேண்டுமே தவிர குழந்தையின் இயல்பு குறித்ததாகவோ, அதன் ஆளுமை குறித்ததாகவோ இருக்கக்கூடாது." என்கின்றார். "புகழ்ச்சி வார்த்தை குழந்தைகளுக்கு அதன் செயலைக் கண்ணாடியில் பார்ப்பது போன்ற ஒரு உண்மையான படத்தை ஏற்படுத்த வேண்டுமே ஒழிய, அதனது ஆளுமை குறித்த ஒரு தெளிவற்ற கற்பனைத் தன்மையை வழங்குவதாக இருக்கக்கூடாது" என்கிறார்.

மொத்தத்தில் குழந்தைகளுடனான உறவை உளவியல், ஜனநாயக, சமத்துவ அடிப்படையில் பார்க்க விரும்புகின்ற அனைவரும் வாசிக்க வேண்டிய முக்கியமான நூல் எனக் கூறலாம்

**சி.அ.யோதிலிங்கம்**

(11 ஆம் பக்க தொடர்ச்சி)

(19 ஆம் திருத்தச் சட்டத்திலிருந்து......)

தொலைக்காட்சி ஆகிய நிறுவனங்கள் அரச கட்டுப்பாடுகளின் அடிப்படையில் செயற்படுமானால் அதனை தேர்தல்கள் ஆணையாளரின்அதிகாரத்தின்கீழ்கொண்டுவருவது பற்றி 17ம் திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படுமேயானால் அதன் பின்னர் தேர்தல் முடியும் வரை அந்நிறுவன தலைவர்களினால் நிறுவன நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லமுடியாது. அதிகாரம் இல்லை.

இச்சட்டத்தை அரசாங்க ஊடகத்தின் மீது அமுல்படுத்துவதில் எவ்வித சிக்கல்களும் இல்லை. ஏனெனில் மக்களின் வரி வருமானத்தைக் கொண்டே இவ்வரச ஊடகங்கள் இயங்குகின்றன. 19ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் மீது இச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப் படவுள்ளது. இவ்வதிகாரம் மூலமாக தனி மனித சுதந்திரத்தை உறுதி செய்ய இயலாது. ஏதேனுமொரு நாளில் அரசாங்க சார்புடைய நபரொருவர் தேர்தல் ஆணைக்குழுவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டால் தனியார் ஊடகங்கள் தொடர்பாக அந்நபரிற்கான அதிகாரம் பல முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். எனவே இதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

அரச ஊடகங்கள் நேர்மையாகச் செயற்பட வேண்டும் அவ்வாறு செயற்படாதவிடத்து அதனைத் தடுப்பதற்கான ஓரளவான அதிகாரத்தையேனும் தேர்தல் ஆணையாளருக்கு வழங்க வேண்டும். எது எவ்வாறாயினும் அரச மற்றும் தனியார் ஊடகங்களை சம அளவில் அணுகுதல் தொடர்பாக முரண்பாடுகள் ஏற்படலாம். ஏனெனில் இலங்கையில் அரசாங்க ஊடகமானது பொது மக்களின் பணத்தைக் கொண்டு இயங்குவதனால் அவ்வூடகம் தொடர்பாகக் கடுமையான நடவடிக்கைகளை ஆணைக்குழு எடுக்கலாம். இவ்வாதத்தை இப்படியே தனியார் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் முன்வைத்து உரிய நடவடிக்கைகளைச் சரிவர முன்னெடுப்பது கடினமாக இருக்கும்.

19ம் திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில விடயங்கள் தொடர்பாக உரிய காலத்தில் கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அது தொடர்பில் உரிய அவதானத்தைச் செலுத்தவேண்டும். மக்கள் இது தொடர்பாக சமூகத்தில் கலந்தாலோசிக்க வேண்டும். 100 நாட்களிற்குள் இப்பிரேரணையினை நிறைவேற்றி தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டுமென்ற கோரிக்கையினை நான் ஒரு போதும் ஆதரிக்கத் தயாரில்லை. ●

(17 ஆம் பக்க தொடர்ச்சி)

(அழிக்கப்பட்ட கிராமம்....)

இருந்தனர். இராணுவத்தினர் வெளியேறிய பின் வைத்தியசாலை, ஓய்வு விடுதி, பிரதேச செயலகம், தொலைத்தொடர்பு நிலையம் என்பனவும் வீடுகளும் விமானக் குண்டுத்தாக்குதலின் மூலம் தரைமட்டமாக்கப்பட்டன. இதனால் வாகரைக் கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது. அரச கட்டிடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளும் முற்றாகச் சேதமாக்கப்பட்டன. இதனால் வாகரை சுடுகாடாக மாறியது.

இந்த நிலையில்தான் புலிகளின் கரும்புலி மேஜர் ரெட்ணாகரன் கருணாநாயக்கவைத் தீர்த்துக்கட்டுவதற்குத் திட்டமிட்டான். அதற்காக அவருடன் நெருங்கிப் பழகுவது போல் நடித்தான். அவரைத் தீர்த்துக்கட்டுவதற்கான திகதியையும் தீர்மானித்துக் கொண்டான். 09.08.1999 ஆம் திகதி மாலை வேளை கருணாநாயக்க வாகரை முகாமின் பிரதான வாயில் பக்கம் அமைந்திருந்த வட்டக் கொட்டிலில் அமர்ந்திருந்து சில படையினருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நின்றிருந்த ரெட்ணாகரன் கருணாநாயக்கவிடம் ஏதோ கதைப்பது போல் நடித்துக் கொண்டு அருகில் நெருங்கியதும் திடீரென குண்டு வெடித்தது. அவ்விடத்திலேயே கருணாநாயக்க பலியானார். ரெட்ணாகரனின் உடல் சிதறிக்கிடந்தது. அருகில் நின்றிருந்த படையினரில் ஒரு சிலர் காயமடைந்தனர். ●

இத்தாக்குதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட நான்காவது கரும்புலித் தாக்குதல் மாத்திரமின்றி வாகரைப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாகும். இத்தாக்குதலை அடுத்து 04.05.2000 ஆம் திகதியுடன் வாகரை இராணுவ முகாம் முழுமையாக மூடப்பட்டது. இறுதிப்போர் இடம்பெற்றபோது வாகரை மீண்டும் அழிவுக்குள்ளானது.

(14 ஆம் பக்க தொடர்ச்சி)

(தேசிய அரசாங்கம்.....)

இவற்றை விட தமிழ் மக்களுக்கு தேசிய அரசாங்கம் பயன்களைத் தரக்கூடியதாக இன்னோர் கேள்வி எழுகின்றது. தமிழ் மக்களின் விவகாரம் ஆட்சி செய்யும் அரசாங்கத்துடன் மட்டும் தொடர்புடைய விவகாரமல்ல. அது இலங்கை அரசு உருவாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினை. அரச அதிகாரக் கட்டமைப்பை பன்மைத் தன்மை ஆக்குவதுடனும் அதில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக இணைவதனுடனும் தொடர்புடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினை தேசிய அரசாங்கத்தினால் நிறைவேறும் எனக் கூறமுடியாது. தேசிய அரசாங்கத்திற்குப் பின்னால் நிற்கும் மேற்குலக- இந்தியக் கூட்டும் நிர்ப்பந்தம் வந்தால் ஒழிய இது விடயத்தில் எந்த அழுத்தங்களையும் கொடுக்கப் போவதில்லை. அவற்றினுடைய கவனமெல்லாம் சீனாவின் செல்வாக்கினை அகற்றித் தமது செல்வாக்கை இலங்கைத் தீவில் நிலைநிறுத்துவதும், அதற்கேற்ற வகையில் தாம் உருவாக்கிய அரசினைப் பாதுகாப்பதும் தான்.


ஆனால் தமிழ் மக்கள் இலங்கை அரசிலிருந்து விலகிச்செல்லக்கூடாது என்பதற்காக போரின் விளைவுகளில் சில முன்னேற்றங்களைக் காட்டலாம். இராணுவத்தினர் கைப்பற்றிய காணிகள் சில விடுவிக்கப்படலாம். அபிவிருத்தித் திட்டங்கள் சிலவும் முன்னெடுக்கப்படலாம்.

இவையெல்லாம் புற்று நோய்க்கு மருத்துவம் செய்வதை விடுத்து அதனால் ஏற்படும் காய்ச்சலுக்கு மருத்துவம் செய்வதைப் போன்றதே! இவை பெரிய பயன்களைத் தமிழ் மக்களுக்கு கொடுக்கப் போவதில்லை. ●





கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குடும்பத்தின் ரூபா 500,000 நிதி உதவியுடன் போரினால்
பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் – விசுவமடு, தாளையடி


மாமனிதர் கிட்டிணன் சிவநேசனின் 7 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வும், நினைவுப் பேருரையும்
29.03.2015 அன்று பருத்தித்துறை சிவன்கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.





யாழ் .வசாவிளான் பிரதேசத்தில் தமது காணிகளைப் பார்வையிடச் செல்லும் மக்களும் அவர்களைத்
தடுத்து கம்பி வேலி அமைக்கும் படையினரும்





உள்ளக விசாரணையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் கிளியிலும், யாழிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள்.

**இது நம்தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.**
**வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 01.04.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.